
# கடல்



கல்விக்கொள்கை வேண்டி நிற்கும் மாற்றங்கள்

ஒருவருடைய ஆளுமை வளர்ச்சிக்கு
எதிராக இருக்கும் தடைக்கற்கள்

இருப்பிய உளவியலும் சிகிச்சை முறையும்

ஆசிரியர் கல்வியில் கட்டுருவாக்க அணுகுமுறை

நடைமுறை விருத்தி சார் உளவியலில்
பிள்ளை பற்றிய ஆய்வுகளும், கொள்கைகளும்

மாணவர்களது அடைவு விருத்தியில்
ஆசிரியர்களது பண்புத்தர விருத்தி

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும்
இடைநிலை வகுப்புக்களில் மொழித்திறன் விருத்தியும்

குழந்தைகள் கற்றல் உடலியல், உளவியல்
பிரச்சினைகள் ஓர் நோக்கு

மனநலவியல்

தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு விருத்தியில்
உளவியல் கோட்பாடுகளில் செல்வாக்கு

சமூகவிரோத ஆளுமை ஓர் உளவியல் நோக்கு

சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகம்

வன்போக்கு நடத்தைக்கான காரணங்கள்

அல்பிரட் அட்லர்

மனிதனது பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி
செய்தலின் அடிப்படையில் மாஸ்லோவின் கொள்கை

## கல்வியியல் - உளவியல் - சமூகவியல் ஏடு

ஆனி - ஆவணி 2012

80/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்

**கல்வியியல் - உளவியல் - சமூகவியல் ஏடு**

**காலாண்டிதழ்**

**இதழ் 01**

**யூன் - ஆகஸ்ட் 2012**

**பிரதம ஆசிரியர்**

கலாமணி பரணீதரன்

**வள அறிஞர் குழு**

அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின்

கலாநிதி க.கஜவிந்தன்

பா.தனபாலன்

கு.கௌதமன்

கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**

கலை அகம்

சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி

அல்வாய் வடமேற்கு

அல்வாய்

இலங்கை.

**தொலைபேசி :** 0775991949

0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**இதழ் வடிவமைப்பு**

க.பரணீதரன்

**அச்சுப் பதிப்பு**

மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்

நல்லூர்

**அட்டைப்படம்**

நன்றி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்

இதழ் 01

காலாண்டிதழ்

ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார் - திருக்குறள்

யூன் – ஆகஸ்ட் 2012


## கரையிலாக் கடல்

கல்வி, கரையிலாத கடல் என்பர். இன்றைய கல்விச் சூழல் கல்விக் கடலின் கரையை அகலிக்கச் செய்துள்ளது. உடைப்பெடுத்த வெள்ளம் போல அறிவு பிரவாகித்துக் கொண்டிருக்கும் இச் சூழலில் உலகத்தவர் ஒவ்வொருவருமே அறிவார்ந்த நிலையில் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள வேண்டியவ ராய் உளர்.

அறிவீனம் தான் சகல தீமை களுக்கும் கேடுகளுக்கும் காரணம். "உலகத்துடன் ஒட்ட ஒழுகுதல்" என்பது அறிவின் விரிவாக்கத்தை உட்பொரு ளாய்ச் சுட்டுவது. அறிவின் விரிவில் மானிட வர்க்கம் தனது வசதிகளைப் பெருக்கிக் கொண்டாலும், யந்திரப் பாங் கான வாழ்க்கை ஓட்டத்தில் வாழ்க்கையின் சிக்கற் தன்மையும் சவால்களும் அதிகரித்தி ருப்பதோடு முடிச்சவிழ்க்க முடியாத கட்டுக் களும் பெருக்கமடைந்துள்ளன.

ஒரு சில வருடங்களிலேயே இரட்டிப்பாகிக் கொண்டு செல்லும் அறிவுத் தொகுதி (body of knowledge) பழையன கழித்து, புதியன புகுத்தி, தன்னைப் புதுப்பித்துக் கொண்டிருக்கும் நிலையில், ஆசிரியர்களும் கல்வியாளர்களும் மாணவர்களும் புதிய அறிவின் தேடலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய வராகின்றனர். எம்மவரின் கல்விக்கான தேடலில், ஒரு சிறு துளியாக இன்று "கடல்" எனும் கல்வியியல் – உளவியல் – சமூக வியல் காலாண்டிதழ் வெளிவருகின்றது. சிறுதுளிகளின் சேகரத்தில் கடலின் உருவாக்கம் என்பது இக்காலாண்டி தழுக்கு அனைவரும் தரும் ஒத்துழைப்பி லேயே தங்கியுள்ளது.

– க.பரணீதரன்

## கடலின் உள்ளே .......


1. கல்விக்கொள்கை வேண்டி நிற்கும் மாற்றங்கள் - அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின்
2. ஒருவருடைய ஆளுமை வளர்ச்சிக்கு எதிராக இருக்கும் தடைக்கற்கள் - அருட்திரு S.J.இராசநாயகம்
3. இருப்பிய உளவியலும் சிகிச்சை முறையும் - பேராசிரியர் சபா.ஜெயராசா
4. ஆசிரியர் கல்வியில் கட்டுருவாக்க அணுகுமுறை - பேராசிரியர் மா.கருணாநிதி
5. நடைமுறை விருத்திசார் உளவியலில் பிள்ளை பற்றிய ஆய்வுகளும் கொள்கைகளும் - பா.தனபாலன்
6. மாணவர்களது அடைவு விருத்தியில் ஆசிரியர்களது பண்புத்தர விருத்தி - க.பாஸ்கரன்
7. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் இடைநிலை வகுப்புக்களில் மொழித்திறன் விருத்தியும் - அ.பௌநந்தி
8. குழந்தைகள் கற்றல் உடலியல், உளவியல் பிரச்சினைகள் ஓர் நோக்கு - கலாநிதி க.கஜவிந்தன்
9. மனநலவியல் - பா.தனபாலன்
10. "தலைமைத்துவம்" என்ற எண்ணக்கரு விருத்தியில் உளவியல் கோட்பாடுகளின் செல்வாக்கு - க.கணேசநாதன்
11. சமூக விரோத ஆளுமை ஓர் உளவியல் நோக்கு - அபிராமி ராஜ்குமார்
12. சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகம் - கு.கௌதமன்
13. இன்றைய காலத்தில் மனிதர்களிடையே அதிகரித்துச் செல்லும் வன்போக்கு நடத்தைக்கான காரணங்கள் - வி.மேனகா
14. அல்பிரட் அட்லர் - அர்ச்சுனன்
15. மனிதனது பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்தலின் அடிப்படையில் மாஸ்லோவின் கொள்கை - க.பரணீதரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கொள்கை வேண்டி நிற்கும் மாற்றங்கள்

சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகள் பெருகிக்கொண்டே செல்கின்றன. கல்வி வீழ்ச்சி, சமூகச்சீரழிவுகள், குற்றச் செயல் அதிகரிப்பு, பாலியல் பிரச்சினைகள், மது மற்றும் போதைப்பொருட்களுக்கு அடிமையாதல், தாம் புரியும் பணியில் அர்ப்பணமின்மை, சுயநலப்போக்கு என அடுக்கிக்கொண்டே போகலாம். இவற்றுக்கு என்ன தீர்வு என்பது பலரது ஆதங்கமாக உள்ளது. இவை அனைத்திற்கும் தீர்வுகள் தேடப்படவேண்டும் இவற்றைக் குறைக்க முயற்சிகள் பல எடுக்கப்படவேண்டும்.

குடும்ப உருவாக்கம், சமயநிறுவன உருவாக்கம் என்பனவற்றுக்கு அடுத்ததாக விளங்குபவை கல்வி நிறுவனங்களே. ஆளுமை உருவாக்தில் இந்நிறுவனங்களின் செல்வாக்கு மிகமிக அதிகமானது. எனவே கல்விக்கொள்கையில் ஏற்படும் மாற்றங்கள் புதிய பாடநெறிகளை உருவாக்கும். புதிய பாடநெறிகள் புதிய விழுமியங்கள் மற்றும் மனப்பாங்குகளை உருவாக்கும். எனவே கல்வித்துறையில் ஏற்படவேண்டிய மாற்றங்கள் சிலவற்றை இங்கு முன்வைக்கின்றேன்

## உயர்நிலை மதிப்பீடுகள்

### (1) ஆன்மீகம்:

சமயம் கூறும் நல்ல உண்மைகளைத் தன் சொந்த வாழ்விலும் சமூகவாழ்விலும் கடைப்பிடித்து வாழ்வதே ஆன்மீகம். கற்பதன் நோக்கம் இறைவனைத் தொழுவது என்று வள்ளுவர் கூறியது பல ஆழமான உண்மைகளை உள்ளடக்கிய விடயம். "தெய்வ பயமே ஞானத்தின் தொடக்கம்" என்பது பைபிளின் ஞானநூல்களில் காணப்படும் அடிப்படைக் கருத்தாகும். உண்மை அறிவு கடவுளுக்குப் பயந்து நடப்பவனுக்கே கிடைக்கும் என்பதே இதன் அர்த்தம். கடவுளுக்குப் பயப்படாதவனிடம் பண்புகளோ, நன்னெறிகளோ, சமூகநல மனப்பாங்கோ, பிறரன்போ கிடையாது. எனவே சமயக் கல்வி அர்த்தமுள்ள முறையில் கற்பிக்கப்படுவதற்கான கல்விக்கொள்கை, கற்பிக்கும் முறைகள் என்பன உருவாக்கப்படவேண்டும். அர்த்தமுள்ளமுறையில் கற்பிப்பது என்பது மாணவர்கள் தாம் கற்பிக்கும் பாடவிடயத்தைத் தம் சொந்த வாழ்வில் எவ்வாறு கடைப்பிடிக்கலாம், அதனைக் கடைப்பிடிக்கும்போது ஏற்படும் தடைகள் என்ன மற்றும் அத்தகைய தடைகளை நீக்க மேற்கொள்ளும் முறைகள் எவை என்பதைக் கண்டறியச் செய்வதாக அமையவேண்டும். பாடசாலைகளில் சமயக் கல்விக்கு வழங்கப்படும் நேரம் அதிகரிக்கப்பட்டு முறையாக அப்பாடம் கற்பிக்குமாறு பயிற்சி வழங்கப்பட்டால் சமுதாயத்தின் பல பிரச்சினைகள் குறைவதற்கான வாய்ப்புகளே அதிகம். மேலும் இறைவழிபாட்டு நேரங்கள், ஆலயங்களில் சமயக்கல்வி வகுப்புகள் இடம்நேரங்களில் பாடநெறிகள், பரீட்சைகள், ரீயுசன் வகுப்புகளை நிறுத்தச் சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். கல்விக்கூடங்களில் கற்றவர்களே இறைவனை அவமதித்து இவ்வாறு நடாத்துவது இறைவனுக்கும் கல்விக்கும் கரிபூசும் முயற்சிகள், நிச்சயம் நிறுத்தப்படவேண்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2) நன்னெறி:**

இறைவனுக்குப் பணிந்து நடக்காத எவரும் மனச்சாட்சிக்குப் பயந்து நடக்கமாட்டார்கள். மனச்சாட்சிக்கும் சமூக நலனுக்கும் தன்னலனுக்கும் கட்டுப்பட்டு நடக்க வைக்கவல்ல புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். கற்காத பாமரர்களல்ல, கற்றவர்களே இன்று சமூகத்தைச் சூறையாடு கின்றனர் என்பது பரவலான கருத்து. கற்றவர் மனச்சாட்சியோடும், நன்னெறியோடும் பண்போடும் நடப்பார் என்பதே பலரின் எதிர்பார்ப்பு. இவர்கள் கடமையுணர்வோடும் மாணவர் நலனில் அக்கறையோடும் நடப்பார்கள் என்பது இன்னொரு எதிர்பார்ப்பு. உண்மைநிலை என்னவென்பது நான் விளக்க வேண்டிய ஒன்றல்ல. எனவே நன்னெறியை உருவாக்கவல்ல பாடங்கள் எல்லாத்துறைப் பாடநெறியிலும் புகுத்தப்பட வேண்டும். அத்தோடு கல்வியியற்கல்லூரிப் பயிற்சி அளித்தலும் இதனை உள்ளடக்க ஆவன செய்யப்பட வேண்டும்.

**(3) விழுமியக் கல்வி:**

மதிப்பீட்டுக் கல்வி நல்ல அறிமுகமாக இருந்தாலும், அதைக் கற்கின்ற மாணவர்கள் இவற்றின் ஒளியில் தன் வாழ்வை எடைபோட்டு எவற்றில் மேலும் தொடர்ந்து வளரவேண்டும், எவற்றை நிறுத்த அல்லது கட்டுப்படுத்த வேண்டும் என்றும் உணரவைக்கவல்ல கல்விமுறை வேண்டும். மாணவர்கள் விழுமியங்களைத் தெரிந் திருப்பது என்பது அவற்றை கடைப்பிடிக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதில்லை. கற்பிக்கப் படுகின்றவற்றை அவர்கள் தாமாகவே உள்வாங்கி தம் சொந்த வாழ்வில் கடைப்பிடிப்பார்கள் என்ற ஊகம் தவறானது. எனவே சிறந்த ஆளுமைப் பண்புகளை உருவாக்க வல்ல கல்வி அவசியமானது. சமயபாடம், மெய்யியல், உளவியல், விழுமியக்கல்வி.... போன்றவை பல நல்ல விழுமியங்களைக் கற்றுக் கொடுத்தாலும் அவைகடைப்பிடிக்கப்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்வதில்லை. விழுமியக் கல்வி யானது நேர்மை, உண்மை, நன்றிகாட்டல், பொறுப்புணர்ச்சி, புரிந்துணர்வு, இரக்கம், ..... போன்றபல விழுமியங்களைக் கற்றுக்கொடுப்பதாக அமைய வேண்டும்.

## சமூகநலப் பண்புகள்

**(1) சமூக நல மனப்பாங்கை உருவாக்கல்:**

சமூக அங்கத்தவர்களில் பெரும்பாலானோர் சமூகநலன் கொண்டு செயற்படின் சமுதாயத்தில் நிலை எத்தகைய மேன்மையாக இருக்கும்! ஏழைகள், பெற்றோரற்றோர், துணைவரை இழந்தோர், அங்கப் பாதிப்புற்றோர் போன்றோர் மட்டில் இரக்கம் காட்டும் இதயம் உருவாக்கு வதற்குப் பங்களிப்புச் செய்யும் கல்வி அவசிய மானது. சமூகநலச் செயற்திட்டங்களில் இறங்கிச் செயற்பட வைக்கும் செயல்முறைக் கல்விமுறையாக இது அமையவேண்டும். சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், மாற்றுத்திறனாளர் பள்ளிகள், பார்வை-செவிப்புலன் பாதிப்புற்றோர் பள்ளிகள், மறியல் சாலை, வைத்தியசாலையில் நோயாளர் போன்றோரைச் சந்தித்து உறவாடும் வாய்ப் பளித்தல். வீதியமைத்தல், வீதி சுத்தம் பேணல், கழிப்பகங்கள் சுத்தம் செய்தல் போன்றவற்றிற்குப் பங்களிப்புச் செய்ய உதவும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நடைமுறைக் கல்விக்கு மாணவர்களை அறிமுகப்படுத்தக் கல்விக் கொள்ளை அவசியம்.

**(2) சூழலை சிறப்பாக பேணல்:**

தாம் வாழுகின்ற மற்றும் தொழில் புரிகின்ற சுழலையும் அழகாக, துப்பரவாக, ஒழுங்காக வைத்திருக்கக் கற்றுக்கொடுக்கும் முறைமை கல்வியில் புகுத்தப்பட வேண்டும். இக்கல்வி, குப்பைகளை உரிய இடத்தில் போடுதல், உரிய நேரத்தில் அகற்றுதல், இவற்றை அகற்றும்போது பிறரின் அசௌகரியங்களைப் புரிந்து நடத்தல் என்பவும் புகுத்தப்படவேண்டும்.

**(3) பொதுப் பொருட்களைப் பேணுதல்:**

பொதுப்பொருட்கள் மக்கள் செலுத்தும் வரிப்பணத்திலேயே வாங்கப்படுபவை அல்லது கட்டப்படுபவை. இவை நாம் நலமாக வாழ்வதற்கு இறைவன் கொடுத்த கொடை என்பதை உணரச் செய்யும் பாடத்திட்டங்கள் வேண்டும். பொதுப் பொருட்களைஅடித்து நொருக்குதல், எரித்தல், நீர், மின்சாரம் என்பனவற்றை வீண்விரயம் செய்வதைத் தடுக்கும் உணர்வை ஏற்படுத்தவல்ல கல்வி மக்களுக்கு நலன் பயக்கும்.

## ஆளுமை முதிர்ச்சி


**(1) ஆளுமை மாற்றக் கல்வி:**

பலருக்குத் தாம் சிக்கிக்கொண்ட தீய பழக்கங்களிலிருந்து விடுபட வழி தெரிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறான பழக்கங்களைக் கட்டுப்படுத்தும் அறிவும் இருப்பதில்லை. இவை அந்நபருக்கும் சமூக அங்கத்தவருக்கும் தீங்கிழைப்பதாக அமைகின்றது. எனவே ஒருவர் தீய பழக்கங்களில் ஈடுபடாதவாறு தம்மைக் காத்துக்கொள்ளவும், அவற்றிலிருந்து விடுபடும் முறைகளை அறியவும் வழிவகுக்கும் கல்வி கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறே தவறான பாதையில் செல்வோரைத் திருத்தும் முறைகளையும் கற்றுக்கொடுக்கும் கல்வியும் அவசியமான ஒன்றாகின்றது.



**(2) உணர்ச்சிப் பக்குவம்:**

கல்விக்கூடங்களிலும் சமூகத்திலும் இடம் பெறும் பல பிரச்சினைகளுக்குக் காரணமாயிருக்கும் விடயங்களுள் ஒன்று அங்குள்ளவர்கள் தம் சொந்த உணர்ச்சிகளை ஆரோக்கியமாகக் கையாளத் தெரியாதிருப்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது. உணர்ச்சிப் பக்குவத்தை உருவாக்கும் கல்வி முறை அவசியமாகின்றது. கொலைகள், தற்கொலைகள் என்பவற்றிற்கு உணர்ச்சிப்பக்குவமின்மையே பெரும் காரணமாகின்றது. அவ்வாறே பல பாலியல் பிரச்சினைகளுக்கும் இதுவே காரணமாக அமைகின்றது.

## உறவு முதிர்ச்சி

**(1) ஆசிரியர்-மாணவர் புரிந்துணர்வு:**

இருசாராரும் ஒருவரையொருவர் புரிந்து உறவை வளர்க்க வைப்பதற்கான கல்விக்கொள்கை உருவாக்கப்பட வேண்டும். இதற்கென மாதத்தில் ஒரு தடவை ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் ஒதுக்க ஆவன செய்ய வேண்டும். இவ்வாறே வகுப்பாசியர் தன் வகுப்பு மாணவர்களுடன் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு ஒழுங்கு செய்ய நிறுவனரீதியான வாய்ப்பை வழங்கக் கல்விக்கொள்கை வழிவகுக்க வேண்டும்.

**(2) உறவுத்திறன்கள்:**

அவ்வாறே உறவுகளில் ஏற்படும் பிரச்சினைகளை வளர்ச்சி தரும் முறையில் கையாள்வதற்குப் பயிற்சி அளிக்கும் கல்வி அவசியம். உறவுப் பிரச்சினைகளைப் பொருத்தமாகக் கையாளத் தெரியாததால் ஏற்படும் பிரச்சினைகள் சொல்லிடங்கா. தற்கொலைக்கு இதுவும் ஒரு காரணம்.

**(3) நாகரீக நடத்தைகளைக் கற்றுக்கொடுத்தல்:**

உயர்கல்வி நிறுவன மாணவர்கள் சிலரின் வார்த்தைப் பிரயோகங்கள், கழிப்பறை ஓவியங்கள் போன்றவற்றைப் பொதுமக்கள் அறிந்தால் அதிர்ச்சியில் மயங்கிவிழுவர். சமூகத்தில் எத்தகைய நடத்தைகள் நாகரீகமானவை, எவை அநாகரீகமானவை என்பதைச் சொல்லிக் கொடுக்கும் கல்விமுறை தேவையாக இன்று இருக்கின்றது. பெற்றோருக்கே இவை தெரியாத விடயமாக அமையும் போது தம் பிள்ளைகளுக்கு எப்படித்தான் சொல்லிக்கொடுக்க முடியும். எனவே இவை பாடத் திட்டத்தில் எங்கோ உட்சொருகப்படுவது முக்கியமானது.

## பாலியல் முதிர்ச்சி

❖ **பாலியல் கல்வி:**

பாலுறுப்புகளின் செயற்பாடுகள் பற்றியோ கருத்தடைமுறைகள் பற்றியோ கற்றுக்கொடுப்பது சமூகத்தை நல்வழிப்படுத்த உதவப்போவதில்லை. மாறாகக் கேடே விளைவிக்கின்றது என்பதே மேற்குநாடுகள் கற்றுத் தரும் அனுபவம். ஒருவர் தன் உடலில் ஏற்படும் பாலியல் மாற்றங்களையும் தன்னுள் ஏற்படும் பாலியல் உணர்ச்சியையும் எவ்வாறு ஆரோக்கியமாகக் கையாள்வது என்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக்கொடுக்கும் கல்வியே இன்றைய தேவை. அத்தோடு எதிர்ப்பாலாரோடு முதிர்ச்சியான முறையில் நடந்துகொள்வதற்குக் கற்றுக் கொடுப்பதாகவும் பாலியல் கல்வி அமைய வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே காணப்படுகின்ற உளவியல் ரீதியான வேறுபாடுகளையும் அதற்கேற்ப எவ்வாறு பரஸ்பரம் புரிந்து நடப்பது என்பதையும் எடுத்தியம்பும் பாலியல் கல்வியே பயனுள்ள கல்வியாக அமையும். பாலியல் விடயத்தில் மனக்கட்டுப்பாட்டோடு நடத்தல், கற்போடு வாழுதல் போன்ற உயர்ந்த பண்புகளைக் கட்டியெழுப்ப வழிசெய்யும் கல்வியாக இது அமைய வேண்டும். நீலப்படங்கள் பார்ப்பதன் விளைவுகளை விளக்கு தலும் இதில் உள்ளடக்கப்பட வேண்டும். பாலியல் நோய்கள்பற்றிய விழிப்புணர்வை வழங்கு வதாகவும் இக்கல்வி அமைவது அவசியம்.

## திறன்கள் வளர்த்தல்

### (1) பாடம்கற்கும் மனப்பாங்கு:

நல்லவர்கள் சிறந்தவர்களிடமிருந்து நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்வதும், தவறான வாழ்க்கை வாழ்வோரைப் பார்த்து தாம் எப்படி வாழக்கூடாது என்றும் கற்றுக்கொடுக்க உதவும் கல்வி உட்புகுத்தப்பட வேண்டும்.

### (2) விளைவுச் சிந்தனைகளை உருவாக்குதல்:

பலர் தாம் செய்யப்போகும் செயலின் அல்லது தாம் எடுக்கவுள்ள தீர்மானத்தின் விளைவுகளைச் சிந்தித்து அறியும் ஒரு சிந்தனை முறைமையை கற்றுக்கொடுப்பது அவசியமாகின்றது. இத்தகைய சிந்தனை தன் நடத்தையின் பல விளைவுகளைக் கருத்தில் எடுக்கக் கற்றுக்கொடுப்பதாக அமைய வேண்டும். நான் செய்யும் செயல் என் வாழ்வில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும்? என் செயலால் என் குடும்பத்தினருக்கு, உறவினர், நண்பர்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் எவை? என் ஊருக்கு, நாட்டுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் எவை? என்பன கற்றுக்கொடுக்கப்படவேண்டிய திறன்கள். தாம் வெற்றி பெற நினைத்து ஊக்கமருந்து உட்கொண்டு பெறும் வெற்றிச் சின்னம் பறிக்கப்படும்போது விளையாட்டு வீரன், அவரது நாடு, குடும்பம்..... போன்றவற்றில் ஏற்படுத்தும் விளைவுகளைச் சிந்தித்தால் இத்தேவை தெளிவாக விளங்கும். “உனக்கு யோசிச்சு நடக்கத் தெரியாதோ? “என்ன கதைக்கிறாய் என்பதை யோசிச்சுக்கதை” என்பன போன்ற வார்த்தைகள் விளைவுச் சிந்தனை உருவாக்கத்தின் அவசியத்தையே எடுத்துக் காட்டும்.

### (3) புத்தாக்கச் சிந்தனைகளை வளர்த்தல்:

கற்றுக்கொடுப்பதைப் பாடமாக்கிப் பரீட்சையின்போது “சத்தி எடுக்கின்ற” முறைகொண்ட கல்விமுறையில் நிச்சயம் மாற்றம் தேவை. “அரசாங்கம் இனிமேல் படித்தவர்களுக்கு வேலை வழங்குவதை நிறுத்தப்போகின்றதென்றால், உங்களுக்கான தொழில்பற்றி என்னென்ன முயற்சி களை மேற்கொள்வீர்கள்?” என்று அவர்களது சிந்தனையைக் கிளறுவது நல்லது. கல்விக் காலத்திலே கருத்துகள், பொருள் உருவாக்கம்... போன்றவற்றில் புத்தாக்கத் திறனைப் பயன்படுத்த உதவும் கல்விதேவை. சமூகப்பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகளை முன்வைக்கும் முறைகள்கொண்ட கல்வித்திட்டம் வேண்டும். சிங்கப்பூர், யப்பான் போன்ற நாடுகளின் தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வது புத்தாக்கத்திறன் கல்வி முறைகளேயாகும்.

### (4) சுயசிந்தனைகளை வளர்த்தல்:

சுயத்தையும், சமூகத்தையும், உலகையும் பாதிக்கின்ற விடயங்களுக்குத் தீர்வுகாணவைக்கும் சுயசிந்தனைகளை வளர்ப்பதற்குக் கல்வி வாய்ப் பளிக்க வேண்டும். நலமான, மகிழ்ச்சிநிறைந்த சமுதாயத்தைப் படைப்பதற்குப் பங்களிப்புச் செய்யும் மனிதர்களாக மாணவர்களை உருவாக்க உதவ வேண்டும். பிறரைப் பார்த்துப் பிரதிசெய்யும் சிந்தனை களை வளர்ப்பதை விடுத்து சுய சிந்தனையை வளர்ப்பதற்கு உதவும் முறைகளை அறிமுகம் செய்ய வேண்டும். எந்த விடயத்திலும் யதார்த்தமான சுயசிந்தனையை வளர்ப்பதற்குப் பயிற்சி அளிப்பதான கல்விநிலை உருவாக வேண்டும்.

***கல்வி உளவியல்***

**தனியன் ஒன்றின் பிறப்பில் இருந்து முதுமை வரையிலான கற்றல் அனுபவங்களை விபரிப்பதும் விளக்கம் கொடுப்பதுமான உளவியலே கல்வி உளவியல் எனப்படும்.**

–Crow & Crow



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்திரு S.J.இராஜநாயகம்

# ஒருவருடைய ஆளுமை வளர்ச்சிக்கு எதிராக இருக்கும் தடைக்கற்கள்



## ஒருவருடைய சுயத்தை தோல்வியடையச் செய்யும் மனக்கோப்புகள் (Mind set)

மனக்கோப்புகள் எமது உள்ளத்தில் நிலையானவைகளாகின்றன. இவைகள் அனுமானங்கள், மனப்பாங்குகள், நம்பிக்கைகள், மதிப்பீடுகள், சார்புநிலைகள், மறுக்க முடியாத உண்மைகள், விருப்புக்கள், சட்டங்கள், மனநிலைச்சார்பு, கருத்து நோக்குகள், சுயம் அல்லது மற்றவர் உலகத்தைப் பற்றி பரீட்சித்துப் பார்க்காத (புலக்காட்சிகள்) அகக் கருத்துக்கள், முற்சார்பான எண்ணங்கள், ஆக்கபூர்வமற்ற, பிரச்சினையான மனக்கோப்புக்கள் என்பன வெளி நடத்தைகளை உண்டாக்குகின்றன அல்லது எமது நடத்தைகளில் கசிகின்றன. இங்கு ஒருவர் தன்னை வரையறுக்கும் மனக்கோப்புக்களை உடைத்தெறிந்து, தன்னை வளரவைக்கக் கூடிய, சுதந்திரமாக பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களை விருத்தி செய்து புதிய நோக்குகளாக மாற்றவேண்டும்.

## மனக்கோப்புகளின் சில உதாரணங்கள்

### முற்கற்பிதங்கள்

ஒரு இனம் மிகவும் கொடூரமானது என்பது, "யூதர்கள் கொடூரமான வியாபாரிகள்". இங்கு ஒருவர் "தனது பிரச்சினைகள் தனது மனப்போக்குகளினால் ஏற்படுகின்றது" என்ற தவறை நோக்குவது நல்லது. தனது நடத்தைகளை ஆராய்ந்து பார்க்கத் தனக்குச் சவால் விடுவது இங்கு பொருத்தமாகும்.

## சுயத்தை வரையறுக்கும் நம்பிக்கைகளும், அனுமானங்களும்

அல்பேட் எலிஸ் என்பவர் பகுத்தறிவு மனவெழுச்சி சார்ந்த நடத்தை சிகிச்சை REBT முறையை உருவாக்கினார். மனிதர்கள் கொண்டுள்ள பகுத்தறிவற்ற, சுயத்தைச் தோல்வியுறச் செய்கின்ற நம்பிக்கைகளுக்குச் சவால்விட வேண்டும் என்றார். உதாரணமாக கறுத்தப்பூனை, பல்லிச்சத்தம். இப்படியான இயங்க முடியாத நம்பிக்கைகள் வைத்திருக்கின்றவர்கள் தம்முடன் சுய உரையாடல் செய்வர்.

இப்படி சிந்திக்கின்றவர்கள் செயற்படமாட்டார்கள் என அல்பேர்ட் எலிஸ் சொல்கின்றார். சுய நம்பிக்கைகள் மனிதர்களை முட்டாள்த்தனமான மதிகெட்ட வேலைகளை செய்யத் தூண்டுகின்றது என sternberg (2002, 2003) கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) சுயத்தை மையமாகக் கொண்ட பொய்மை

தம்மைப் பற்றி எப்போதும் சிந்திப்பர். ஏதாவது திட்டமிடும்போது தமது நன்மைகளைக் கருத்தில் கொள்வர். மற்றவரைப் பற்றி கவலை கொள்ளார்.

(2) எல்லாம் தெரியும் என்ற பொய்மை

எல்லாவற்றையும் பற்றி எல்லாம் தெரியும் என்ற போக்கு.

(3) எல்லாம் என்னால் முடியுமென்ற பொய்மை

தாம் விரும்புவது எல்லாம் செய்ய முடியு மென நினைப்பது.

(4) எனக்கு ஒன்றும் நேராது என்ற பொய்மை

சொல்வதெல்லாவற்றிலுமிருந்து தப்பிக் கலாம் என நினைப்பது

இவைகள் குருட்டிடங்களாக இருப்பதை உணருதல் நல்லது.

### அக நடத்தைகளை சுயம் வரையறுத்தல்

சில சிந்திக்கும் முறைகள்தான் எமது நடத்தைகளாகின்றன. இவைகள் நம்மை செயற்பட, செயற்படாமல் இருக்கத் தூண்டுகின்றது. பகல் கனவு, செபம், சில விடயங்கள் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல், நம்பிக்கைகள், பிரச்சினையை இனம் காணுதல், சந்தர்ப்பங்களை மீள்பார்த்தல், தீர்மான மெடுத்தல், திட்டம் தீட்டுதல், தீர்ப்பிடுதல், ஊக்கிகள் உந்துதல்களை வினவுதல், தன்னையும் மற்றவர்களையும் ஏற்றல், ஏற்காது விடுதல், வியப்புறுதல், மதிப்பிடுதல், கற்பனை செய்தல், சிந்தித்தல், மனநிலை உருவாக்கம், தவிர்த்தல், மன்னித்தல், ஒத்திகை பார்த்தல் என்பன அகச்செயல்பாடுகள். இவைகள் ஒருவரின் அறிகைகளினால் ஏற்படும் நடத்தைகள். சுயத்தைக் கட்டுப்படுத்தல், தோல்வியுறச் செய்யும் நடத்தைகளை மாற்றி ஆக்கபூர்வ நடவடிக்கைகளைப் பேணுதல் பயன ளிக்கும். சுயத்தை வரையறுக்கும் அக நடத்தைகள் எண்ணில் அடங்கா.


அல்பேட் எலிஸ்

### ஒருவரைத் தோல்வியுறச் செய்யும் உணர்வுகள், மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் முறைகள்

எமது மனவெழுச்சிகளை முகாமைத்துவம் செய்து அவைகளை வெளிப்படுத்துவது. சமூக மனவெழுச்சி நுண்ணறிவால் ஏற்படுகின்றது. மனவெழுச்சிகள் சிலவற்றை அடக்குகின்றோம். சில உள்ளே போகின்றது. சில வெளியில் தெரிகின்றது.

மறுத்தல், மனவெழுச்சியை அடக்கி வைத்தல், அகத்தில் மனவெழுச்சியை கண்டபடி திரியவிடுதல், சுயத்தை தோல்வியுறச் செய்யும் முறையான மனவெழுச்சியை வெளிக்காட்டுதல் என்பனவற்றிற்கு ஒருவர் முகம் கொடுக்க வேண்டும்.

எதனால் அமைவற்ற மனவெழுச்சி வெளிப்பாடு தூண்டப்படுகின்றது என்பதை ஒருவர் இனங்காணவேண்டும்.

### இயங்கத் தடுக்கும் புறச்செயற்பாடு

புறச்செயற்பாடுகளை மக்கள் பார்க் கின்றனர். ஒருசிலருக்கு இவை பிரச்சினைகளை உண்டாக்குகின்றன.

ஒன்றும் செய்யாதிருத்தலும் ஒரு நடத்தை தான். ஒருவர் தெரிவுசெய்யாமலும், சில நடத்தை களில் ஈடுபடாமலும் இருப்பர்.

சுயத்தை தோல்வியுறச் செய்யும் நடத்தை கள், சுயத்தை தோல்வியுறச் செய்யும் எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டவை.

### உலகை திரிபுபடுத்திப் புரிந்துகொள்ளல்

உண்மையான உலகை அப்படியே பார்க்காத ஒருவர் தமது பிரச்சினையான சூழலில் உள்ன்று கொண்டிருப்பர். இதனால் அவர்கள் சந்தர்ப்பங்களை இழப்பர். உதாரண மாக ஒருவர் தனது மனைவியுடன் பாலுறவை வைக்க ஆர்வம் காட்டாது இருந்தால் அவர் வேறு ஒரு பெண்ணு டன் தொடர்பு வைத்திருக்கின்றார் என்பதை மனைவி அறியாது போனால், இங்கு மனைவிக்கு சவால் விட்டு உண்மை நிலையை அறிய வேண்டும். இது மனைவிக்கு ஒரு குருட்டிடமாக இருக்கும். நாம் எல்லோரும் குருட்டிடத்தை வைத்திருக்கின்றோம். இது சவால்களால் வெளிப்படுத்தப்படுகின்றது.

### முன் பின் முரணான ஒப்பிசைவற்ற நிலை Discrepancies

வாழ்வில்இந்நிலையிலும்நாம்வாழ்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செய்யவேண்டியதைச் செய்யாமல் விடு கின்றோம். உதாரணம் நாம் எடுக்கும் பிரதிக் கினைகள். இந்த நிலை எமக்கு பின்வரும் பிரச்சினைச் சூழலைக் கொண்டுவரும்.

(1) ஒருவர் சிந்திப்பவை, உணர்பவை, எதிர் செய்பவைகள்
(2) சொல்பவை எதிர் செய்பவை
(3) தம்மைப் பற்றிய நோக்கு எதிர் பிறரின் நோக்கு
(4) தானும் எதிர் தன்னைப் பற்றிய எண்ணங் களும்
(5) அவர்களின் இலக்கும் எதிர் அடைதல்களும்.
(6) அவர்களுடைய மதிப்பீடுகளும் எதிர் நடத்தைகள் என்பன.

இங்கு ஒருவர் பேசுவதற்கும், செய்வதற்கும் இடையில் முரண்பாடு இருக்கின்றது. வேலை செய்யாதிருக்கப் பழகிவிட்டார்.

### பாவிக்கப்படாத வலுக்களும், வளங்களும்

இங்கு சவால்விடுதல் பிரச்சினைக்கு மட்டு மல்ல சுயத்திற்குமே. நேர்மறையான உளவியலி னூடாக பாவிக்கப்படாத வலுக்கள், வளங்களை கண்டறியவேண்டும். உ-ம்:- ஆற்றல், திறமை.

இவற்றில் சில புறவயமானது. உ-ம்:- பிரச்சினையைக் கையாள அல்லது சந்தர்ப்பங் களைப் பாவிக்க சமூக ஆதரவு தேவை. பாவிக்கப் படாத எத்தகைய வலுக்களை ஒருவர் வைத்திருக் கின்றார். ஒருவரின் அக, புற வளங்களை எப்படிப் பாவிக்க வைக்க உதவலாம்? நாம் எல்லோரும் பாரிய வளங்களை வைத்திருக்கின்றோம். அவைகள் அகழப்படவேண்டியவை. இயங்க முடியாத நடத்தைகளில் வலுக்கள் புதைக்கப் பட்டிருக்கின்றன. பகுத்தறிவிற்கு மாறான சிந்தனை களிலும், வலுக்களிருப்பதாக டிறிஸ்கொள் Driscoll கூறுகின்றார். அவைகள் மடமையென்று ஒருவருக்குக் காண்பிப்பதிலும் பார்க்க, எவ்வளவு திறமையாக தத்துருவமாக அவர் வடித்தெடுத் திருக்கின்றார் என்பதை காண்பிப்பது நன்று. அவர் தன் மடமையான விடயத்தை தர்க்கரீதியான முறையில் வடித்தெடுத்த அழகைப் பார்ப்பார். இது அவருக்கு ஒரு வலுவாக நல்லவற்றைத் தான் அடையலாம் என்ற நம்பிக்கையைக் கொடுக்கும்.

### நாளாந்தம் சந்திக்கும் நேர்மையற்ற தன்மைகள்

திரிபுபடுத்தல், தவிர்த்தல், உளவிளை யாட்டுக்கள், மோசடிகள், மன்னிப்புக் கேட்டல்கள் என்பவை ஒருவரை பிரச்சினையான சூழலில் வைக்கின்றது. நாம் எப்போதும் எம்மை மற்றவரிட மிருந்து, எம்மிலிருந்து, உலகத்திலிருந்து பாதுகாக் கின்றோம். நாம் எல்லோரும் சிறிய நேர்மையற்ற தன்மைகளை வைத்திருக்கின்றோம். ஆனால் இவை இருபக்க வாள் போன்றவை. இப் பொய்கள் எம்மை பிரச்சினைகளில் இருந்து விடுவிக்க உதவுகின்றது. இது ஒரு பிரச்சினையிலிருந்து தப்பிக்கும் வியூகம். எனது இழப்பிற்கு மற்றவரைச் சாட்டுதல் என்னை மனிதனாக மற்றவரைப் பார்க்கச் செய்யும். ஆனால் இவை எமக்கிடையில் உறவை சிதைக்கவும், விருத்தியை தடை செய்யவும், பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும் உதவுகின்றது. இங்கு சவால்விட்டு ஆக்க பூர்வமாக அவர் அக புற உலகத்தைக் கையாள உதவ வேண்டும்.

### திரிபுபடுத்தல் Distort

சிலர் உலகத்தை அதே மாதிரிப் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கு அது துன்பமாகவும், பல வற்றைச் செய்யவேண்டும் அல்லது செயலாற்ற வேண்டும் என்ற நிலையையும் ஏற்படுத்துகின்றது. இதனால் திரிபுபடுத்தல் அவர்களுக்கு உதவு கின்றது.

(1) தேவி மேற்பார்வையாளருக்குப் பயம். இதனால் தான் தனிமையாக இருப்பதாக உணர்கின்றாள். உண்மையில் தேவி ஆதரவான ஒருவர். தற்போதைய உண்மை நிலையை விடுத்து தனது கடந்தகாலப் பயத்தைப் பற்றிப் பயப்படுகின்றாள்.
(2) எட்னா தமது நண்பர்களுக்கு விருப்பமோ, விருப்பமில்லையோ தனது விருப்பத்தை நிறைவேற்றுகின்றாள். பிள்ளை வளர்ப் பதிலும் தனது எண்ணப்படிதான் நடக்கின்றாள். கணவனை உதாசீனம் செய்வது தன்னிடத்தில் அதிகாரம் இருக்க வேண்டுமென நினைப் பவள். ஆனால் வினாவும் போது அப்படியல்ல. "அவருக்கு மிகவும் கரிசனையாக இருக்கின் றேன்" என்று மறுப்பாள்.

### உள விளையாட்டுக்கள் ஏமாற்றுதல்கள்

இவைகள் மனிதருக்குச் சாதகமாக இருந்தால் தம்முடன் எப்போதும் வைத்திருப்பர்.

இவைகளை தமது வாழ்வில் பாவிப்பர். "ஆம், ஆனால்...", "உதவி தேவை, வேண்டாம்." மாற்றங்களுக்கு பயப்படுகின்றவர்கள் ஒளித்திடுவர் அல்லது தம்மை மறைத்திடுவர். உ-ம்:- மாலா தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பருடன் இருக்கும் போது உதவி தேவைப்படும் போல் காண்பிப்பாள். ஆனால் உதவிக்கு வந்தால் கோபபட்டு "தான் குழந்தையல்ல" எனச் சொல்வாள். பயப்படுபவர் தொடர்பாடல் வைக்க மாட்டார்.

**மன்னிப்புக் கேட்டல்**

இந்த நடத்தை உலகளாவியது. வாழ்வில் ஒரு பகுதியாகின்றது. இதை நேர்மறையாக பிரயோகிக்கின்றனர். இருப்பினும் மன்னிப்புக் கேட்டல் பிரச்சினைகளை தவிர்க்க உதவுகின்றது. ஒருவர் கூடாதது செய்யும்போது இது நடைபெறுகின்றது. அவர்கள் நல்லதை வாழ்வுக்கு வேண்டியதை ஏன் செய்வதில்லை.

உதாரணமாக "பெண்கள் வேலை செய்யக்கூடாது" என்ற எடுகோளை மாற்ற வேண்டும்.



இந்த மாற்றத்தால் இருபாலாரும் நன்மையடைவர்.

**குருட்டிடங்கள் Blind spot :**

இது வரை நாம் எதற்குச் சவால் விட வேண்டுமெனப் பார்த்தோம். ஒருவர் தனது சுய வரையறுப்புக்களை, மனவெழுச்சியை வெளிக் காட்டல், நடத்தை என்பவற்றிலிருந்து சவால் மூலம் செயல்படும்போது சுயவிழிப்பு பெறுகின்றார் என்பது முக்கியமாகின்றது. நாம் எல்லோரையும்போல் செயறபடும்போது உணர்ந்து செய்கின்றோம் உணரா மலும் செய்கின்றோம். குருட்டிடங்கள் என்றால் நாம் செயற்படும்போது சிலவற்றை உணர்வதில்லை எம்மில் சிலவற்றைப் பார்ப்ப தில்லை அல்லது அவற்றைத் தவிர்க்கின்றோம். இது நனவிலி நிலை யில் நடக்கின்றது. இவைகள்தான் குருட்டிடங்கள். நம் எல்லோரிலும் குருட்டிடங்கள் இருக்கின்றது. நாம் இவைகளை இனம் காண்ப தில்லை. இதனால் பிரச்சினையான சூழலை அல்லது இனங்காணலை, நமக்கு வரும் சந்தர்ப் பங்களை விருத்தி செய்ய நம்மால் இயல்பாக செய்யமுடிவ தில்லை.

**விழிப்புணர்வின் நிலைகள்**

குருட்டிடங்கள் நாம் சிந்திக்காமலேயே வருகின்றன. இவை மாறும் வழியில் குறுக்கே நிற்கின்றன. குருட்டிட நிகழ்வுகள் பலவாறு வருகின்றன.

(1) **எளிதான விழிப்புணர்வற்ற நிலை**

ஒருவர் அறியாமலே சில விடயங்கள் விழிப்புணர்வற்ற நிலையில் வெளிவருகின்றன. இவைகளை விழிப்புணர்வில் கொண்டு வரும் போது பிரச்சினைகளைக் கையாளலாம். சந்தர்ப் பங்களை விருத்தி செய்யலாம். ஒருவர் தன்னடக் கம், பணிவு போன்ற பண்புகள் தன்னிடம் இருப்ப தாக உணர்ந்து தனது ஆற்றல், திறமைகளை உதாசீனம் செய்தல். அவருடைய வாழ்வு அதனால் வரையறுக்கப்பட்டிருக்கும். இவரின் மனக் கோப்புக்கள் இவரை மாற விடாது. ஒருவர் தன்னை ஒரு நேர்மறையாளராக நினைத்தால் அவர் சில வேளைகளில் எல்லாம் சரியாக நடக்கும் என்ற நினைப்பில் பிரச்சனைகளை சரியான முறையில் கையாள, உண்மை நிலையைப் பார்க்க தவறுவார். ஒருவர் தான் உறுதி படக் கூறுபவர் என நினைக் கின்றார். ஏனையோர் இவன் பிடிவாதக்காரன் என நினைக்கின்றனர். இதனால் மற்றவர்கள் அவரை அணுக மாட்டார்கள் என்பது அவருக்குத் தெரிவ தில்லை.

(2) **சிந்தித்துச் செயல்படத் தவறுதல்.**

இது எல்லோருக்கும் பொதுவான ஒரு பிரச்சினை. நாம் பிரச்சினைகளை ஆராய்ந்து, சந்தர்ப்பங்களைப் பரீட்சித்து, வழிமுறைகளைக் கண்டறிந்து அல்லது திட்டங்களை உருவாக்கி செயல்படுவதில்லை. மாறாக முழுமையற்றதாக மேலெழுந்தவாரியாக செயல்படுகின்றோம். எமது தீர்மானங்களை பிழையான வாத அடிப்படையிலும் வைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (3) ஒருவர் தன்னை ஏமாற்றுதல் Self Deception

ஒருவர் சிலவற்றைத் தெரிந்து கொண்டால் அவர் தனக்குத்தானே சவால் விட்டு நடத்தைகளை மாற்றிக் கொள்ளலாம். இருப்பினும் அவர் இவை களைப் பற்றித் தெரியாமல் இருட்டிலேயே இருக்க விரும்புவர். நாம் எமக்கே பொய்களைச் சொல்லி அவைகளை நாம் நம்புகின்றோம்.

### (4) இருட்டில் இருக்க விரும்புதல்

இதுவும் மனித அனுபவத்தில் பொது வானதொன்று. "என்னால் தெரிந்து கொள்ள முடியும், ஆனால் விருப்பமில்லை." சிலருக்கு ஏதாவது நோய், வருத்தம் வந்தால் அது என்ன வியாதி என்று அறியப்பயம். அதனால் அறிய முயற்சிப் பதில்லை. வாழ்வை அழிக்கக் கூடிய நோய் என்று அறியும் பயத்தில் இப்படி இருட்டில் இருக்க விரும்புவர்.

### (5) விளைவுகளைப் பார்க்க அறிய விரும்புவதில்லை.

ஒருவர் தனது மனவெழுச்சி வெளிப் பாடுகள் தனக்குப் பிரச்சினையை உண்டாக்கு கின்றன, அல்லது பிரச்சினையிலிருக்க வைக்கின்றன என்று அறிந்தும், அதற்கு ஒன்றும் செய்வதில்லை. அப்படியே விட்டுவிடுகின்றார். தமது பிரச்சினைக்குத் தாமே காரணம் என அறிந்தும் அதை நீக்க முயலுவதில்லை.

இங்கு மதன் தனது செயற்பாடுகள் தனக்கு எதிராக வேலைசெய்கின்றது என நினைக்கின்றான். இதனால் திருமண உறவும் பாதிக்கப்படுகின்றது என்பதை அவர் உணராதுஇருட்டில் இருக்கின்றார். குருட்டிடங்களை நாம் உணர்வதில்லை. இதனால் நாம் எம்மை ஏமாற்றுகின்றோம். உண்மை நிலையை அறிய முற்படுவதில்லை. ஏனோதானோ என்று இருத்தல், எமக்கு எல்லாம் தெரியும் ஆனால் முழுமையாகவல்ல. விளைவுகளை அறிவதில்லை. இவை களுக்குச் சவால் விடுவதால் குருட்டிடங்கள் அறியப்படுகின்றது.

உதவியாளராக நீங்கள் செய்ய வேண்டிய பேருதவி ஒருவருடைய குருட்டிடங்களைக் கையாள உதவுவதே. ஒருவர் முற்சார்பு எண்ணங்களை வைத்திருக்கின்றார் என்றால் அவர் குருட்டிடங்கள் வைத்திருக்கின்றார். தான் பார்க்கும் ஒவ்வொரு வரும் அப்படியே என்று சொல்வாரானால் அவர் குருட்டிடங்களை ஆராயாமல் இருக்கின்றார் என்பது தான் பொருள்.

ஒருவர் தனது முற்சார்பான எண்ணங் களை உணர்ந்து, அவற்றின் படி நடவாமல் தன்னையும் அறிந்து உண்மையான உலகத்தை யும் அறிவாரானால் அவர் ஆக்கபூர்வமான விதத்தில் தனது முற்சார்பான எண்ணங்களைக் கையாள்வார், அவர் தனது பிரச்சனையை ஒரு சந்தர்ப்பமாக்கி அதை சரியான முறையில் பயன்படுத்துவார். இப்படியாக ஒருவர் தமது செயற்படும் தன்மைக்கு எதிரான குருட்டிடங்களைக் கண்டறிந்து தனது வாழ்வின் வளர்ச்சிக்கு உதவ முன்வந்தால் பல பாதிப்புக்களைத் தமது வாழ்வில் கட்டுப்படுத்தலாம்.


**நூல் அறிமுகம்**

நூல் – பாடசாலையில் ஆலோசனை வழங்கல்

ஆசிரியர் – பாலசுப்பிரமணியம் தனபாலன்
ஞானசக்தி கணேசநாதன்

விலை – 350/-


வெளியீடு – லங்கா பதிப்பகம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சபா.ஜெயராசா

# இருப்பிய உளவியலும் சிகிச்சைமுறையும்

இருப்பிய மெய்யியற் சிந்தனைகளை அடியொற்றி இருப்பியச் சிகிச்சைமுறை சீர்மிய உளவியலில் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை உருவாக்கியவர்களுள் இர்வான் யலொம் மற்றும் ரோலோ மே ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர். யலோம் இருப்பியத்தை அடிப்படையாகக் கொண்ட நாவல்களையும் புனைகதைசாரா வடிவங்களையும் எழுதியுள்ளார். மேயும் ஆங்கில இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்ததுடன் இருப்பியச்சீர்மியத்தில் பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

இறப்பு, விடுதலை, விடுபட்டதனிமை, கருத்தற்றநிலை (MEANINGLESSNESS) முதலியவை இருப்பியச் சீர்மியத்தில் அதிக முக்கியத்துவம் பெறும் கருப்பொருட்களாயுள்ளன. இருத்தலுக்கும் இன்மைக்குமுள்ள உணர்வும் முரண்பாடும் இன்மையின் பயமும் மனிதரை உறுத்தியவண்ணமுள்ளன. மனித இருப்பின் கருத்துப் பற்றிய முக்கியத்துவம் மேலெழுந்துள்ளது. வாழ்தலும் மாழ்தலும், இருப்பும் இன்மையும் தனித்துவமானவை.

மனிதருக்குரிய பதகளமும் பயமும் உளத்தாக்கங்களும் இறப்பு என்ற நிலையிலிருந்தே மேலெழுகின்றன. இருப்புடன் தொடர்புடைய மூன்று உலகங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை:

(1) <u>சூழவுள்ளஉலகம்</u> - அது இயற்கை உலகை குறிப்பிடுகின்றது.

(2) <u>உடனிருக்கும் உலகம்</u> - அது சமூக உலகைக் குறிப்பிடுகின்றது.

(3) <u>ஒருவருக்கே உரிய சொந்த உலகம்</u> - <u>அது</u> தன்னுணர்வையும் பிரக்ஞையையும் உள்ளடக்கியது. அதனை அடியொற்றியே பொருள்கள் மற்றும் மனிதர் தொடர்பான சொந்தக் கருத்தாக்கங்களை மனிதர் உருவாக்கிக் கொள்கின்றனர்.



மேற்குறித்த மூன்று உலகங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பது இருப்பியத்தின் கருத்து.

பதகளிப்பு என்பது மனித வாழ்க்கையின் ஒன்றிணைந்த பகுதி. இருப்பின் பயமுறுத்தலில் இருந்து பதகளிப்பு மேலெழுகின்றது. வளர்ச்சியின்பொழுது ஒவ்வொருவரும் பல்வேறு விதமான பதகளிப்பை எதிர்கொள்கின்றனர். இயற்கை ஆபத்துக்கள், நோய், மரணம் முதலியவற்றிலிருந்து எழும் பதகளிப்பு பொதுவான பதகளிப்பு ஆகும்.

அதனோடு இணைந்த சீர்மிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளில் இருப்பியச் சீர்மியத்தினர் தொழிற்படுகின்றனர். பொதுவான இந்தப் பதகளிப்பு அடக்கிஅழுத்தி வைக்கப்படுவதல் இல்லை. ஆக்க பூர்வமான கற்றல் நடவடிக்கைகளால் அந்தப் பதகளிப்பு கையாளப்படுகின்றது. மனித இருப்போடு பொதுவான பதகளிப்பு இணைந்தது என்பதை விளக்குதல் இருப்பியச்சீர்மியத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

பொதுவான பதகளிப்பிலிருந்து வேறுபட்ட வேறொரு பதகளிப்பும் உண்டு. அது உளப்பிணி யுடன் (NEUROTIC) தொடர்புடையது. அது பொதுவான பதகளிப்புக்கு எதிரானதும் மாறுபாடானதும் ஆகும். மேலும் அழிவுப்பாங்கானது பொருத்தமற்ற வெளிப்பாடுகளைக் கொண்டது. அடக்கி அழுத்தி வைக்கும் செயற்பாடுகளையும் கொண்டது.

பதகளிப்பைப் போன்று குற்றவுணர்வும் (GUILT) மனித இருப்புடன் இணைந்தது. பொதுவானதென்றும் உளப்பிணியுடன் தொடர்பு டையது என்றும் குற்றவுணர்வு இரு வகைப்படும். பொதுவான குற்றவுணர்வு ஒருவரது மனச்சான்று டனும் அவருக்குரிய அறவொழுக்க நடத்தையுடனும் தொடர்புடையது. மற்றவர்களதும் சமூகத்தினதும் ஆக்கிரமிப்பின் வழியாக உருவாகும். கற்பனை நிலையில் உளப்பிணியுடன் தொடர்புடைய அடுத்த குற்றவுணர்வு தோற்றம் பெறுகின்றது.

இருப்பியக் குற்றவுணர்ச்சி மூன்று வகையாகப் பகுத்து நோக்கப்படுகின்றது.

(1) ஆற்றலின் இருப்புக்கு ஏற்றவாறு வாழாத குற்றவுணர்வு அதன் அடிப்படையில் பிறர்மீது ஆக்கிரமிப்புச் செலுத்துவதால் குற்றவுணர்வு எழும்.

(2) சகமனிதரை திரிபுபடுத்துவதனால் ஏற்படும் குற்றவுணர்வு.

(3) பிரிந்து நிற்கும் குற்றவுணர்வு அதாவது அனைத்தி லிருந்தும் பிரிந்து நிற்பதனால் ஏற்படுவது

குறியீடுகளாற் சிந்திக்கவும் பேசவும் வல்ல ஆற்றல் மனிதருக்கு உண்டு. காலத்தை "நிலை விஞ்சுகை" (TRANSCED) செய்யும் திறனும் மனிதரிடத்துக் காணப்படுகின்றது. கடந்த காலத்திலும். எதிர்காலத்திலும் எறிவுகளை மேற் கொள்ளும் திறனும் உண்டு. பதகளிப்பினாலும், கைவிடப்பட்டதனிமை உணர்வினாலும் மனிதருக்குரிய "நிலைவிஞ்சுகை" பாதிக்கப்படுதல் உண்டு

உளவியக்கவியல் (PSYCHODYNAMICS) உளத்தில் நிகழும் எதிரான விசைகளின் செயற்பாடுகளைக் குறிப்பிடுகின்றது. உளப் பகுப்பியல் அதனை ஈகோ என்ற தற்கவிப்புடன் தொடர்புபடுத்திநோக்குகின்றது. சிக்மன் பிராய்ட் அதனைச் சிறுவயதுப் பாலியல் தழுவிய முரண்பாடுகளுடன் தொடர்புபடுத்தி விளக்கினார்.

உளவியக்கவியலை இருப்பியம் வேறு கண்ணோட்டத்தில் நோக்குகின்றது. இறப்பு, விடுதலை, தனிமை, கருத்தற்ற நிலை முதலிய வற்றுடன் எதிர்க்கோடல் (CONFRONT) கொள்ள முடியாதநிலையில் எழும் உள முரண்பாட்டை அடியொற்றி இருப்பியத்தின் உளவியக்கவியல் விளக்கப்படுகின்றது.

மேலைப் புலப் பண்பாட்டில் இறப்புப் பற்றிய சரியான கல்வி சிறுவர்களுக்கு வழங்கப்படுதல் இல்லை என்ற குறைபாடு இருப்பியச் சீர்திருத்தத் திலே சுட்டிக் காட்டப்படுகின்றது. உளநலம் பாதிக்கப் பட்டவர்களுள் பெரும்பான்மையினர் சிறுவயதிலே தாய் தந்தையரை இழந்தவர்களாகவே காணப் பட்டனர். இறப்புப் பற்றி தவறான கருத்துக்களும் தேவதைக் கதைகளுமே சிறுவர்க்கு கற்பிக்கப் படுகின்றன.

இறப்பைப் போன்று விடுதலை என்பதும் இருப்பியச் சீர்மியத்திலே சிறப்பாக வலியுறுத்தப்படு கின்றது. எவ்வாறு சித்தவலுக்கொள்ளல் (HOW TO WILL), எவ்வாறு விருப்பம் கொள்ளல், எவ்வாறு தீர்மானித்தல் என்பவற்றுடன் தமது தீர்மானங் களிற்கு எவ்வளவு தூரம் அர்ப்பணிப்புடையோரா யிருக்கின்றனர் என்பவற்றில் பின்னடைவுகளும் வீழ்ச்சிகளும் காணப்படுதல் உளப்பிரச்சினைகளை உருவாக்குகின்றது.

தனிமைப்படல் என்பது இந்த சிகிச்சை முறையிலே முக்கியமான எழுபொருளாக உள்ளது. தனக்குள்தான் தனிமைப்படல், பிறமனிதர்களிட மிருந்து தனிமைப்படல், புறநிலவரங்களில் இருந்துதனிமைப்படல் ஆகியவை உளநலத்தை பாதிப்படையச் செய்கின்றன. நவீனபண்பாட்டு மாற்றங்களும், தொழில்நுட்பப் புரட்சியும் தனிமைப் படலை மேலும் தீவிரமாக்கியவண்ணமுள்ளன.

பலநிலைகளால் வாழ்க்கை கருத்தற்றதாகி (MEANINGLESSNESS) விடுகின்றது. சமயத்தின் மீதான நம்பிக்கையும் இழக்கப்பட்டுவருகின்றது. கைத்தொழில் வளர்ச்சி இயற்கைமீது கொள்ளும் உறவாடலை நம்பிக்கை அற்றதாக்கி வருகின்றது. நிலத்தோடும் தாவரங்களோடும் இணைந்திருந்த வாழ்க்கை இழக்கப்பட்டுவருகின்றது. வேலை முறைமையும், இயந்திரப்பாங்கான வாழ்க்கையும் "பொருண்மை" அற்ற தோற்றப்பாடுகளாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான எதிர்மறைச் சூழலிலே மக்கள் எவ்வாறு எதிர்த்தற் சீராக்கங்களை மேற்கொண்டு தம்மை இசை படுத்திக் கொள்கின்றனர் என்பது நோக்கப்படுகின்றது. நிலவரங்களை உற்றுணரும் பொழுது ஏற்படும் பதகளிப்பு நிலை எதிர்த்தற் சீராக்கத்தை உருவாக்குகின்றது. இறப்புப்பற்றிய பயம் இறுதி நிலையான பாதுகாப்பு தருபவர் மீதான நம்பிக்கையைத் தோற்றுவிக்கின்றது. அதேவேளை காரணகாரியத் தொடர்பற்ற நம்பிக்கைகளையும் செயற்பாடுகளையும் உருவாக்குகின்றது. விடுதலைப் பதகளிப்பு, தனிமைப் பதகளிப்பு, கருத்தற்ற நிலையின் பதகளிப்பு ஆகிய ஒவ்வொன்றுக்குமுரிய சிறப்பான எதிர்த்தற் சீராக்கமுறைகள் காணப்படுகின்றன.

இருப்பியச் சிகிச்சைமுறையின் சிறப்பு ஒவ்வொருவருக்கும் அவரவர்க்குரிய இருப்பை உணரச் செய்தலாகும். அதுவே தலையாய சிகிச்சை இலக்காகும். சீர்மியநாடிகளை தொழில்நுட்ப அடிப்படையில் பொறிமுறையாக அணுகிச் சீர்மியம் செய்யும் முன்னெடுப்புக்களை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. நடத்தை சார்ந்த நிலையில் சீர்மிய நாடிகள் மீது மேற்கொள்ளப்படும் திணிப்பு நடவடிக்கைகளும் அவர்களது நோக்கில் தவறானதே.

சுய விசாரணைகள் வாயிலாகப் பின்வரும் இலக்குகளை எட்டுதலே இருப்பியச் சீர்மியத்தில் முன்னெடுக்கப் படுகின்றது.

(1) நனவிலி சார்ந்த உள முரண்பாடுகளை விளங்கிக் கொள்ளச் செய்தல்.

(2) பிழையான எதிர்த்தற் சீராக்கமுறைகளை புரிந்துகொள்ளச் செய்தல்.

(3) அழிவை உருவாக்கும் செல்வாக்குகளைக் கண்டுணரச் செய்தல்

(4) தன்னை மற்றும் பிறரைக் கையாளும் முறைமைகளைத் திருத்தியமைத்தல் வாயிலாக இரண்டாம் நிலைப் பதகளிப்பை வலுவிழக்கச் செய்தல்.

(5) பிரதான நிலை பதகளிப்பை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல்களை வளத்துக் கொள்ள உதவுதல்.

சீர்மியநாடி ஒவ்வொருவருக்குமுரிய தனித்துவத்தின் மீது கௌரவம் செலுத்தப்படுகின்றது. இந்தச் சிகிச்சை முறையில் தரம் மிக்கசீர்மியர் மற்றும் சீர்மியநாடி ஆகியோர் நடுநிலை முக்கியத்துவம் பெறுகின்றனர். கடந்தகால நிலவரங்களைக் காட்டிலும் நடப்புகாலத்தை விளக்கிக் கொள்ள செய்தலும் மூடியுள்ள பயவுணர்வை உற்றறிந்து கொள்ளச் செய்தலும் சிறப்பாக முன்னெடுக்கப் படுகின்றன.

சீர்மியரது செயற்பாடு சீர்மியநாடி கூறுவதை நிழல் போன்று தெறித்துக் காட்டுதல் அன்று. ஏனைய சிகிச்சை முறைகளில் தெறித்துக்காட்டலே அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனால் இருப்பியச் சீர்மியத்தில் சீர்மியநாடியின் இருப்பை உணர்ந தெழச்செய்தலே குவியமாக்கப்படுகின்றது.

சீர்மியர் தனது எண்ணங்களைத் திணித்துவிடலாகாது. "தன்னிலைத் திறந்துரைத்தல்" (SELF DISCLOSURE) அங்கே ஒரு முக்கிய எழுபொருளாகவுள்ளது. தமது தனிப்பட்ட தத்தளிப்புக் களை எடுத்தியம்பலும் உள்ளடக்கக்குவிப்பை மேற்கொள்ளலும் சீர்மிய நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.

சிகிச்சை நிலையில் எழும் ஊடுதலையீடு களாக (INTERVENTIONS) பின்வருவன இடம் பெறுகின்றன.

(1) இறப்பைப் பற்றிய உற்றுணர்வை ஏற்படுத்துதல்

(2)எதிர்த்தற் சீராக்கமுறைகளை விளங்கிக் கொள்ளல்

(3) கனவுகளுடன் தொழிற்படல்

(4) தனிமைப்படலோடு எதிர்க்கோடல் கொள்ளல்

(5) கருத்தற்றநிலையை இனங்காணல்.

மேலைப் புலத்தில் உருவகம் பெற்ற உளவியற்கோட்பாடுகளுள் இருப்பியம் முக்கியத் துவம் பெற்றதொன்றாக விளங்குகின்றது. அது தொடர்ந்து மீளாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருதல் ஒருவகையில் அதனிடம் உட்பொதிந்துள்ள மட்டுப்பாடுகளைப் புலப்படுத்துகின்றது. தனிச் சொத்துரிமையின் வளர்ச்சிக்கும் மனிதப் பதகளிப்பின் வளர்ச்சிக்குமுள்ள தொடர்புகளை மார்க்சிய உளவியல் தருக்கநிலையில் தெளிவுபடக் கூறுகின்றது. ஆனால் இருப்பியம் மனிதப் பதகளிப்பை ஒற்றைபரிமாணத்தில் மட்டும் நோக்குகின்றது.

### References and Further Reading

May, R. (1977). The Meaning of anxiety: New York: Norton

May, R. (1981). Freedom and Denstiny. New York: Norton

Yalom, I.D. (1980). Existential psychotherapy. New York: Basic Books

Yalom, I.D. (1999). Momma and the meaning of life. New York: Basic Books

Yalom, I.D. and Leszez (2005). The theory and practice of group psychotherapy. New York: Basic Books



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் மா.கருணாநிதி

# ஆசிரியர் கல்வியில் கட்டுருவாக்க அணுகுமுறைகள்

உண்மை வாழ்க்கை அனுபவங்களுடன் இணைந்த வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும் என்பது இன்றைய அணுகுமுறையாக உள்ளது. கல்வியின் இலக்குகள் பற்றிய பகுப்பாய்வு தொடர்பான புளும் என்பாரின் அறிமுகத்தின் பின்னர் மாணவரில் ஏற்பட வேண்டிய நடத்தை மாற்றங்கள் என்பதற்குப் பதிலாக கற்றல் விளைவுகளை வலியுறுத்தும் வகையிலான 5E முறையினைப் பின்பற்ற வேண்டும் என்னும் அறிவுறுத்தலுக்கு அமைய இலங்கையிலுள்ள பாடசாலைகளின் வகுப்பறைச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. கற்பித்தல் அணுகுமுறைகளும் செயற்பாடுகளுடன் கூடிய கற்றலும் தேர்ச்சியடிப்படைக் கற்றலுக்கு வழிகோலியுள்ளன. இவை மாணவரின் சுய கற்றல் முயற்சிகளுக்குத் துணையாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்படுதல் இன்றைய நிலைமையாக உள்ளது. வழமையான நியம அடிப்படையில் மாணவரை ஒருவரோடு ஒருவர் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலைமைக்குப் பதிலாக நியதிகளின் அடிப்படையில் மாணவர் முன்னேற்றங்களைக் காண்பதற்குத் தேர்ச்சிகளை மையமாக வைத்துக் கற்பிக்கும் செல்நெறிகள் வலுப்பெற்று வருகின்றன. இதற்கு வலுவூட்டும் வகையில் ஆசிரியர் கல்வியும் பயிற்சியும் இடம்பெறுதலின் அவசியம் என்பதனைக் கட்டுருவாக்கம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்டுருவாக்கம் என்பது கற்றல் மற்றும் கற்பித்தலில் அர்த்தம் உருவாக்கும் கொள்கையென Richardson (1997) தெரிவித்துள்ளார். பொதுவான நோக்கில் கட்டுவாக்கக் கற்பித்தல் கடினமானதொரு விடயமாகக் கருதப்பட்டாலும் இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அணுகுமுறையாக அமைந்துள்ளது. மேலை நாடுகளிலே கலைத்திட்ட உருவாக்கம், கற்பித்தல் அணுகுமுறைகள் போன்றவற்றில் செல்வாக்குச் செலுத்தும் முறையாகவும் கட்டுருவாக்கம் இடம்பெறத் தொடங்கியுள்ளது. வகுப்பறைகளில் ஏனைய மாணவர்களுடன் இடைத்தாக்கத்துடன்கூடிய கற்பித்தல் நிகழும்போது தாம் கற்கும் விடயங்கள் தொடர்பாக புதிய அர்த்தங்களை அல்லது விளக்கங்களை உருவாக்கும்செயல்முறையாக இது அமைந்துள்ளது. இத்தகைய அணுகுமுறை மாணவரின் சுய மேம்பாட்டுக்கும் வழிகோலுகிறது.

கட்டுருவாக்க அணுகுமுறை பற்றிக் கருத்துக்களைத் தெரிவிப்போர் அது வழமையான அணுகுமுறைகளை முற்றாக மறுக்காமல் முன்னைய அறிவையும் புதிய அறிவையும் இணைப்பதன் மூலம் கற்கும் விடயங்களை உள்வாங்கிக்கொண்டு அந்த அறிவு தொடர்பான ஆழமான விளக்கத்தை ஏற்படுத்த உதவுகிறது என்கின்றனர். மாணவர்கள் தாம் பெற்றுக் கொண்ட அறிவைத் தொடர்புபடுத்திப் பார்ப்பதில்லை என்பதும் மாணவர்கள் கற்றவை எவையென வெளிப்படுத்தும் வழிமறையாக பரீட்சைகள் அமைந்துள்ள என்பதும் மரபுவழிக் கற்பித்தலில் நிலவிவந்த பின்னடைவு எனக் கூறப்படுகின்றன. இவற்றில் மாற்றங்கள் ஏற்படுதலின் அவசியம் இன்று வெகுவாக உணரப்பட்டுள்ளது.

கட்டுருவாக்கக் கற்பித்தல் தொடர்பாகப் பல உடன்பாடான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குற்பித்தல் ஓர் உளவியல் சார்ந்த செயல்முறையாக மட்டுமன்றி அது சமூகச்சூழலில் இடம்பெறும் விடயமாகவும் இருப்பதால் வகுப்பறைகளில் இடம்பெறும் செயற்பாடுகளில் தனியாள் மற்றும் சூழமைவின் பன்முகத்தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தில் கொள்ளப்படுதல் இன்றியமையாதது. மறுபுறத்தில் கற்றல் என்பது எப்பொழுதும் முறைசார் செயற்பாடாகவும் இருப்பதில்லை. இத்தகைய கருத்துகளிலிருந்து கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் கட்டுருவாக்கக் கற்றலுக்குரிய சூழலாகும் என்பது தெளிவாகிறது. மாணவர்கள் கற்கும் விடயங்களுக்குரிய அர்த்தத்தைக் கட்டுருவாக்கம் செய்வதற்குக் கற்கும் சூழலே அடிப்படையாக இருக்கிறது. இத்தகைய சூழல் தனியாள் அல்லது சமூகச் சூழலாக இருக்கலாம். இதனையடுத்து மாணவரும் ஆசிரியரும் கற்க வேண்டிய விடயங்களைத் துரிதமாக அறிந்துகொள்வதற்கு முறைசார் கல்வி மட்டும் உதவுகின்றதா என்னும் வினாவுக்குரிய விடையை உளவியலாளர் பியாஜேயின் கட்டுருவாக்கம் தொடர்பான உளவியல் அணுகுமுறை மற்றும் சமூகக் கட்டுருவாக்க அணுகுமுறை ஆகியவற்றின் வழியேயான தேடலாகும் என்றும் Richardson எடுத்துக் கூறியுள்ளார்.

ஆசிரியர் கல்வி மற்றும் கட்டுருவாக்கக் கற்பித்தல்ஆகிய விடயங்களில் முறைசார் கல்வி வகிக்கும் இடம் என்ன, முறைசார் அறிவின்மூலம் ஆசிரியர் கல்வியை முன்னெடுத்துச் செல்லும்விதம் என்ன, முறைசார் அறிவினை வழங்குவதற்குப் பயன்படும் பாடநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, சோதனை நிகழ்ச்சித்திட்டங்கள், உதவுகின்றன. பாடநூல்களுடன் கற்றலுக்கு உதவும் ஏனைய சாதனங்களும் சரியான விடயங்களைத் தருகின்றன என்ற எதிர்பார்ப்பு எம்மிடையே நிலவுகின்றதாயினும் கட்டுருவாக்கச் செயல்முறையில் இச்சாதனங்கள் மூலம் வழங்கப்படும் அறிவு கேள்விக்குரியதாகும்.

கட்டுருவாக்க அணுகுமுறையின் அடிப்படையில் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதில் பல வரையறைகள் உள்ளன. முறைசார் கல்வியில் பயன்படுத்தப்படும் பாடநூல்கள் மூலம் மாணவர்கள் கற்கும் விடயத்தில் வேறுபாடுகள் அதிகம் இருப்பதில்லை. அல்லது மாணவர்கள் எல்லோரும் பெரும்பாலும் ஒரே விடயத்தையே கற்கின்றனர். நிலைமாற்று வகிபாகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் பாடநூலை வாசிக்கும்பொழுது, மாணவர்கள் ஒரே பாடநூலைப் பயன்படுத்தினாலும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் விளக்கம் ஒரே மாதிரியாக இருக்கமுடியாது. குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் அறிவு தொடர்பாக விளக்கங்கள் வேறுபடுகையில் முறைசார் அறிவிலும் உடன்பாடுகள் இருப்பதில்லை. இதன் காரணமாக கற்கும் சூழலொன்றை உருவாக்கி அச்சூழலில் மாணவர் பெற்றுக் கொள்ளும் விளக்கங்களைப் பகிர்ந்துகொள்ள இடமளிப்பது முக்கியமானது. ஆசிரியரும் மாணவர் பெற்றுக்கொண்ட அர்த்தங்களைப் புரிந்துகொண்டு கற்றலுக்கு வசதிப்படுத்தும் பணிக்குத் தம்மை ஆயத்தஞ்செய்துகொள்ள வேண்டும். கட்டுருவாக்கக் கற்கும் சூழலை உருவாக்குவதில் ஆசிரியருக்குள்ள பொறுப்பினை இது எடுத்துக்காட்டியுள்ளது.

## உளவியல்சார் கட்டுருவாக்கம்

கட்டுருவாக்கம் என்பது அர்த்தம் அல்லது பொருளை உருவாக்கும் செயல்முறை சார்ந்தது என்பது பியாஜேயின் விளக்கமாகும். Simon (1997) என்பாரின் விளக்கத்தின்படி கட்டுருவாக்கக் கற்பித்தல் உயர்மட்டத்திலான விளக்கத்தை உருவாக்கும் மற்றும் பகுப்பாயும் திறனை மேம்படுத்தும் செயல்முறையென எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இவருடைய இன்னொரு விளக்கத்தின் படி ஆசிரியர் கணிதம் கற்பிக்கும்பொழுது, கணிதம் தொடர்பான விசாரணைகளும் புதிய அறிவைத் தோற்றுவித்தலும் அக்கற்பித்தலின் விளைவாக இருத்தல் வேண்டும் என்கிறார். மாணவர்கள் தமது முன்னைய அனுபவங்களை மீளமைக்கும் பொழுதே கணிதம் கற்றலில் உயர் மட்டங்களை அடையலாம். அனுபவங்களை மீளமைப்புச் செய்யும்பொழுது அறிவுசார் படங்கள் மீளமைப்புச் செய்யப்படும் இம் மீளமைப்புத் தொழிற்பாட்டினை ஆசிரியர் இரண்டு வழிமுறைகளில் ஊக்குவிக்கலாம். 1)அறிவுசார் விடயங்களில் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக்குதல். 2) மாணவர்களிடம் தற்போதுள்ள அறிவுப் படத்தினை இனங்கண்டு கொள்ள வழிகோலும் சந்தர்ப்பத்தில் எண்ணக்கரு தொடர்பாகக் கொண்டுள்ள விளக்கம் மற்றும் சிந்தனைச் செயல்முறைகளுக்குச் சவாலாக இருக்கும் வேலைகள் நிகழ்வதற்கான சூழலை உருவாக்குவதில் ஆசிரியர் ஈடுபாடு காட்டுதல் மாணவர் சுதந்திரமாகச் சிந்திக்க இடமளித்தல், வினாக்கேட்டல், கருதுகோளாக்கம், கருத்துக் களைப் பரிமாறுவதற்கு அச்சமற்றநிலை என்பன இங்கு சாதகமான சூழலாகக் கொள்ளப்படுகின்றன. கட்டுருவாக்கச் செயல்முறைச் சட்டகத்தினுள் சமூகச்சூழலையும் உள்ளடக்க வேண்டியதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தை உளவியலாளர்களும் குறிப்பிட்டு உள்ளனர். பாடசாலை ஒரு சமூக அமைப்பு என்னும் அடிப்படையில் இக்கருத்து வலுப்பெறுகிறது.

உளவியலாளரின் கவனத்துக்குட்படாத இன்னொரு பிரச்சினையும் இங்கு அவதானத்திற் குரியது. உளவியல்சார் கட்டுருவாக்கவாதிகள் முறைசார் அதிகாரம் மற்றும் அறிவு போன்ற விடயங்களில் நேரடியாகக் கவனஞ் செலுத்துவ தில்லை. பாடநூல்களை அடிப்படையாகக்கொண்டு கற்பிக்கும் விடயங்கள் அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலங்களிலிருந்து வருகின்றன. இதற்கு உதாரணமாக இலங்கையின் கல்வி முறையிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் பாடநூல்களைக் குறிப்பிடலாம். இலங்கையில் குறிப்பிட்டதொரு வகுப்பில் குறிப்பிட்டதொரு பாடத்திற்கு ஒருபாட நூலையே பயன்படுத்துவதால் அதனடிப்படையில் மாணவர் அறிய வேண்டிய விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் யாவும் ஒரேமாதிரியானவையாகவே அமைகின்றன. பாடநூல்களைப் பொறுத்தமட்டில் ஆசிரியர்களுக்குள்ள அதிகாரமும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. மாணவர்களும் எவ்வித பிரதிபலிப்புகளு மின்றி பாடநூல்களிலுள்ளவற்றை ஏற்றுக்கொள் கின்றனர். மறுபுறத்திலே மாணவர்கள் விருத்தி செய்ய வேண்டிய சிந்தனைச் செயற்பாடுகளையும் அறிவு நிலைகளையும் வகுப்பறையில் ஆசிரியர் வழங்கும் வேலைகளின் வழியாகவே அடைந்து கொள்ள வேண்டியுள்ளது. மாணவர்களின் தேடி யறியும் பணிகள் மற்றும் கட்டுவாக்கச் செயற்பாடுகள் ஆசிரியரின் நோக்கங்களிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புகள் பெரிதும் குறைவு. ஏற்கனவே ஆசிரியர்கள் தீர்மானித்த கற்றல் விளைவுகளோடு அச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. தேடுதல் மூலம் மாணவர்கள் கண்டறிய வேண்டிய விடயங்களையும் ஆசிரியர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றனர். 5E முறையிலான கற்பித்தல் முயற்சிகள் இவ்வழியிலேயே நடைபெறுவதை வகுப்பறையில் இடம்பெறும் நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. கட்டுருவாக்கம் எதிர்பார்த்த வெற்றியைத் தரவேண்டுமாயின் கலைத்திட்டம் மற்றும் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதலில் ஆசிரியருக்குள்ள அதிகாரமும் கட்டுப்பாடுகளும் தகுந்த முறையில் தீர்மானிக்கப்படும்பொழுதே 5E அணுகுமுறையிலான கற்றல் கற்பித்தல் செயற் பாடுகள் வெற்றிதரும். ஆசிரியர்களின் கைகளில் உள்ள ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்கூட ஆசிரியரின் சுயசிந்தனைக்கும் சுயசெயற்பாடு களுக்கும் பெருந்தடையாக இருந்து வருவதை அவதானிக்கலாம்.

## சமூக அறிகைக் கட்டுருவாக்கம்

உளவியல்சார்ந்த கட்டுருவாக்க நோக்கு ஒருவரைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்திவிடும் என்பதால் ஒரு மாற்றுக் கருத்து என்ற நோக்கிலேயே சமூகக் கட்டுருவாக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. சமூகக் கட்டுருவாக்கவாதிகளின் கருத்தில் தனியாட்களிலும் பார்க்கச் சமூகமே முக்கியமான கருவியாக அமைந்துள்ளது. சமூகக் கட்டுருவாக்கம் முன்வைக்கும் இரண்டு அடிப்படைகள் பின்வருமாறு: 1)அறிவு சூழலுடனான இடைத் தாக்கத்தினால் உண்டாகிறது. 2) இடைத் தாக்கத்துடன்கூடிய சூழலில் தனியாளும் சமூகமும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

அறிவு சமூக ரீதியாக அமைக்கப்படுகிறது. கற்றல் என்னும் செயலின் விளைவு சமூகச் சூழலில் மொழியைப் பயன்படுத்தும்பொழுது, அர்த்தம் உருவாகிற தென ஜோன் டுயி (Dewey,1961) குறிப்பிட்டுள்ளார். சமூகக் கட்டுருவாக்கவாதிகளின் கருத்திலே ஒருவரின் கற்றலுகசெயலுக்கும் இணைப்பு உள்ளது. அச்செயலும் புலக்காட்சியும் கூட்டாக நிகழ்கின்றன. ஏதாவதொரு விடயம்பற்றி ஒருவர் கொண்டிருக்கும் விளக்கம் நோக்கத்திற்கும் சூழமைவுக்கும் ஏற்ப வேறுபடலாம். அதனால் அறிவும் ஆளுக்காள் வேறுபடும். இத்தகைய கருத்தினையே Vygotsky யும் எண்ணக் கருவாக்கம் செய்துள்ளார். (Vygotsky quoted in Davydov, 1995). ஒருவரிடத்தில் ஏற்படும் அபிவிருத்தியானது அவர் சமூகத்துடன் கொண்டிருக்கும் இடைத்தாக்கத்தில் தங்கியுள்ளது. "பிள்ளையை முழுமையாக கவனத்திற் கொண்டே விருத்திசார்ந்த கற்பித்தலும் வளர்ப்பும் நிகழ்தல் வேண்டும். அதன் மூலம் அறிவு, ஆற்றல்கள், சமூக ரீதியான தேவைகள் மற்றும் நடத்தைக் கோலங்கள் உருவாக்கப்படுகின்றன" (Devydov, 1995)

பாடசாலைகளில் இடம்பெறும் கற்றலும் பிள்ளைகளின் அபிவிருத்தியும் கலாசாரத்துடன் இணைந்துள்ள எண், எழுத்து வாசிப்பு, உரையாடல் ஆகிய வழிமுறைகளின் வழியே உருவாகின்றன. சமூக கலாசாரச் சூழலின் வழியாக பாடசாலையின் கலாசாரச் சூழல் கட்டியெழுப்பப்படும்பொழுது, அச்சூழலை நன்குணர்ந்து ஆசிரியர்கள் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஈடுபடுதல் வேண்டும். Vigotsky முன்வைத்த சமூகக் கொள்கையான அறிகைஎழல் (scaffolding) மற்றும் அண்மைய விருத்தி வலயம் (zone of proximal development) என்பனவற்றைக் கற்பித்தலுக்கும் பயன்படுத்தலாம் எனக் கூறும் பொழுது இவ்விடத்தில் ஆசிரியரின் வகிபாகம் யாது? இவை முறைசார் கலைத்திட்டத்துடன் பொருந்திச் செல்லுமா என்னும் வினாக்கள் எழுகின்றன. ஆயினும் அவற்றிக்கு விடைதரும் பல ஆராய்ச்சி முடிவுகளும் உள்ளன. இதனைப் பின்பற்றி ஆசிரியர் கல்வியானது பன்முக நோக்குடன் விருத்தி செய்யப்பட்டு வந்துள்ளது.

## ஆசிரியர் கல்வியிலுள்ள சவால்கள்

ஆசிரியர் கல்வியில் பொதுவாக இரண்டு அணுகுமுறைகள் உள்ளன. 1) கட்டுருவாக்க அணுகுமுறையிலான கற்பித்தல் 2) மாணவர்கள் தமக்கேயுரிய விதத்தில் விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுதல். இவற்றுள் முதலாவது அணுகுமுறை நேரடிப் போதனையாகவும் இரண்டாவது அணுகுமுறை தேடுதல்கள் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதாகவும் அமையும். இவ்விரண்டு அணுகுமுறைகளிலும் பல பிரச்சினைகள் உள்ளன. பியாஜே எடுத்துக்கூறிய உளவியல் சார்ந்த அணுகுமுறையின் அடிப்படையில் கற்பிக்கும் ஆசிரியர் முரண்பாடுகள் சிலவற்றை எதிர்கொள்கின்றனர். இரண்டாவது முறையில் கற்பிக்கும் பொழுது மாற்று எண்ணக்கருக்களை முன்வைத்தல், தேடுதலுக்கு ஊக்கமளித்தல் போன்றவை சில பாடங்களுக்குப் பொருத்தமற்றவை யாக இருக்கலாம். இவ்வேளையில் கற்கைநெறியின் உள்ளடக்கத்துடன் முரண்படாத வகையில் கற்பித்தல் அணுகுமுறைகளைப் பிரயோகிக்கலாம். இதுவும் கல்வியியலாளருக்குச் சவாலான விடய மாகும். கற்றல்-கற்பித்தல் அணுகுமுறைகள் கற்பிக்கப்படும் பாடம் மற்றும் உள்ளடக்கங்களுக் கேற்ப வேறுபடும். ஆசிரியர்கள் பயிற்சிபெறும் காலங்களில் அவற்றினைக் கவனத்திலெடுத்து படிப்படியாக மாற்றங்களுக்கு உள்ளாதல் வேண்டும்.

சமகால வகுப்பறைக் கற்பித்தலானது ஆழமான மற்றும் குறிப்பான ஆயத்தங்களை எதிர்பார்க்கிறது. ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அவ்வாறான விடயங்களைக் கவனத்திலெடுக்க வேண்டும். பாடசாலைக்குவரும் மாணவரும் பெற்றோரும் சமூக மற்றும் கலாசார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்டவர்கள் ஆதலால் அவற்றைக் கவனத்திற்கொண்டு செயற்படுதல் ஆசிரியர் முன்னுள்ள சவாலாகும். கட்டுருவாக்க அணுகுமுறைகள் வெற்றியளிப்பதற்கு விளை திறனுடன் கூடிய ஆயத்தங்களுடன் பயிற்சிகளை வழங்குதல் அத்தியாவசியமானது.

தனியாள் அபிவிருத்தி நோக்கில் அல்லது சமூகநிலைமாற்ற நோக்கில் கல்வியை வழங்கு தற்குப் பொருத்தமான கற்றல் கற்பித்தல் செயல் முறையில் அபிவிருத்தி உளவியல் சார்ந்த கற்பித்தல் அணுகுமுறைகளில் கூடுதலாகக் கவனமெடுத்தல் பயனுள்ளது. ஆயினும் இத்தகைய அணுகு முறைகள் தொடர்பான வாதப் பிரதிவாதங்களும் உள்ளன. குறிப்பாக மாணவர் மையக் கற்பித்தல் வெற்றியளிக்கும் விதத்தில் நடைமுறைப்படுத்தப் படுகிறதா மற்றும் மாணவர் மையக் கற்றலில் மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு இடமுள்ளதா என்ற வினாக்கள் தற்பொழுது முனைப்புப் பெறுகின்றன. இலங்கையில் நடைமுறையிலுள்ள மாணவர் மையக்கல்வி தொடர்பான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுவதன் அவசியத்தை இவ்வினாக்கள் வலியுறுத்துகின்றன.

இலங்கையில் தற்பொழுது கட்டுருவாக்க அணுகு முறைக்கு கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய வழிமுறைகள் தொடர்பான விளக்கங்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. ஆயினும் விளக்கங்கள் பற்றிய தெளிவு ஆசிரியர்களில் எத்தனை பேருக்கு உண்டு என்பது ஐயத்திற்குரியது. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் ஆசிரியரின் சுதந்திரமான சிந்தனைக்கும் செயற்பாடுகளுக்கும் தடையாகவும் உள்ளன. கட்டுருவாக்கம் எதிர்பார்ப்பது போல மாணவர்களே அர்த்தங்களை உருவாக்கவல்ல, புதிய சிந்தனைகளை தூண்டவல்ல நடைமுறை களைத் தொடரக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஆசிரியர் பயிற்சியின் போது முன்னெடுக்கப்படுதல் அத்தியாவசியமான விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசுப்பிரமணியம் தனபாலன்

# நடைமுறை விருத்திசார் உளவியலில் பிள்ளை பற்றிய ஆய்வுகளும் கொள்கைகளும்

மனித விருத்திப்பருவங்களில் பிள்ளைப்பருவம் மிகமுக்கியமானது. இங்கு விருத்தி என்ற எண்ணக்கரு முன்னேற்றகரமான மாற்றங்களைக் குறித்து நிற்கின்றது. எல்லா மாற்றங்களையும் விருத்தியாகக் கொள்ளவும் முடியாது. உளவியல் ரீதியாக விருத்தி பற்றி நோக்கும்போது, உடல், அறிவு, நடத்தை, ஆளுமை குறித்த மாற்றங்கள் பிறப்பிலிருந்து தொடர்ச்சியாக நிகழ்கின்றமையை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. 19ஆம் நூற்றாண்டிலிருந்தே மனித நடத்தை பற்றிய விஞ்ஞான ரீதியான உளவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.



வில்ஹெல்ம் வூண்ட் என்ற உளவியலறிஞர் 1879இல் ஜேர்மனி லீப்ஸிக் பல்கலைக்கழகத்தில் முதலாவது உளவியல் ஆய்வு கூடத்தைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து, எப்பிங்கோஸ் (1850–1909) விஞ்ஞானப் பரிசோதனைகள் மூலம் விஞ்ஞான ரீதியாக உளத் தொழிற்பாடுகள் என்ற வகையில் ஞாபகம் பற்றிய ஆய்வொன்றை வெளியிட்டார். தொடர்ந்து, இங்கிலாந்தில் பிரான்சிஸ் காள்ரன் (1882–1911) பிள்ளை பற்றிய தனியாள் வேறுபாடுபற்றிய ஆய்வை வெளியிட, பிரான்ஸ் நாட்டில் அல்பிரட் பீனே (1850–1911) பிள்ளைகளின் நுண்ணறிவுப் பரீட்சை பற்றிய உளவியல் விஞ்ஞான ஆய்வை வெளியிட்டார்.

ருஸ்யாவில் இயன் பவ்லோவ் (1849–1936)என்பாரின் நிபந்தனைப்படுத்தல் பற்றிய ஆய்வு, அமெரிக்காவில் தோண்டைக் (1879-1949) முயன்று தவறல் முறை ஆய்வு என்பன விஞ்ஞான ரீதியான பிள்ளை பற்றிய விருத்திசார் உளவியல் ஆய்வுகளுக்கு அடிப்படைகளை ஏற்படுத்தின.

ஆயினும், இவ்வகையான பரிசோதனைகளை நடாத்திய உளவியலாளர்கள் மனித இயல்புகள், பிள்ளையின் விருத்தி என்பன பற்றிய முழு விளக்கத்தையும் பெற முயலவில்லை. நடத்தை பற்றிய சில நோக்குகளில் மட்டும் ஆர்வம் கொண்ட வெவ்வேறு பிரிவுகளை அவர்கள் அமைத்தார்கள். அவர்களுடைய ஆய்வு நோக்கங்கள், முறைகள் வெவ்வேறாக இருந்தன. மேலும், இவர்களது ஆய்வுகள் தரவுகளை மென்மேலும் அதிகரிக்கச் செய்தனவே ஒழிய தொடர்ச்சியான முறையில் விருத்தியின் வடிவங்களை வழங்குவதற்கு ஒன்றிணைக்கப்படவில்லை. உதாரணமாக, ஞாபகம் பற்றிய கட்டுப்படுத்திய பரிசோதனை ஆய்வு நுண்ணறிவைக் கணித்து அளவிடுவதற்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்கலாம். அத்தோடு, இந்த ஆய்வால் பிள்ளையின் ஞாபகசக்தி எப்படி மாறுகின்றது எனக்கூற முடியவில்லை. எனவே, காரணத்தை அறிந்தாலொழிய நாம் செய்வதெல்லாம் நடத்தையை விபரித்தல் என்றாகியுள்ளது. எனினும், பல்வேறு உளவியல் விஞ்ஞான ஆய்வுகள் பிள்ளைப்பருவ விருத்திசார் முக்கியத்துவங்களை எடுத்தியம்புகின்றன. இவற்றினூடு பிள்ளை விருத்திய பற்றிய விடயங்களை அறியமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளை பற்றிய ஆய்வு முறைகள்

பிள்ளை பற்றிய ஆய்வுகளிலே குறுக்கு வெட்டு ஆய்வு முறை, நெடுங்கோட்டு அல்லது நெடுக்கு வெட்டு ஆய்வுமுறைகள் ஆய்வின் நோக்கம் கருதி மேற்கொள்ளப்படுகின்றன. ஆயினும், இங்கு நெடுங்கோட்டு ஆய்வே கூடுதலாகப் பிரயோகிக்கப் படுகின்றது. நடைமுறை விருத்திசார் உளவியலிலே ஆர்னல்ட் கெசல் (1880-1961) முதிர்ச்சிப் பொறிமுறைக்கு (Machanism of maturation) முக்கியத்துவம் கொடுத்து நெடுங்கோட்டு ஆய்வு மூலம் 15 வயது வரையான பிள்ளைகளின் இயல்புகளை ஆராய்ந்தார். சுய ஒழுங்குபடுத்த லினூடாக பிள்ளையிடம் உளவிருத்தி ஏற்படுவதைத் தனது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தினார்.

பிள்ளை பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளைச் செய்பவர்கள் இன்று நெடுங்கோட்டு ஆய்வு முறைகளையே பின்பற்றுகின்றனர். இதற்கு குறைந்த அளவிலான மாதிரிகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற வரையறை உண்டு. ஏனெனில் பெருந்தொகையான மாதிரிகளைக் கொண்டு நீண்ட காலத்திற்கு ஆய்வுகளைச் செய்வது கடினமாகும்.

நெடுங்கோட்டு ஆய்வுகளின் முக்கிய நன்மை பிள்ளையின் வளர்ச்சிக்கோலம் எவ்வாறு தொடர்ச்சியாக நிகழ்கின்றது என்பதைக்கண்டறிய முடிதலாகும். அத்துடன் முன்னர் நிகழ்ந்ததையும் ஒப்பிட்டு நோக்க வாய்ப்புண்டு. அதன் மூலம் நடத்தைக்கும் விருத்திக்குமுள்ள தொடர்புகளை விளங்கிக்கொள்ள முடியும். நெடுங்கோட்டு ஆய்வுகள் செலவு மிக்கவை நீண்டகாலம் கொண்டவை. தனியாள் ஒருவரால் இதனைச் செய்ய முடியாது. தற்போது இத்தகைய ஆய்வுகள் பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த ஆய்வாளர் குழுக்களி னாலேயே செய்யப்படுகின்றன. இந்த நெடுங்கோட்டு ஆய்வுகளில் அடுத்த பிரச்சினை நீண்டகாலப்பகுதிக்கு பரிசோதனைக்குட்படுபவர்கள் ஆய்வு செய்யப்படும் போது பரீட்சை உணர்வைப் பெற்று அதன் வயப்பட நேரிடலாம்.

பிள்ளை பற்றிய ஆய்வுகளுக்குப் பெற்றோர் வைத்திருக்கும் பிள்ளைகளின் வாழ்க்கைக் குறிப்புக்கள், இயற்கையான ஆற்றல்கள், ஆர்வங்கள் சமூகவிருத்தி, விளையாட்டுக்கள், பழக்க வழக்கங் கள், பேச்சு, உடல்வளர்ச்சிகள், மனவெழுச்சி நிலைகள் என்பன முக்கியமானவையாகவுள்ளன. இவற்றின் மாற்றங்களை அவதானிப்பு முறையைப் பயன்படுத்தி முழுமையாக அறிய முடியும். பிள்ளை விருத்தி ஆய்வுகளில் இன்று அவதானம் ஓர் ஆய்வு முறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. இம்முறையை சரியாகப் பயன்படுத்த நவீன கமராக்கள், சாதனங்கள், முறையியல்கள் கணினிகள் கையாளப்படுகின்றன. பிள்ளை விருத்திசார் உளவியலாளர்கள் பல்வேறு ஆய்வு களில் இருந்து பெறப்பட்ட நியமங்கள், மற்றும் உளவியல், உயிரியல், மானுடவியல், உடலியல், பிறப்புரிமை யியல் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளையும் தம்முள் இணைத்துக் கொண்டனர். இவ்ஆய்வுகளின் பேறுகள் மூலம் பிள்ளைகளின் விருத்திக் கோலங்கள், நியமங் களின், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கற்றல் தொடர்பான விடயங்கள், அவர்களது பிறழ்வு களுக்கான காரணங்கள், அவர்களுக்கு வழங்க வேண்டிய ஆலோசனை வழிகாட்டல் செயல்முறை கள் ஆகிய வற்றை அறிந்துகொள்ளலாம். இதன் மூலமாக அவர்களைச் சிறந்த எதிர்காலப்பிரசை களாக்கலாம். மேற்குறிப்பிட்ட ஆய்வுகளினூடாக பிள்ளை விருத்தி பற்றிய கொள்கைகள் உருவாகியமை பற்றி இனிக்கவனிப்பது பொருத்தமாக இருக்கும்.

## பிள்ளை விருத்தி பற்றிய கொள்கைகள்

ஏனைய விஞ்ஞானத்துறைகள் போன்று, உளவியல் ரீதியான பிள்ளைகள் பற்றிய விஞ்ஞான ஆய்வுகளும் ஏனைய ஆய்வுகளும் பிள்ளை விருத்தி பற்றிய கொள்கைகள் எழக் காரணமாக அமைந்தன. ஒரு கொள்கை எதிர்கால ஆய்வு களுக்குத் தேவையான கருதுகோள்களை வழங்கு கின்றது. மேலும், உருவாக்கப்பட்ட கொள்கைக ளைப் பரிசீலனை செய்ய உதவுகின்றது. பிள்ளை விருத்தி பற்றிய ஆய்வு வினாக்கள், யார், எது, ஏன், எப்போது என்ற முறையில் அமையும். சுகல குழந்தை உளவியலாளர்களும் இவை பற்றிய ஒருமித்த கருத்தைக் கொள்ளவில்லை. சில விடயங்களில் ஒத்த தன்மையையும் காட்டினார்கள். இவ் வகையில், உயிரியல் கொள்கைகள், சூழல் சார் அல்லது கற்றல் கொள்கைகள் உயிரியற் சூழல் இடைத்தாக்கக் கொள்கைகள், உளப்பகுப்பாய்வுக் கொள்கைகள் முக்கியமானவையாகவுள்ளன. பிள்ளைகளின் விருத்தியில் பரம்பரை, சூழல், முதிர்ச்சி, கற்றல் என்பன செல்வாக்குச் செலுத்து வதை இக்கொள்கைகள் எடுத்தியம்புகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்திசார் உளவியலில் மையப் பொருளாக அமைவது வளர்ப்பை விட இயற்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுதலாகும். அதற்கு அடுத்தபடியாகவே வளர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பரம்பரையின் செல்வாக்கும் உயிரியல் கொள்கையில் காணப்படுகின்றது. உயிரியல் ரீதியான பிள்ளை விருத்தியை பற்றி ஆர்னல்ட் கெசல் (1925) முழுமையான ஆய்வு ரீதியான உயிரியல் கொள்கையை வெளியிட்டார். இவரைத் தொடர்ந்து அத்துறைசார் ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. உயிரியல் கொள்கைகளைப் பின்பற்றி பல உளவியலாளர்கள் பேச்சு, வளர்ச்சி என்பவற்றில் பிள்ளைகளிடையே காணப்படும் வேறுபாடுகளை விளக்க அவர்கள் கருவுற்ற சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற காரணிகளைப் பயன் படுத்தினர். பரம்பரை பரம்பரையாகப் பெற்றுக் கொள்ளப்படும் உளநிலை இயல்பின் முக்கியத்து வத்தை அவர்கள் வலியுறுத்தினர். ஆதர் ஜென்சென் (1979), போன்ற உளவியலாளர்கள் பன்முக நுண்மதியில் காணப்படும் தனியாள் வேறுபாடு களில் பரம்பரையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

சூழல்சார் அல்லது கற்றல் கொள்கைகள் பிள்ளை விருத்தியில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. கருத்தரிப்புத் தொடக்கம் குழந்தை பிறந்து வளர்ந்து மரணிக்கும் வரையில் உயிரிகளின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் சூழல் செல்வாக்குச் செலுத்தும். பௌதிக, சமூக, உள, உலகங்களின் ஒட்டு மொத்தமே சூழல் ஆகும். அமெரிக்க உளவியலாளர் ஜே.பி.வாட்சன் சூழல்சார் பிள்ளை விருத்தியின் செல்வாக்கை எடுத்தியம்புகின்றனர். பிரித்தானிய தத்துவஞானி ஜோன் லொக் கூறிய "பிள்ளை தனது வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது அது ஒரு வெற்றுத்தாளாகவே இருக்கின்றது". சூழல் சார் அனுவங்களே அதனது விருத்தியில் முழுச்செல்வாக்குப் பெறு கின்றன" என்ற கருத்தை வாட்சனும் ஏற்றுக் கொண்டார். டி.லாமா என்ற பிரான்சிய சூழலியல் உளவியலாளர் கருத்துப் படி புதிய உள, உடலியற், பண்புகள் சூழலின் செல்வாக்கினாலேயே


John.B.Watson

பெறப்படுகின்றன. இவை பரம்பரை பரம்பரையாக அடுத்த தலைமுறையினருக்கும் கையளிக்கப்படு கின்றன என்றார். இதனை மானுடவியலாளரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். கற்றல் உளவியல் கொள்கைகள் எல்லாமே சூழலின் செல்வாக்கை இயம்பிநிற்கின்றன.

அடுத்து, உயிரி சூழல் இடைத்தாக்கக் கொள்கை பிள்ளை விருத்தியில் முக்கியம் பெறுகின்றது. தனியாள் விருத்தியில் உயிரியல் அல்லது அக விருத்திக் காரணிகளும், சூழற் காரணி களும் வகிக்கும் பங்கு இங்கு முதன்மை பெறுகின்றது. பிள்ளை புற உலகுடன் இடைத்தாக்கத்தில் ஈடுபடு வதை உயிரியல் காரணிகள் சாத்தியமாக்குகின்றன. பியாஜே இக் கொள்கையைப் பயன்படுத்தி அறிவுசார் விருத்தியையும், ஒழுக்க விருத்தியையும் விளக்கினார். உயிரி சில அமைப்பு ரீதியான தன்மையைக் கொண்டது. இவ்வாறே சூழலும் உள்ளது என்பது பியாஜேயின் எடு கோளாகும். தொடர்ந்து இவற்றிற்கிடையே இடம் பெறும் இடைத் தாக்கம் மாற்றங்களுக்கு இட்டுச் செல்கின்றன. அத்தடன் தனியாள் நடத்தையைத் தீர்மானிக்கும் சில அடிப்படையான உள அல்லது ஒழுக்க ரீதியான அமைப்புக்களுக்கும் இந்த இடைத்தாக்கம் இட்டுச் செல்கின்றது என பியாஜே எடுத்துக்காட்டினார். இவரது முக்கிய இடைத்தாக்க எண்ணக் கருக்களாக திரளமைப்பு, தழுவல், ஒழுங்கமைப்பு, தன்மயமாதல், தன்னமைவாக்கல் என்பன முக்கியம் பெறுகின்றன.


பியாஜே

மேற்கூறப்பட்ட மூன்று கொள்கைகளி லிருந்து வேறுபட்ட தாக சிக்மன் பிராய்டின் உளப் பகுப்பாய்வுக் கொள்கை உள்ளது. சகல விதமான பிள்ளையின் விருத்தி அம்சங்களுக்கும் அடிப்டையான இயல்பூக்க உந்தல்கள் ஊக்குவிப்பாக உள்ளன. இதனை பிராய்ட் லிபிடோ (Libido) உந்துகை என்கிறார். பாலுந்தல்கள் உயிர்காப்பு உந்தல்கள் (பசி, வலி)


Sigmund Freud



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் உந்தல்கள் ஆகியவற்றில் பாலுந்தலே முதன்மை பெறுவதாகக் கூறுகின்றார். ஒரு தனியாளின் வாழ்வுக்காலம் முழுவதுமே இந்த உந்தல்களை நிறைவு செய்யும் வழிமுறைகள் தடைப்பட்டால் நிறைவேறாத ஆசைகளினூடாக உளப்பாதிப்புக்கு உள்ளாக்கப்படுதலை எடுத்து இயம்புகின்றார். பிள்ளைப்பருவ உந்தல்களை இட், அகம், அதியகம் என்ற ஆளுமைக் கூறுகளாக இயம்பி ஐந்து முக்கிய உள — பாலியல் கட்டங்களை எடுத்துக்கூறுகின்றார்.

பிராய்ட்டினுடைய கொள்கை பிள்ளை விருத்தி பற்றிய ஆய்வில், பிள்ளைப்பருவ அனுவங்கள், அதன் பின்னைய விருத்தியிலும் விருத்திசார் நோக்கிலும் கொண்டிருந்த தாக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியது. இது விருத்திசார் உளவியலில் ஒரு திருப்பு முனையாக அமைகின்றது. எனினும், உளப்பகுப்பாய்வு உளவியலுக்கும், பரிசோதனை உளவியலுக்குமிடையே பிணைப்பை ஏற்படுத்துவது சாத்தியமாகவில்லை. இவை தனியாகவே உள்ளன.




பிராய்ட்டின் கொள்கை தனியாள் ஒருவருடைய எழுச்சி சார்பான, நடத்தை சார்பான நெறிபிறழ்வுகளை இனம் காண்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டது: விஞ்ஞான பூர்வமானது எனவும் விமர்சிக்கப்படுகின்றது. தற்போது இதில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டு உள நோய் மருத்துவர்களால் "மருத்துவ உளவியலில்" இக்கொள்கை சிகிச்சையளிக்கப் பிரயோகிக்கப்படுகின்றது. பிரபல உளவியலாளர் களில் பிராய்டை பின்பற்றுபவர்களான எரிக்சன் (Erikson) போன்றவர்கள் நவ பிராய்டியன்கள் (Neo Freudians) என அழைக்கப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கொள்கையும் எந்த அம்சங்களை வலியுறுத்துகின்றன என்பதிலேயே வேறுபாடுகள் உண்டு. ஒரு கொள்கைவாதி உருவாக்கிய கருதுகோள்களை ஏனையோர் வெவ்வேறு முறைகளில் பரீட்சித்து ஒரே நேரத்தில் பல ஆய்வுகளை நடாத்தி கொள்கைகளை அறிவியல் ரீதியாக இணைத்துப்பார்க்க முடியும். ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளமுடியும். ஒரு கொள்கை சரியானது என்றோ மற்றக்கொள்கை பிழையானது என்றோ இங்கு கூறுவதற்கில்லை. ஒவ்வொரு கொள்கை யிலும் வலுவான அம்சங்கள் உண்டு. மேலும் பல புதிய விடயங்களும் இவை தொடர்பான ஆய்வுகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஓர் அனுபவம் மிக்க ஆசிரியர் அல்லது வழிகாட்டி இக்கொள்கைகளை இணைத்துக்கொள்ளுமிடத்து, பிள்ளைகளை விளங்கிக்கொள்ளவும், அவர்களுக் குக் கற்பிக்கவும், வழிகாட்டவும், பெற்றோருக்கு ஆலோசனை கூறவும், சமூகத்திற்கு விழிப் புணர்வை ஏற்படுத்தவும், ஒன்றுக்கு மேற்பட்ட கருத்து நிலைகளில் பணி புரியமுடியும். பல்வேறு கொள்கைகள் இருப்பதனால் அவை ஒன்றை ஒன்று நிரப்பி முழுமைப்படுத்தவும் உதவுகின்றன.

## கற்றல்

**"கற்றல் என்பது சூழல் தேவைகளை நிறைவு செய்வதற்காக எமது நடத்தையில் ஏற்படுகின்ற ஒவ்வொரு மாற்றங்களையும் உள்ளடக்கிய செயற்பாடு ஆகும்".**

– Gardner & Murphy

**"கற்றல் என்பது பயனுள்ள புதிய நடத்தைகளை உருவாக்கவோ அல்லது பயனற்ற பழைய நடத்தைகளை நீக்குவதற்கோ அனுபவங்களைப் பயன்படுத்தும் முறையாகும்."**

– Hentry P.Smith

**"கற்றல் என்பது மனித வாழ்வின் ஒரு பகுதியாகும். இது தனியனை அவரது சூழலிற்கு இசைந்து நடப்பதற்கு ஊக்குவிக்கும் சக்தியாகும். அத்துடன் இலக்கை அடைவதற்காக தனிநபரைத்தூண்டுகின்ற ஒரு செயன்முறையே கற்றல் ஆகும்"**

– Robinson & Horks



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பாஸ்கரன்

# மாணவர்களது அடைவு விருத்தியில் ஆசிரியர்களது பண்புத்தர விருத்தி

"அனைவருக்கும் தரமான கல்வி" என்ற நிலை இன்று கல்விசார் செயற்பாடுகள் யாவற்றிலும் வியாபித்திருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. பாடசாலைகளில் தரமான கல்விக்கான வேலைத்திட்டங்கள் எல்லாப் படிநிலைகளிலும் அமுலாக்கப்பட்டு வருகின்றன. அறிவுசார் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்காக முன்வைக்கப்பட்ட "அனைவருக்கும் தரமான கல்வி" கருப்பொருள் பாடசாலைக்கல்வியில், குறிப்பாக, வடக்கு, கிழக்கு மற்றும் தமிழ்ப்பிரதேசங்களில் வெற்றிகண்டுள்ளதா அல்லது வினைத்திறன் மிக்கதா? என்ற வினாவை எம் முன் கொண்ட வந்துள்ளதை, கல்வித்தரம் தொடர்பான அண்மைக்காலப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்தியுள்ளன. இந்தப் பின்னனியில் கல்வித்தரத்தினை மேம்படுத்துவதில் மாணவர்களது அடைவு தொடர்பான காரணிகளைப்பற்றி நோக்குவது பொருத்தமானதாகும்.



மாணவர்களது அடைவானது அவர்களது இனம், பால், கற்கும் வகுப்பு, பாடசாலை, அவர்களது முன்னடைவு, பாடசாலைகளில் மாணவர்களின் வரவொழுங்கு என்பவற்றில் தங்கியுள்ளது. மேலும் மாணவர்களது அடைவானது பாடசாலை தொடர்பான காரணிகள், ஆசிரியர், கற்பித்தல் தொடர்பான காரணிகள், மாணவர் தொடர்பான காரணிகள், மாணவர்களது கற்றலுக்கு குடும்பத்தின் ஒத்துழைப்பு தொடர்பான காரணிகள் ஆகியவற்றிலும் தங்கியுள்ளது.

மாணவர்களது தாழ் அடைவுக்கு அவர்களது தாழ்தரத்திலான எதிர்பார்ப்புக்கள், வகுப்பறைகளில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள், பாதுகாப்பற்ற பாடசாலைகள், பொருத்தப்பாடான கற்றல் கல்வி நிலைகள் பாடசாலைகளில் காணப்படாமை, பொருத்தப்பாடற்ற போதனா முகாமைத்துவத் தலைமைத்துவம் பாடசாலை தொடர்பான காரணிகள் கவனத்தில் கொள்ளப்படக்கூடியனவாகும். போரினாலும் அதன்பின் ஏற்பட்ட மாறுதல்களாலும் பாடசாலைச்சிறார்கள் பல்வேறு உடல், உள வடுக்களைத் தாங்கி நிற்கும் இந்நிலைமைகளிலிருந்து விடுபடுவதற்குப் பாடசாலை தொடர்பான காரணிகள் சீர்செய்யப்படுவது அவசியமாகும்.

மாணவர்களிடம் கற்றலில் ஆர்வத்தினை ஏற்படுத்துதல், ஆர்வத்தினை ஏற்படுத்தக்கூடிய வகையில் கற்றற் செயற்பாடுகளை வடிவமைத்தல், ஊக்கப்படுத்துதல், தமது கற்றலுக்குத் தாமே பொறுப்பானவர்கள் என்பதனை உணர்த்துதல் ஆகிய மாணவர் தொடர்பான கற்றல் காரணிகள், மாணவர்களது அடைவை மேம படுத்துவதற்கு கவனங்கொள்ள வேண்டிய விடயங்களாகும். பொருத்தப்பாடான ஆலோசனைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டல்கள், கண்காணிப்புச் செயன்முறைகளுக்கூடாக இக் காரணிகளை வலுவூட்டுதல் என்பனகல்விச் சமூகத்தின் கை களில் பலமாகத்தங்கியுள்ளன.

மாணவர்களது கற்றலை ஊக்கப்படுத்துவதற்கு, அவர்களது குடும்பத்தின் பங்களிப்பும் இன்றியமையாத தாகும். பாடசாலைச் செயற்பாடு களில் குடும்ப அங்கத்தவர்களின் பங்களிப்பு, மாணவர்களது கற்றலை மீளவலியுறுத்து வதற்கான குடும்ப அங்கத்த வர்களின் திறன்களும் ஆதரவும் பாடசாலைச் செயற்பாடுகளை வீட்டில் தொடர்ந்து மேற்கொள்வதற்கான குடும்ப அங்கத்தவர்களின் ஈடுபாடு என்பனவும் இன்றியமையாதனவாகும்.



மேற்கூறப்பட்ட காரணிகளை விட, மாணவர்களது அடைவில் முக்கியமாக செல்வாக்குச் செலுத்துவது ஆசிரியர்களின் பண்புத்தரமாகும். மாணவர்களது அடைவானது அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களது வினைத்திறனில் தங்கியுள்ளது. வினைத்திறன் மிக்க ஆசிரியர் வழிகாட்டலில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மாணவர்களது அடைவுடன் ஒப்பிடும் போது வினைத் திறன் குறைந்த ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர் களது அடைவு மிகவும் தாழ்வான நிலையில் காணப்படுவதாகவும், இதன் காரணமாக மாணவர் களிடையே அடைவு இடைவெளி காணப்படுவதாக வும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

ஆசிரியர்களது பண்புத்தரமானது அவர்களது கற்பித்தல் அனுபவம், பாட, விடய அறிவு, தொழிலில் விசுவாசம், அர்ப்பணிப்பு ஆகிய பிரதான கூறுகளுடன் ஒன்றிணைந்ததாகும். இப்பண்புத் தரத்திற்கேற்ப ஆசிரியர்களது வினைத்திறன் காணப்படும். வினைத்திறன் மிக்க ஆசிரியர் பின்வரும் நான்கு பிரதான பண்புகளைக் கொண்டிருப்பார்.

1. விடய அறிவு

2. கற்பித்தல் அனுபவம்

3. வாண்மைத்துவத் தகைமைகள்

4. புலமைசார் ஆற்றல்

ஆசிரியர் ஒருவர் மேற்கூறிய நான்கு பண்பு களில் யாதாயினும் ஒன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வற்றில் குறைபாடுடையவராய் இருப்பாராயின் அவர் வினைத் திறனற்ற ஆசிரியராகக் கருதப் படுவரார். வினைத் திறனான ஆசிரியர்களை உருவாக்குவது என்பது ஆசிரியர் களிடையே இத்திறன் களின் பண்புகளை விருத்தி செய்வதுடன் தொடர்ந்து கணிப் பீட்டிற்கு உட்படுத்தி நெறிப்படுத்து வதுடன் தொடர்புபட்டதாகும்.

ஆசிரியர்களது விடய-பாட அறிவானது மாணவர்களது ஆற்றுகை விருத்தியில் செல் வாக்குச் செலுத்துகின்றது என்பது ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலத்துக்குக் காலம் மாற்றமுறும் விடயங்கள், கலைத்திட்ட மாற்றங்கள் என்பன தொடர்பான அறிவினை புதுப்பித்துக் கொள்ளவும் அவற்றினை மாணவர்களுக்குப் பரிமாறிக் கொள்வதற்குமான ஆற்றலையும் ஆசிரியர்கள் விருத்தி செய்யவேண்டும்.


ஆசிரியர்களது கற்பித்தல் அனுபவமும் மாணவர்களது அடைவும் உயர்வான நேர் இணைபு கொண்டிருப்பதனை ஆய்வின் பெறு பேறுகள் சுட்டிக் காட்டுகின்றன. கற்பித்தல் அனுபவம் கூடிய ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர் களது அடைவு உயர்வாகக் காணப்படுகின்றது. அதேவேளை, கற்பித்தல் அனுபவம் குறைந்த ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர்களது அடைவு தாழ்வாகக் காணப்படுவதுடன் மாணவர்களது இடைவிலகல் வீதமும் உயர்வாக காணப்படுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆசிரியர் களது கற்பித்தல் அனுபவமானது ஆசிரியர்களது ஏனைய மூன்று பண்புகளை விட மாணவர்களது அடைவில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்பதனை சில ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டு கின்றனர் என்பதும் இவ்விடத்தில் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

மாணவர்களது அடைவு விருத்தியில் முக்கியமாக செல்வாக்குச் செலுத்தும் பிரதான அம்சங்களாக ஆசிரியர்களது வாண்மைத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைமைகள் கருதப்படுகின்றன. உயர்வான வாண்மைத்துவத் தகைமைகள் உடைய ஆசிரியர்கள் மாணவர்களுடன் கற்றல் கற்பித்தல் செயன் முறையில் சிறப்பாக செயற்படுவதாகவும் அதனூடாக உயர்விளைவுகளை மாணவர்கள் சார்பாகப் பெறுவதாகவும் குறிப்பிடும் ஆய்வாளர்கள் வாண்மைத்துவத் தகைமைகள் குறைந்த ஆசிரியர் களிடம் கற்கும் மாணவர்கள் குறிப்பிடத்தக்க அளவு விளைவுகளை வெளிக்காட்டவில்லை எனக் குறிப்பிடுகின்றனர்.




மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு அப்பால் ஆசிரியர்களது புலமை, தொழிலில் விருப்பு, அர்ப்பணிப்பு என்பனவும் மாணவர்களது அடைவில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பாடசாலைகளில் கற்பிக்கும் வினைத்திறன் மிக்க ஆசிரியர்களினாலேயே வெற்றிகரமான மாணவர்களை உருவாக்க முடியும். வினைத்திறன் மிக்க ஆசிரியர்கள் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை மேலே உள்ள வரைபடம் சுட்டிக் காட்டுகின்றது.

மாணவர்களது அடைவில் பல்வேறு காரணிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை இதுவரை நோக்கினோம். இக்காரணி களை இனங்கண்டு வெற்றிகொள்வதன் மூலம் மாணவர்களது அடைவினை மேம்படுத்த முடியும்.

பாசாலைக்குப் பாடசாலை, வகுப்பறைக்கு வகுப்பறை, மாணவர்களுக்கு மாணவர்கள் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளுடன் ஆசிரியர்கள் தமது செயன்முறைகளில் ஈடுபடுகின்றனர். ஒத்ததன்மை யுடைய ஆசிரியர்களை, மாணவர்கள் பெற்றுக் கொள்வதென்பது கல்வி முறை மையில் நடைமுறைச் சாத்திய மற்றதாகும். இருந்த போதிலும் தரமான ஆசிரியர்களைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் இன்றியமையாதவையாகும். தரமான ஆசிரியர்களை வகுப் பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டுமாயின், ஆசிரியர்களது தரம்சார் அம்சங்கள் இனங்கண்டு விருத்தி செய்யப்பட வேண்டும். இதனூடாக மாணவர்களது அடைவு தொடர்பான ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும்.

1. வலயங்களினால், பாடசாலை யின் தரத்திற்கேற்ப ஆசிரிய ஆளணிப் பகிர்வு இடம்பெற வேண்டும்.
2. பகிரப்பட்ட ஆளனியினருக்குப் பொருத்தமான பாடங்கள் அதிபரினால் ஒப்படைக்கப்பட வேண்டும்.
3. பாடசாலை, கோட்டம், வலய மட்டங்களில் ஆசிரியர்களது பாட விடயம் சார் அறிவு மீள்பரிசீலனைக்கு உட் படுத்தப்பட வேண்டும்.
4. ஆசிரியர்களது ஆசிரியம் சார் அறிவுத் திறன்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.
5. ஆசிரியர்கள் தமது தொழில்சார் திட்டங்கள், அமுலாக்கச் செயன்முறைகள் மற்றும் பாட சாலைச் செயற்பாடுகளில் பொருத்தமான தரங்கணிப்பீட்டுச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆசிரியர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கலைத் திட்டம், இணைக்கலைத்திட்டம் தொடர்பான ஆசிரியர்களது வினைத்திறன் கண்காணிக்கப் படல் வேண்டும்.

7. வினைத்திறனான ஆசிரியராவதற்குத் தேவையான உதவிகள், தரங்கள், செயற்பாடு களை இனங் கண்டு தர விருத்திச் செயற்பாடு களை அமுல் படுத்தல் வேண்டும்.

8. ஆசிரியர்களது பண்புத்தரத்தினை மேம்படுத்து வதற்கான வாண்மை விருத்திச் செயன்முறை களை நடைமுறைப்படுதத்தல் வேண்டும்.

9. வாண்மை விருத்திச் செயன்முறைகள் தொடர் செயன்முறையாக இருக்க வேண்டும்.

- ஆசிரியர் தொடர்ந்து செயற்படு கற்போனாக இருக்க வேண்டும்.
- விடய அறிவு, ஆசிரியர்சார் அறிவு என்ப வற்றினை மையப்படுத்தியதாக வாண்மை விருத்திச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.
- பின்னூட்டல்கள், மீள்பிரதிபலிப்பு, பரிச்சயம் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- வாண்மை விருத்திச் செயன்முறை, திட்ட மிடப்பட்ட ஒழுங்கு முறையில் இடம்பெற வேண்டும்.

பாடசாலைக் கல்வியின் தரவிருத்திக்காக பல்வேறு செயற்பாடுகள், முன்னைய காலங்களை விட, அண்மைக்காலங்களில் மிக அதிகளவில், தரஉள்ளீடுகள், செயன்முறைகள் என்பவற்றினூடு மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் வடக்கு, கிழக்கு மற்றும் தமிழ்ப்பிரதேசங்களில் கல்வி தொடர்பான வெளியீடுகள், பெறுபேறுகள் திருப்திகரமாகக் காணப்படாமை, மிகவும் கவலைக்குரியதாகும். கற்போரின் பாட அறிவை விருத்தி செய்தல், அடைவு மட்டங்களை உயர்த்துதல், சித்தியை ஏற்படுத்துதல், விரயங்களைக் குறைத்தல், வழுக்களையும் பலவீனங்களையும் உடனடியாக நீக்க முனைதல் ஆகிய பண்புகளைக் கொண்ட தரமேம்பாட்டு முகாமையைக் கருத்திற் கொள்வது சாலப் பொருத்தமாகும்.

## நுண்ணறிவு

**"கிரகித்தல், நெறிப்படுத்தல், திறனாய்தல் ஆகிய திறன்களே நுண்ணறிவாகும்"**

– Alfred Binet

**"பெருகி வரும் சிக்கல் நிறைந்த ஒரு சூழ்நிலைக்கேற்ப தன்னைச் சரிசெய்து கொள்ளும் திறமையே நுண்ணறிவாகிறது"**

– Spencer

**"புதிய தேவைகளுக்கேற்ப சிந்திக்கும் திறனும், வாழ்க்கையிலேற்படும் பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு பொருத்தப்பாடு காணும் உள்ளார்ந்த ஆற்றல்"**


– Sternberg

**"நியாயிக்கும், திட்டமிடும், பிரச்சினைதீர்க்கும், கருத்துநிலையில் சிந்திக்கும், சிக்கலான எண்ணங்களைக் கையாளும், வேகமாக கற்கும், அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளும் ஆற்றலுடன் தொடர்புடைய ஓர் பொதுவான உள ஆற்றலுடமையே நுண்ணறிவு"**

– Gott Fredson



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.பௌநந்தி

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் இடைநிலை வகுப்புகளில் மொழித்திறன் விருத்தியும்

மொழி என்பது கருத்துப்பரிமாற்ற ஊடகமாகும். அதை விடவும் சிந்தனையின் ஊடகமாவும் அறிவினைச் சேமித்து வைக்கும் ஊடகமாவும் ஆக்கங்களை உருவாக்கும் கருவியாகவும் மொழி காணப்படுகிறது என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டியது. ஒருவனது மொழி விருத்தி அவனது ஆளுமை விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது மொழியியலாளர்களின் கருத்தாகும்.

தனக்குப் புறத்தேயுள்ள உலகுடன் தொடர்புகொள்ள மொழியைக் கற்றுக்கொள்ளும் குழந்தை பாடசாலைக்கல்வியின் ஆரம்ப வகுப்புக்களில் மொழியின் அடிப்படைத் திறன்களை முறைப்படி கற்க ஆரம்பிக்கின்றது. இடைநிலை வகுப்புக்களில் (தரம் 6-11) மொழியைத் தனக்கு வசப்படுத்திக் கொள்கிறது. முக்கியமாக மொழியை உள்வாங்கிக்கொண்டு அதனூடாக சிந்திக்கவும் எண்ணக்கருக்களைப் பெற்றுக்கொள்ளவும் முயலுகின்றது. இந்நிலையில் மொழிக்கல்வியில் யாதேனுமொரு குறைபாடு இருக்குமாயின் குறிப்பிட்ட பிள்ளை மொழிப்பாடத்தில் மட்டுமல்லாது ஏனைய பாடங்களிலும் சரியான துலங்கலை வெளிப்படுத்தாது எனலாம்.

மொழியின் செயற்பாடுகள் அடிப்படையில் இரண்டு நிலைகளில் நிகழ்கின்றன.

1. உள்வாங்குதல் (கிரகித்தல்) (Comprehension)

2. வெளியிடல் (Expression)

இந்த இரண்டு நிலைச்செயற்பாடுகளினதும் ஒருங்கிணைந்த செயற்பாடே மொழிப்பிரயோகம் ஆகும். இச்செயற்பாடுகள் மொழியின் ஒலிவடிவத்தின் மூலமோ வரிவடிவத்தின் மூலமோ இடம்பெறலாம்.

இந்நிலையில் மொழியின் இரண்டு அடிப்படைச் செயற்பாடுகளினூடாகவும் பிள்ளையிடம் நான்கு வகையான மொழித்திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும். அடிப்படை மொழித்திறன்களாவன.

1. கேட்டல்

2. பேசுதல்


3. வாசித்தல்

4. எழுதுதல்

மொழித்திறன் விருத்திச் செயற்பாட்டை கீழ்வருமாறு காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வகுப்பறை மட்டக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது மொழிசார்ந்த அடிப்படைத் திறன்கள் நான்கும் விருத்தியுறும் வகையில் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரதும் கடமையாகும். அத்தோடு, ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் மொழித் திறனை ஏற்படுத்துவதில் உதவமுடியும் என்பதனையும் அவர்கள் மனதிற்கொள்ள வேண்டும்.

மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள் வகுப்பறை மட்டக் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. இவை வகுப்பறைக்கு வெளியேயும் பாடசாலைக்கு வெளியேயும் நடை பெறுவதாகும். இந்த அடிப்படையில் இடைநிலைப் பிரிவு மாணவர்களிடம் இணைப்பாட விதானச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்துவதன் மூலமும் மொழித்திறன்களை விருத்தி செய்ய முடியும்.

இடைநிலை வகுப்புக்களைக்கொண்ட பாடசாலை ஒன்றிலே நடைமுறைப்படுத்தக்கூடிய, மொழித்திறனை விருத்தி செய்யக்கூடிய இணைபாட விதானச் செயற்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்:

1. மாணவர் மன்றச் செயற்பாடுகள்
2. சாரணியம், கடேட் போன்ற அமைப்புக்கள்
3. நவராத்திரி, சமயப்பெரியாரது குருபூசைத் தினம், தமிழறிஞர்களது நினைவுதினம் போன்ற நிகழ்வுகள்
4. பாடசாலை விளையாட்டுப்போட்டி, பரிசில் நாள் போன்ற பாடசாலை சார்ந்த வைபவங்கள்
5. பாடசாலை மட்டத்திலும் அதற்கு அப்பாலும் நடத்தப்படுகின்ற பல்வேறு போட்டிகள், குறிப்பாக பேச்சு, கவிதை, கட்டுரை, விவாதம், நாடகம் போன்றன.
6. காலைக்கூட்டம், நற்சிந்தனை போன்ற நிகழ்வுகள்.
7. வகுப்பு ரீதியாகவும், பாடசாலை ரீதியாகவும் நடைபெறும் பத்திரிகை, சஞ்சிகை வெளியீடுகள்.
8. சுற்றுலா, களப்பயணம் போன்ற நிகழ்வுகள்

இவை அனைத்தும் ஒரு பாடசாலையில் நிகழுமென்று எதிர்பார்க்க முடியாது. நிகழ வேண்டும் என்ற நியதியுமில்லை. எனினும் மாணவர்களிடம் மொழித்திறனை விருத்தியடையச் செய்வதில், மாணவரிடம் ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதில் மேலே சொல்லப்பட்ட இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பது மறுப்பதற்கில்லை. பாடசாலையின் இச்செயற் பாடுகள் மூலம் மாணவன் ஒவ்வொருவனுக்கும் கிடைக்கும் சந்தர்ப்பம் பாடசாலைக்கு வெளியே கிடைக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாது. எனவே பாடசாலையின் பல்வேறு வளங்களையும் கருத்திற் கொண்டு, இந்நிகழ்வுகளைத் திட்டமிட்டு ஒழுங்கு படுத்துவதும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பங்களையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதும் ஆசிரியர் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

இணைபாடவிதானச் செயற்பாடுகளினூடான இந்நிகழ்வுகளில் மாணவர்களது ஈடுபாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்புமே அதிகமானதாக இருத்தல் வேண்டும்.



- ❖ அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.
- ❖ அனைத்து மாணவர்களிடமும் இயலுமானவரை மொழிசார்ந்த நால்வகைத் திறன்களும் வளர்த்தெடுக்கப்படும் வகையில் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.
- ❖ நிகழ்வுகளுக்காக மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.
- ❖ மாணவர்களுடைய தனிப்பட்ட ஆளுமைகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்
- ❖ எந்த மாணவனையும் ஒதுக்கிவிடக்கூடாது.
- ❖ நிகழ்வுகளை தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்த வேண்டும்.
- ❖ மாணவர்களுக்குப் பாராட்டுக்களையும் பின்னூட்டல்களையும் வழங்கவேண்டும்.

இவ்வாறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து நடைமுறைப் படுத்தும் போது இடைநிலை வகுப்பு மாணவர்களிடம் மொழித்திறன் விருத்தியை ஓரளவிற்கேனும் வளர்த்துவிட முடியும்.

கவின் தமிழ் மன்றம் ஒன்றை நடத்தும் போது மாணவர்கள் பேசுவர், பாடுவர், கதைகூறுவர், தலைவர் தலைமையுரையாற்றுவார், மாணவர்கள் கருத்துரை வழங்குவர் இவற்றினூடாக மாணவர்களிடம் பேச்சுத்திறன் விருத்தியடையும். இந்நிகழ்வுகளை மாணவர்கள் ஆர்வத்தோடு கேட்டுக் கிரகிப்பர். இதனால் கேட்டற் திறன் விருத்தியுறும், செயலாளர் அறிக்கை எழுதுவார். இதனால் எழுத்துத்திறன் விருத்தியுறும், செயலாளர் அறிக்கை வாசிப்பர், பத்திராதிபர் செய்திகளை வாசிப்பார், இவற்றினால் வாசிப்புத்திறன் விருத்தியடையும்.

வகுப்பறை மட்டத்தில் அல்லது பாடசாலை மட்டத்தில் சுவர்ப்பத்திரிகை, கையெழுத்துச் சஞ்சிகை, சஞ்சிகை போன்றவற்றை வெளியிடும் போது எழுத்துத்திறனும் வாசிப்புத்திறனும் சிறப்புற விருத்தியடையும். அவை பற்றி கருத்துரைகளை மாணவர் களே வழங்கும்போது பேச்சுத்திறனும் கேட்டற் திறனும் விருத்தியடையும்.


இணைப்பாடவிதானச் செயற்பாடுகளைத் திறம்படத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாணவர்களிடத்தில் மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்த முடியும். இது ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டலிலேயே தங்கியுள்ளது. குறிப்பிட்ட ஒரு மாணவனையோ ஒருசில மாணவரையோ ஒரு நிகழ்வில் அல்லது போட்டியில் பங்குகொள்ளச் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதன் மூலம் மாணவர்கள் எல்லோரிடமும் மொழித்திறன் விருத்தியின் நான்கு திறன்களையும் வளர்த்துவிட முடியாது என்பதை ஆசிரியர்கள் மனதிற்கொண்டு இடைநிலை வகுப்பு மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டும். இதன் மூலம் மொழியாளுமைமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் முக்கிய பங்காற்ற முடியும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி க.கஜவிந்தன்

# குழந்தைகள் கற்றலும் உடலியல், உளவியல் பிரச்சினையும் ஓர் நோக்கு



சம காலத்தில் உலகமெங்கும் குழந்தைகள் கல்வி எனும்போது முக்கியப்படுத்தப்பட முடியும் கற்றலில் உள்ள சிரமமாகும் (Learning Disability Dyslexia). இது பற்றிய விழிப்புணர்வு பெற்றோர், ஆசிரியர் மத்தியில் எமது சமுதாயத்தைப் பொறுத்த வரை மிகக் குறைவாகவே உள்ளது. இதனால் குழந்தைகளுக்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கப் பல வழிகளில் முயற்சிக்கின்றனர். அன்பாகச் சொல்லியும் பயமுறுத்தியும் கற்றுக் கொடுக்கின்றனர். ஆனால், அக்குழந்தையால் எதனையும் கற்க முடியாமல் உள்ளது. கற்றல் என்றாலே அதற்கு வெறுப்பாக உள்ளது. ஆசிரியரும் பெற்றோரும் வற்புறுத்துவதால் சிறு பொய்களைச் சொல்லித் தப்பிக்க முயற்சிக்கிறது. குழந்தைகளுக்குக் காலப்போக்கில் இது மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதனால் பாடசாலையிலிருந்து வெளியேறும் நிலையும் வீட்டை விட்டு ஓடிப் போகும் நிலையும் ஏற்படுகிறது.

உண்மையில் இங்கு ஆசிரியரும் பெற்றோரும் முக்கியமாக அக்குழந்தைக்குக் கற்றலில் சிரமம் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஒரு குழந்தை வேறு குழந்தைகளைப் போல உடல் தோற்றம் இருந்தாலும் மூளை வளர்ச்சி, அறிவு வளர்ச்சி என்பவற்றில் பிரச்சினை இருக்கும். இதனால் அவர்கள் கற்றதை மறத்தல், உச்சரித்தல், எழுதுதல், திரும்பச் சொல்லுதல், ஞாபகம் வைத்திருத்தல் என்பன எல்லாம் குழந்தைகளுக்குக் கஷ்டமாக உள்ளது. உளவியலாளர்கள் இதற்குக் காரணம் மூளையோடு தொடர்புடைய நரம்புகள் தொடர்பான பிரச்சினைகள் என்கின்றனர். இப்பிரச்சினையை அவர்கள் புரிந்து கொண்டு தகுதி வாய்ந்த உளவியலாளரை நாடிச் சில அடிப்படைப் பரீட்சைகள் வைப்பதன் மூலம் அடிப்படையில் என்ன பிரச்சினை என்பதை உளவியல் பரிசோதனையூடாகக் கண்டு அதை நிவர்த்தி செய்யலாம். இதை ஆசிரியரும் பெற்றோரும் புரிந்து கொள்ள வேண்டும். அதை விடுத்துக் குழந்தைகளைப் படிக்கச் சொல்லி வற்புறுத்துவதால் எந்தப் பலனும் இல்லை.

## "டீஸ்லெக்ஸியா" என்றால் என்ன?

"டீஸ்லெக்ஸியா" என்ற சொல் கிரேக்க மொழிச் சொல்லாகும். டீஸ் (dys) என்றால் கடினம். லெக்ஸிக்ஸ் (lexis) என்றால் சொற்கள் சம்பந்தப்பட்ட மொழி(verbal language). மொழி கற்கும் எழுதும் திறனில் குறைபாடுகள் உள்ளவர்களையே நாம் "டீஸ்லெக்ஸிக்ஸ்" (Dyslexia/ Learning Disability) என்று கூறுகிறோம்.


அக்குழந்தைகளுக்குப் பேச்சு(speech), கண் பார்வை(vision), கேள்விப் புலன் உறுப்புகள் (hearing), மூளை(brain) முதலியன இயல்பாகவே இருக்கும். எனினும் அவர்கள் படிப்பதிலும்(reading)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவதிலும்(writing) உச்சரிப்பு(spelling) முதலிய ஆற்றல்களை குறைவாக இருப்பார்கள். அம்மாதிரியான குழந்தைகள் எழுத்துக் கூட்டி மிகவும் சிரமப்பட்டு வார்த்தைகளைப் படிப்பார்கள். வார்த்தைகளைப் புரிந்து கொள்ளும் திறன், வாக்கியமாக படிப்பதில், எழுதுவதில் சிரமம் முதலியன இருக்கும்.

## காரணங்கள்(Causes)




குழந்தையின் மூளையில் அதாவது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்கள் தான் இதற்குக் காரணம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். அதற்காக டிஸ்லெக்ஸியா(Dyslexia) இருக்கும் குழந்தைகளுக்கு மூளையில் பாதிப்போ குறையோ உள்ளது என்று சொல்ல முடியாது. இவர்களுக்கு மூளை ஸ்கேன்(Scan) செய்து பார்த்தாலும் சாதாரணமாகத் தான் இருக்கும். உண்மையில் வார்த்தைகள், அவற்றின் ஒலி வடிவங்கள்-இரண்டும் சரியாகப் பொருந்தாமல் போவது தான் டிஸ்லெக்ஸியாவுக்கு முக்கிய காரணம்.

"டிஸ்லெக்ஸியா" உள்ள குழந்தைக்கு மொழி கற்கும் திறனில் குறைபாடுள்ளதால் நரம்பு மண்டலத்தின் மேலே குறிப்பிட்ட செயலிடத்தில் (Circuit) குறைபாடுள்ளதால் வார்த்தை கோவையாக வராது, விட்டு விட்டு வரும், வார்த்தைகளைத் தேடுவார்கள், இதனால் படிப்பில் அவர்களுக்கு நாட்டம் குன்றிப் போகும், ஆர்வம் இருக்காது. இருப்பினும் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் சராசரி அல்லது மேம்பட்ட நுண்ணறிவு(IQ) படைத்தவர்கள், இவர்கள் திறமையுள்ளவர்கள், கற்பனை மிகுந்தவர்கள். ஆனால், குழந்தைகள் வளர்ந்த பின்னும் இப்பிரச்சினையை எதிர் நோக்குகின்றனர். புள்ளி விவரங்களின் படி ஒவ்வொரு பாடசாலையிலும் 15 மாணவர்கள் டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

## அறிகுறிகள்

மாணவர்கள் பின்வருமாறு வெளிப் படுத்துவர்.

- என்னால் நன்றாகச் சிந்திக்க முடிகிறது, ஆனால், வார்த்தைகளை மறந்து விடுகிறேன், அது தான் கடினம்.
- எழுத்து வடிவங்களை மாற்றி எழுதும் உளப் போக்குத் தென்படும். (உ-ம்) "b"ஐ "d" என்று வாசிப்பது அல்லது எழுதுவது.
- எழுத்துக்களை இடம் மாற்றி அமைத்து வாசிக்கவும் எழுதவும் செய்வார்கள். (உ-ம்) "Was"ஐ "Saw" என்று வாசிப்பது.
- விவரிக்கும் திறன், எண்ணங்களை எழுத்து வடிவில் அமைக்கும் திறன், எண்ணங்களைத் தக்க வார்த்தைகளை உபயோகித்து வெளிப்படுத்துவதிலும் சிரமம்.
- வீட்டுப் பாடங்களை முடிக்க இயலாமை
- அதிக ஞாபக மறதி
- வாக்கியங்களில் சரியான குறியீடுகள் உபயோகிக்க இயலாமை
- படிக்கும்போது சில வார்த்தைகள், வரிகளை விட்டு வாசிக்கும் இயல்பு, படிக்கும்போது வித்தியாசமாகச் சப்தங்கள் செய்வது. (உ-ம்) ஊம்ங்ங்ங்..., ங்ங்..., ஆஆ..., ஈ...
- கணிதத்தில் கழித்தல், வகுத்தல், பெருக்கல் செய்வதில் திறன் குறைவு. 1, 10, 100 இடங்களைச் சரியாக எழுத இயலாமை, ஆதலால் கூட்டல், கழித்தலில் சிரமங்களைச் சந்திப்பார்கள்.
- கணிதத்தில் +, × குறியீடுகளில் குழப்பம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Management

- Multi sensory approach-பார்ப்பது, கேட்பது, தொடுவது போன்ற உணர்ச்சி , களின் மூலம் பயிற்சி அளித்தல்
- எழுத்துக்களை உச்சரிக்கும் முறை, எழுத்து வித்தியாசங்களை, ஒலி வேறுபாடுகளைப் பற்றிப் பயிற்சி அளித்தல்
- Flash card மூலம் பயிற்சி அளித்தல்

உதாரணம், cat என்ற வார்த்தையைக் கற்கும்போதும் எழுதும்போதும் குழந்தையின் மூளையில் அதன் முதல் எழுத்துக் "க"வும் இரண்டாவது எழுத்து "ற்"றும் ஒலி(Sound) வடிவில் பதிய வேண்டும். அப்பொழுது தான் அதைப் படிக்கும்போது "கற்" (cat) என்ற வார்த்தையாக வெளியில் வரும்.

வார்த்தைகளையும் அவற்றுடனான ஒலி வடிவங்களையும் நரம்புகள் உள்வாங்கி, மூளைக்கு அனுப்பும். மூளை அதைப் பதிவு செய்து ஒலி மிகுந்த வார்த்தையாக வெளியில் அனுப்பும். அப்பொழுது தான் படிக்கும்போது "கோ-ஆர்டினேஷன்" கிடைக்கும், கேட்பவர்களுக்கும் புரியும். இதில் ஏதாவது ஓர் இடத்தில் தவறு நடந்தாலும் தடுமாற்றம் ஏற்படும்.

இந்தக் குழந்தைகள் சிறப்புப் பள்ளியில் தான் படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மற்றக் குழந்தைகள் படிக்கும் பள்ளியிலேயே படிக்க வைக்கலாம். விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் Multi sensory approach மூலம் அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் அவர்களுக்குப் படிப்பின் மீது ஆர்வமும் அக்கறையும் ஏற்படும். ஏனைய குழந்தைகளைப் போல் நாமும் படிக்க முடியும் என்ற மனப்பான்மையும் நம்பிக்கை யும் ஏற்படும்.

டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்படும் சாதனை படைத்த பலரில் சிலரை இங்கே குறிப்பிடலாம். தாமஸ் அல்வா எடிசன், ஐன்ஸ்டின், ஐஸாக் நியூட்டன், வால்ட் டிஸ்னி, ஹென்றி போர்டு, டாம் க்ருஸ், ஜான் கென்னடி, அலெக்ஸாண்டர் கிராகாம் பெல் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். டீஸ்லெக்ஸி யாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய கல்விச் சோதனைகளைச் செய்து, அவர்களின் குறை பாட்டின் தீவிரத்தை மதிப்பிட்டு. அக்குறையை நிவர்த்தி செய்ய, அவர்களுக்கு உதவப் பெற்றோரும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும். இல்லையெனில், பல சாதனையாளர்களை நாம் இழக்க நேரிடும்.

# மன நலவியல்
# (Mental Hygine)

உளவியலில் இன்று மனநலவியல் தொடர்பான பல விடயங்கள் ஒருங்கிணைக் கப்பட்டுள்ளன. மனநலம் என்பது மனக் கோளாறுகள் இல்லாமல் தனக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியையும், பயனையும் விளைவிக்கும் வகையில் வாழ்க்கையின் எல்லா நிலை களிலும் பொருத்தப்பாட்டுடன் செயற்படுவதைக் குறிக்கின்றது. இன்றைய மாணவர்களுக்கான கல்விக் கலைத்திட்டம் இதனையே மையமாக வைத்து ஒழுங்கமைக்கப்படுகின்றது. சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ப ஒருவர் தொடர்ந்து இச்செயலில் ஈடுபடவேண்டும்.

மனிதர்களிடையே மனநோய்கள், மனத்தாக்கங்கள், கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கவும் மனநலத்தைப் பேணி, மன நோய்களில் இருந்து விடுபடச் செய்யவும் மனநலவியல் வழிகாட்டுகின்றது. அமெரிக்க உள மருத்துவக்கழகம் (American Psychiatri Association) மனநலவியல் பற்றி பின்வருமாறு வரையறுக்கின்றது. "மனநலவியல் என்பது மனக்கோளாறுகளை அவை ஏற்படுத்தும் முன்பே தடுத்தும், ஏற்பட்ட பின்பு தொடக்கத் திலேயே சிகிச்சையளித்தும், மனக் கோளாறு களுக்கு ஆட்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான வழிமுறைகளைப் பரப்பு வதையும், மனநலத்தை பேணும் முறைகளை யும் பயிற்சிகளையும் உள்ளடக்கியது" எனத் தெரிவிக்கின்றது.


ஹட்பீல்டு என்ற கல்வி உளவிய லறிஞர் மனநலம் என்பது ஒருவரது ஆளுமையின் நிறைவான - இசைவான செயற்பாட்டைக் குறிக்கும். இது ஒருவன் தனக்கும் சமூகத்திற்கும் நிறைவைத் தருகின்ற. செயல்களைக் குறிக்கும் என்கிறார். இம்மன நலவியல் விருத்தி பெற குடும்பம், பாடசாலை, சமவயதுக்குழு, சமூகம், அரசாங்கம், மருத்துவத்துறை, ஆலோசனை வழிகாட்டல் நிபுணர்களின் பங்களிப்புக்கள் மிக முக்கியமானவையாகும்.

- பா.தனபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. கணேசநாதன்



# "தலைமைத்துவம்" என்ற எண்ணக்கரு விருத்தியில் உளவியல் கோட்பாடுகளின் செல்வாக்கு

## *Influence of Psychological Principles in the Development of the concept 'Leadership'*

தலைமைத்துவம் என்ற எண்ணக்கருவானது மனித குலத்தின் குழு மற்றும் அணி செயற்பாடுகள் தோன்றிய காலத்திலிருந்து மறைபொருளாக செயற்பட்டு வந்தமையினை அவதானிக்க முடிகின்றது. எனினும், மனிதகுல அபிவிருத்தியின் பயனாக விளைந்த உளவியல் அறிவு பிரவாகமானது தலைமைத்துவம் பற்றிய ஆரம்பகால அறிமுகத்தினை நல்கியதுடன் தலைமைத்துவ எண்ணக்கருவின் பல்வேறு பரிமாண விருத்தியிலும் தனது பங்களிப்பினை தொடர்ச்சியாக நல்கி வருகின்றது. காலத்திற்குக்காலம் அறிமுகத்திற்கு வந்த புதிய புதிய உளவியல் கோட்பாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டே தலைமைத்துவம் தொடர்பான எண்ணக்கருவும் விருத்தியுற்று வந்திருக்கின்றது. இந்த வகையில்

- உளப்பகுப்பு சிந்தனாகூடம்
- நடத்தைச் சிந்தனாகூடம்
- அறிகைச் சிந்தனாகூடம்
- மானிடப்பண்பு சிந்தனைகள்
- மார்க்சிச, நவ மார்க்சிச சிந்தனைகள்

என்ற உளவியல் சிந்தனைகளின் செல்வாக்குகள் தலைமைத்துவ எண்ணக்கரு விருத்தியில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. உண்மையில் அரசறிவியல், முகாமைத்துவம் என்ற கல்விப் புலங்களுடன் தலைமைத்துவம் நெருக்கமான பிரயோகப் பயனை கொண்டிருக்கின்ற போதும் தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்கள் உளவியல் கல்விப்புலத்திலிருந்து மேற்கிளம்பியதோடு அதன் தொடர்ச்சியான விருத்தியிலும் உளவியலின் பங்களிப்பே மேலோங்கிக் காணப்படுகின்றது. தலைமைத்துவம் பிரயோகிக்கப்படும் எந்தவொரு கல்விப்புலமும் கல்விப்புலங்களுக்கிடையிலான இடைத்தொடர்பு என்ற வகையில் உளவியல் கல்விப்புலத்தின் பங்களிப்பைப் பெற்றே தலைமைத்துவ எண்ணக்கருக்களை தமது கல்விப் புலங்களுக்கு ஏற்றவாறு மெருகுபடுத்தி பயன்படுத்திக் கொள்கின்றன. இதனால் தலைமைத்துவ எண்ணக்கரு விருத்தியில் உளவியல் கோட்பாடுகளின் செல்வாக்கு நீண்டு நிலைப்பதாக காணப்படுகின்றது.

தலைமைத்துவம் என்பது பலர் ஒன்றுகூடி செயற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெவ்வேறு நேரங்களிலும் வெவ்வேறு இடங்களிலும் பிரயோகிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவம் என்ற எண்ணக்கருவை அறிந்து கொள்வதன் மூலம் நாளாந்த செயற்பாடுகளில் அதனைப் பின்பற்ற முடிகின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் வெற்றிகரமான தலைமைத்துவத்தை மேற்கொண்டவர் வேறொரு சந்தர்ப்பத்தில் தோல்வி அடையவும் கூடும். தலைமைத்துவ வெற்றியானது ஒருவரது இயங்கு திறனிலும் அவர் செயற்படும் சந்தர்ப்பம் சார்ந்தும் அமையப் பெறுகின்றது. இதனால் தலைவர்கள் பிறக்கிறார்களா? உருவாக்கப்படுகின்றார்களா? என்ற விவாதமும் நிலவுகின்றது.

தலைமைத்துவம் நிலவுவதற்கு தலைமைத்துவத்தினை ஏற்றுக்கொண்டு பின்பற்றுபவர்கள் காணப்படல் வேண்டும்.

தலைமைத்துவம் என்பதனை பல்வேறு அறிஞர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர் அவற்றுள் சில வரைவிலக்கணங்கள் பின்வருமாறு அமைகின்றது:

***Sprott*** என்பாரது கருத்துப்படி "ஒரு குழுவில் மற்றையவர்கள் பின்பற்றுவதற்கு முன்மாதிரிகையாகத் திகழ்பவரே பெரும்பாலும் அக்குழுவின் தலைவர் என அறியப்படுகின்றார்". (செல்வகுமார். தே., மணி. சா., மற்றும் தேவராஜ். ஞா., 2001, ப.292)

இவ்வரைவிலக்கணத்தின் படி தலைவர் குழு உறுப்பினர்களுக்கு முன்மாதிரிகையாகத் திகழ்வதனால் தலைவரின் விருப்பத்திற்கு இணங்கி குழுவில் உள்ளோர் செயற்படுகின்றனர்.

***Lapiere*** என்பாரதும், ***Fransworth*** என்பாரதும் கருத்துப்படி "குழுவிலுள்ளோரது நடத்தையால் பாதிக்கப்படுவதைக்காட்டிலும் தனது குழு உறுப்பினர்களின் நடத்தையில் அதிக பாதிப்பை உருவாக்குபவரே அக்குழுவின் தலைவர்". (மேலது, ப.292)

இவ்வரைவிலக்கணத்தின் படி தலைவர் குழுவிலுள்ளோரது நடத்தையில் தான் விரும்பும் மாற்றத்தை ஏற்படுத்தி இலக்கினை நோக்கி குழுவினை வழிநடத்துபவராகத் திகழ்வார்.

***G. A. Cole*** என்பாரது கருத்துப்படி "தலைமைத்துவம் என்பது குழு உறுப்பினர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களை இலக்குகளை நோக்கிய செயற்பாடுகளில் ஈடுபடத்தூண்டுகின்ற ஓர் இயங்குதிறன் கொண்ட செயற்பாடாகும்". ***(Cole, G.A., 1993, P.52)***

இவ்வரைவிலக்கணத்தின் படி தலைவர் குழு உறுப்பினர்களை தூண்டுவதன் மூலம் இலக்குகளை எய்த முற்படும் இயங்குதிறன் கொண்ட செயற்பாடுகளை முன்னெடுப்பவராகத் திகழ்கின்றார்.

மேற்படி வரைவிலக்கணங்களை நோக்கும் போது தலைமைத்துவம் என்பது "ஏனையோர் மீது நேர்கணிய செல்வாக்கைப் பிரயோகித்து அவர்களின் எண்ணங்களில் அல்லது நடத்தையில் அல்லது செயல்களில் விரும்பும் மாற்றத்தைத் தோற்றுவித்தல்" எனக் கூறிக் கொள்ளலாம்.


தலைமைத்துவம் என்பது பொது நோக்கொன்றை அடைவதற்காக தலைவரும், சகபாடிகளும், பின்பற்றுனர்களும் குழுவாக அல்லது அமைப்பு ரீதியாக அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து ஏனையோரால் அவதானிக்கத்தக்க செயல் அல்லது செயற்பாடுகளில் ஈடுபடுதலாகும்.

எனவே, தலைவர் ஒருவர் இடம், பொருள், காலம் அறிந்து செயற்படும் தன்மையுடையவராக திகழும் போதே வெற்றிகரமான தலைமைத்துவத்தினை மேற்கொள்ள முடியும்.

தலைமைத்துவம் ஒருவருக்கு மட்டுமென உறுதிசெய்யப்படும் ஒரு கருமமல்ல இது எவரொருவர் ஏனையோர் மீது குறித்த ஒரு சந்தஉப்ப சூழ்நிலையில் நேர்க்கணியச் செல்வாக்கினைச் செலுத்த முடிகின்றதோ அவரே அச்சந்தர்ப்பத்தில் தலைமை வகிப்பவராகக் கருதப்படுகின்றார்.

தலைமைத்துவம் ஒரு தொகுதி மாறிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டும், சூழ்நிலை மாற்றங்களது செல்வாக்கிற்கு உட்பட்டும் பிரயோகிக்கப்படும் ஒரு செய்முறையாகும். இம்மாறிகள் பின்வருமாறு அமைகின்றன.

1. தலைவரது பண்புகள் (அறிவு, திறன், மனப்பாங்கு).
2. குழுவின் இலக்கும், சூழலும்.
3. குழுவின் இயல்புகள்.
4. குறித்த சந்தர்ப்பம் தொடர்பான சூழ்நிலை.




(தலைமைத்துவ மாறிகளும் அவற்றுக்கிடையிலான இடைத் தொடர்புகளும்)
மூலம் - ***G.A.Cole, 1993,*** ப.*53*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாறிகள் ஒவ்வொன்றும் ஏனைய மாறிகளில் தாக்கம் ஏற்படுத்தும். இத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளிலேயே தலைமைத்துவம் இயங்கு நிலையில் பிரயோகிக்கப்படுகின்றது.

வலு → மக்கள் + பௌதிக வளங்கள் → கட்டளைகள் → வெளியீடு

வலுவுள்ள ஒருவர் மக்களையும் பௌதீக வளங்களையும் இணைத்து தனது கட்டளைகள் மூலம் வெளியீடுகளைத் தோற்றுவிக்கலாம். இது குறுங்காலத்திற்கே சாத்தியம். நீண்ட காலத்திற்கு இது சாத்தியமாகாது.

வலு *Power* → செல்வாக்கு *Influence* → தூண்டுதல் *Persuasion* / காரணம் கூறல் *Reasoning* → நடத்தையில் மாற்றம் *Change in Behavior*

வலுவுள்ள ஒருவர் ஏனையோர் மீது செல்வாக்குச் செலுத்தி, சந்தர்ப்ப சூழ்நிலைகளில் காரணம் கூறி தூண்டும் சக்தியைப் பிரயோகித்து, அவர்களது நடத்தையில் விரும்பத்தக்க மாற்றத்தைத் தோற்றவித்தல் என்பது நீடித்து நிலைக்கக் கூடிய தலைமைத்துவமாகும்.

வலு என்பது தனிப்பட்டவர் அல்லது குழுக்களின் எண்ணங்கள் அல்லது நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலைக் குறிக்கின்றது.

*John French, Bertram Raven* என்பவர்களது கருத்தப்படி முகாமைத்துவ ரீதியாக பின்வரும் வலுக்கள் இனங்காணப்பட்டுள்ளது.

1. வெகுமதி அளிக்கும் வலு (*Reward Power*)
2. கட்டாயப்படுத்தும் வலு (*Coercive Power*)
3. நிபுணத்துவ வலு (*Expert Power*)
4. மதிப்பளிக்கும் வலு (*Referent Power*)
5. சட்டப்படியான வலு (*Legitimate Power*)

(ஜெயராமன், தே., 2000, ப.149 - 150)

வெகுமதி அளிக்கும் வலு என்பது ஏனையோருக்கு வெகுமதி வழங்கும் ஆற்றலைக் குறிக்கின்றது.

கட்டாயப்படுத்தும் வலு என்பது ஏனையோர் மீது அச்சுறுத்தலைப் பிரயோகிக்கும் ஆற்றலைக் குறிக்கின்றது.

நிபுணத்துவ வலு என்பது ஒருவர் பெற்றிருக்கும் நிபுணத்துவம் காரணமாக கிடைக்கப் பெறுகின்ற ஆற்றலைக் குறிக்கின்றது.

மதிப்பளிக்கும் வலு என்பது ஒருவர் மீது ஏனையோர் கொண்டிருக்கும் மதிப்பின் காரணமாக ஏற்படுகின்ற வலுவினைக் குறிக்கின்றது.

சட்டப்படியான வலு என்பது ஒருவர் சட்டத்தின் பிரகாரம் ஏனையோர் மீது மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் ஆற்றலைக் குறிக்கின்றது. ஒரு தலைவர் தனது சகபாடிகளையும் உதவியாளர்களையும்விட கூடுதலான வலுவினைக் கொண்டிருத்தல் வேண்டும் குறித்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையில் மேற்படி வலுக்களில் ஒன்றையோ அல்லது இவற்றின் வெவ்வேறு சேர்க்கை களையோ வலுவாக பிரயோகித்து ஏனையோர் மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களது நடத்தையில் அல்லது எண்ணத்தில் விரும்பத்தக்க மாற்றத் தினை ஏற்படுத்துவதன் மூலம் சிறந்த தலைமைத் துவ வழிகாட்டலினை மேற்கொள்ள முடியும்.

## தலைமைத்துவ எண்ணக்கருக்களின் விருத்தி

தலைமைத்துவ எண்ணக்கருவானது காலத்திற்குக் காலம் பல்வேறு அறிஞர்களின் பங்களிப்புடன் கோட்பாட்டு ரீதியான விருத்தி யினைப் பெற்றுள்ளது. இந்த வகையில் பின்வரும் கோட்பாடுகள் பற்றிய அணுகு முறைகள் காணப் படுகின்றன.

1. பண்புக் கோட்பாடு (*Trait Theory*)
2. நடத்தை சார் கோட்பாடு (*Behavioral Theory*)
3. சூழ்நிலைக் கோட்பாடு (*Contingency Theory*)
4. நடமுறைப்படுத்தும் தலைமைத்துவமும் மாற்றமேற்படுத்தும் தலைமைத்துவமும் (*Transactional Leadership and Transformational Leadership*)
5. ஆட்கொள்ளும் தலைமைத்துவம் (*Charismatic Leadership*)

மேற்படி கோட்பாடுகளில் நடைமுறைப்படுத்தும் தலைமைத்துவமும் மாற்றமேற்படுத்தும் தலை மைத்துவமும், ஆட்கொள்ளும் தலைமைத்துவம் என்பன சமகாலத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்தும் கோட்பாடுகளாக அமைவதால் இவற்றை இக்கட்டுரையில் எடுத்துநோக்கப்படுகின்றது.

## நடைமுறைப்படுத்தும் தலைவரும், மாற்றமேற்படுத்தும் தலைவரும் (*Transactional Leader and Transformational Leader*)

நடைமுறைப்படுத்தும் தலைவர் நிறுவன பணிகளையும் நோக்கத்தினையும் அடைவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு உதவியாளர்களின் நடத்தைகளை அமுலாக்குப வராகக் காணப்படுவார். அதாவது, நிறுவனச் செயற் பாட்டை அமுல்படுத்தும் வகையினை தலைவர் சார்ந்திருப்பார்.

மாற்றமேற்படுத்தும் தலைவர் தமது உதவி யாளர்களின் நலன்களில் அக்கறை கொள்வதோடு நிறுவன நோக்கினை அடையும் பொருட்டு மாற்றங்களை அறிமுகப்படுத்தி உதிவியாளரை வழிப்படுத்துவார். இவர் நிறுவனத்தின் தூர நோக்கினையும், குறிக்கோளையும், நெறிப்படுத் தலையும் கருத்திற்கொண்டு தமது நடவடிக்கைகளை மேற்கொள்வார். இதனால் இவர் மாற்றங்களைக் கண்டுபிடிப்பவரெனவும், முயற்சியாளர் எனவும், ஆட்கொள்ளும் தலைவர்(Charismatic Leader) எனவும் அழைக்கப்படுவார்.

நிறுவனங்களிலே இவ் இரு வகைத் தலைவர்களும் தேவைப்படுகின்றனர். இவ் இரு வகையினரையும் பின்வரும் அடிப்படையில் வேறுபடுத்தலாம்.

- வழிகளை அடையாளம் காணல் (Path Finding).
- பிரச்சினையை விடுவித் தல் (Problem Solving).
- அமுலாக்கம் செய்தல் (Implementing).

வழிகளை அடையாளம் காண்தல் என்பது பிரச்சினை களுக்கு சரியான வகைகளைத் தேடுவதிலும் பார்க்க சரியான கேள்விகளை கேட்டறிதலாகும். இதன் மூலம் பிரச்சினை இனங்காணப்படும். இங்கு பிரச்சினை தீர்த்தலை விட மேலும் வழிகளை இனங்காண்த லென்பது நிறுவனத்தின் குறிக்கோள், புதியது புனைதல், தூரநோக்கு என்பவற்றுடன் தொடர்புறு கின்றது.

பிரச்சினை விடுவித்தல் என்பது எளிய வடிவில் சிக்கலான பிரச்சினைகளை இலகுபடுத் தவோ அல்லது ஆராயவோ முடிதலாகும். இதனடிப்ப டையில் மாற்று நடவடிக்கைகள் ஆராயப்பட்டு அதற்கான காரணங்களை கண்டறிதல் வேண்டும்.

அமுலாக்கம் செய்தல் என்பது நிறுவன நடவடிக்கைகள் சரியான பாதையில் செல்வதனை யும், சரியாக மேற்கொள்ளப்படுவதனையும் உறுதிப் படுத்துவதும் தேவையேற்படின் மாற்றங்களை மேற் கொண்டு சரியான பாதையினைப் பின்பற்றுவது மாகும்.

மாற்றமேற்படுத்தும் தலைவர் வழிகளை அடையாளம் காண்தல் என்பதனை கடமையாகக் கொண்டிருக்கையில் நடைமுறைப்படுத்தும் தலைவர் பிரச்சினை விடுவித்தலையும், அமுலாக்கம் செய்தலையும் கடமையாகக் கொண்ட வராகக் காணப்படுகின்றார். பொதுவாக நோக்கும் போது மாற்றமேற்படுத்தும் தலைவர் நிறுவனங் களில் தலைவர்களாகக் காணப்படுவர் ஆனால் நடைமுறைப்படுத்தும் தலைவர் நிறுவனங்களில் முகாமையாளராகக் காணப்படுவர்.

இவ்விரு தலைவர்களும் பின்வரும் பரிமாணங்களில் ஒப்பீட்டிற்கு உட்படுத்தப்படு கின்றனர்.

| பரிமாணங்கள் | நடைமுறைப்படுத்தும் தலைவர் | மாற்றம் ஏற்படுத்தும் தலைவர் |
|---|---|---|
| காலம் | நிகழ்காலத்தினை அடிப் படையாகக் கொண்டு செயற் படுவார் | எதிர்காலத்தினை அடிப் படையாகக் கொண்டு செயற்படுவார் |
| அடிப்படை நடவடிக்கைகள் | நாளுக்கு நாள் நிறுவன நடவடிக்கைகளினை மேற் கொள்ளல் | தூரநோக்கினை அடிப்ப டையாகக் கொண்டு இலக் கினை அமைத்தல் |
| தொழில் பாங்கு | சட்டதிட்டங்கள், விதிகளைப் பின்பற்றுவார் | வழமையான கடமை களில் இருந்து வேறுபட் டுக் காணப்படுவார் |
| தொழில் ஈடுபாடு | அலுவலக ஊழியரது தொழி லில் மட்டும் ஈடுபாடு உடைய வராகக் காணப்படுவார் | எல்லோரது தொழில்களி லும் ஈடுபாடு உடையவரா கக் காணப்படுவார். |
| ஊழியர்களுக்கிடையிலான உறவுகள் | முறைசார்ந்த உறவுகள் | முறைசாரா உறவுகள் |

ஆட்கொள்ளும் தலைமைத்துவம் (***Charismatic Leadership***) என்பது ஒருவரிடம் இருக்கக்கூடிய விசேட குணாம்சங்களும், ஆளுமை ரீதியான நடத்தையும், தலைமைத்துவ ஆற்றலை யும் குறிக்கின்றது. இத்தகைய தலைவர்களது உதவியாளர்கள் தாம் சரியாக வழிநடத்தப்படு கின்றனர் எனவும், தூண்டப்படுகின்றனர் எனவும் உணரக்கூடியவர்களாக இருப்பர்.

ஆட்கொள்ளும் தலைவர்கள் பின்வரும் 7 பிரதான பண்புகளை கொண்டிருப்பதாக ஆய்வுகள் புலப்படுத்துகின்றது.

- தன்னம்பிக்கை (Self Confidence) - இது சுயஆற்றல், நடுநிலைமை, பூரண நம்பிக்கை கொண்டிருத்தலாகும்.
- தூர நோக்கு (Vission) - இது நிறுவனத்தின் நீண்டகால இலக்கினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்திரமாக தீர்மானித்தலும் நீண்டகால நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுதலுமாகும்.

- தூரநோக்கை தெளிவாகக் கூறும் ஆற்றல் (Ability to Articulate the Vission) - இது தலைவர் ஏனையோரால் விளங்கத் தக்க வகையில் தூரநோக்கை வகுத்து நிர்ணயிக்கும் ஆற்றலையும், இதன் மூலம் உதவியாளரது தேவைகளையும், அதைத் திருப்திப்படுத்தும் தூண்டுதல் காரணிகளையும் அறியக் கூடியதாக இருத்தலுமாகும்.
- தூரநோக்குப் பற்றிய திடமான நம்பிக்கை (Strong Convictions about the Vission) - இது தூரநோக்கை அடைவதற்குரிய உயர் ஆபத்துக்களையும், அதனுடன் தொடர்புறும் செலவுகளுக்கும் முகங்கொடுக்கக்கூடிய ஆற்றலாகும். இதன் மூலம் தூரநோக்குத் தொடர்பான திட நம்பிக்கை உறுதி செய்யப்படும்.
- சாதாரண நடத்தையிலும் மேலான நடத்தை (Behaviour that is out of the Ordinary) - இது தலைவரது நடத்தை வழமைக்கு மாறானதும், நியாயமானதும், நூதனமானதும், அறியக்கூடியதுமான நடத்தையாகவும் அமைதல் வேண்டும். இந்நடத்தை உதவியாளர்களால் அதிசயிக்கக் கூடியதாகவும், மெச்சக்கூடியதாகவும் இருக்கும்.
- ஒரு மாறும் முகவருக்குரிய தோற்றம் (Appearance as a Change Agent) - இது தலைவர் வழமையான பணிகளைவிட வேறுபட்ட மாற்றங்களை அறிமுகப்படுத்தி முன்னெடுக்கின்ற ஓர் முகவராக திகழ்தலைக் குறிக்கும்.
- சூழலைக் கிரகிக்கும் தன்மை (Environmental Sensitivity) - இது மாற்றமுறும் சூழலை உணரத்தக்க தன்மையினையும், இம்மாற்றங்களை எதிர்கொள்வதற்கான வரையறைகளையும், வழங்களையும் முன்னுணரும் ஆற்றலையும் குறிக்கும்.

ஆட்கொள்ளும் தலைமைத்துவமானது எதிர்காலத்தினைக் கருத்திற் கொண்டு இரு வகைகளில் நோக்கப்படுகின்றது.

- தூரநோக்குடைய ஆட்கொள்ளும் தலைவர் (Vissionory Charismatic Leader) - இது உதவியாளர்களது தேவைகளையும், இலக்குகளையும் அவர்களது பணிகளுடனும். நிறுவனத்தின் நீண்டகால இலக்குடனும் இணைக்கும் தலைவரைக் கருதுகின்றது. இங்கு தலைவர் தனது தொடர்பாடல் திறனின் மூலம் இதனை மேற்கொள்கின்றார். ஊழியர் திருப்தியின்மை, தொழிற்சூழலுக்கு முகங்கொடுக்க முடியாத நிலை என்பன இதன் மூலம் விலக்கபடுகின்றது.
- நெருக்கடியை எதிர்நோக்கும், ஆட்கொள்ளும் தலைவர் (Crisis – Based Charismatic Leader) - இது தலைவர் ஏற்கனவே இருக்கின்ற அறிவும், வளங்களும் நடைமுறைகளும் போதுமானதாக அமையாத போது தாக்கத்திற்கு உட்படக்கூடிய தன்மையினை குறிக்கும். இங்கு தலைவர் தனது உதவியாளர்களுடன் தெளிவாக உரையாடி மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் விளக்குவார். இத்தகைய தலைவர்கள் நெருக்கடியான சூழ்நிலைகளில் தீர்வுகளைக் காண்பதற்கு உதவியாளர்களது உதவியைப் பெறுவதோடு அவர்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைக்கவும், நெருக்கடிகளைத் தவிர்க்க உதவுமுகமாக உதவியாளர்களுக்கு சுதந்திரத்தையும் வழங்குகினறனர். இதனால் உதவியாளர்கள் தமக்கு அப்பாற்பட்ட சக்திகளினூடான சில முறைமைகளையும், நடைமுறைகளையும், தந்திரோபாயங்களையும் பயன்படுத்தி நெருக்கடிகளை விடுவிக்க முயல்வர். இத்தலைவர்கள் உதவியாளர்களிடமிருந்து ஆதரவையும் உற்சாகப்படுத்தலையும் வழமையான செயல் நடவடிக்கைகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியவராகவும் காணப்படுவர்.

மேற்படி தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு விருத்தியுடன் தொடர்புறும் கோட்பாடுகள் வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு அறிஞர்களின் ஆய்வுகள், அவதானிப்புக்கள், அனுபவங்கள் என்பவற்றின் தொகுப்பாக விருத்தி செய்யப்பட்டவையாகும். இவ் அறிஞர்கள் வெவ்வேறு அறிவியல் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட்ட போதிலும் அவர்கள் உளவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளின் தேர்ச்சியுடன் தத்தமது அறிவுப்புல தேர்ச்சியையும் ஆதாரமாகக் கொண்டு இக்கோட்பாடுகளை முன்வைத்தனர். இதனால் இக்கோட்பாடுகளின் விருத்தியில் உளவியல் கோட்பாடுகளில் செல்வாக்கு கணிசமாக காணப்படுகின்றது. மேலும் தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு எல்லாத் துறைகளிலும் பிரயோகப் பங்களிப்பை நல்குவதோடு இது தொடர்ந்து விருத்தியுற்றுவரும் ஓர் எண்ணக் கருவாகவும் காணப்படுகின்றது.

**உசாவிய நூல்கள் :**


1. Cole G.A., _Personnel Management Theory and Practice,_ DP Publication Ltd., 1993 London.
2. Graham H.T., _Human Resources Management,_ Macdonald and Evans., 1983 G.B.
3. Kenneth N. Wexley and Gray A. Yukl., _Organizational Behavior and Personnel Psychology,_ Richard D. Irwin, INC., 1997 U.K.
4. Robert A. Baron and Donn Byrne., _Social Pshychology ,_ Prentic Hall of India Private Limited., 2004 New Delhi.
5. செல்வகுமார் தே., மாணி சா., தேவராஜ் ஞா., _கல்வி உளவியல்,_ இராம் பதிப்பகத்தார்., 2001 சென்னை.
6. தேவரஜர் ஜெயராமன் ந., _முகாமைத்து வத்திற்கு ஓர் அறிமுகம்,_ கௌரி பதிப்பகம், 2000 கொழும்பு.
7. புஸ்பநாதன் அ., _ஊழியர்களை வழிநடத்தல்,_ ஜி. எச். பதிப்பகம், 2004 வவுனியா.
8. ரகுராகவன் க., பத்மரஞ்சன் இ., _மனிதவள முகாமை, உற்பத்தி அதிகரிப்புக்கான தந்திரோபாயங்களும் நுட்பங்களும்,_ குமரன் பதிப்பகம், 1997 கொழும்பு.


## கல்வி உளவியலின் பயன்கள் அல்லது முக்கியத்துவம் அல்லது பிரயோகம்

**ஆசிரியருக்கானவை:-**

1. மாணவர்களின் விருத்திசார் இயல்புகளை விளங்கிக் கொள்ளல்பாட அறிவு மாத்திரமன்றி, மாணவன் பற்றிய விளக்கமும் உள்ளபோதே கற்பித்தற்பணியை வெற்றிகரமாகச் செய்ய முடியும்.

2. மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளை விளங்கிக் கொள்ளல் மாணவர்களிடையே பரந்த வீச்சில் காணப்படும் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு கொள்கின்றபோதே, பொருத்தமான கற்றல் செயற்பாடுகளை மாணவருக்கு ஒழுங்கு செய்யலாம்.

3. மாணவரது மனவெழுச்சி நெருக்கடிகளை இனங்காணல்.கற்றலின் வெற்றி மாணவரின் உளச் சுகாதாரத்தில் தங்கியுள்ளது. மனவெழுச்சிப் பிரச்சினைகள் உளச் சுகாதாரத்தைப் பாதிக்கும். எனவே, கற்பித்தலின் வெற்றிக்காக ஆசிரியர் தமது மாணவர்களின் மனவெழுச்சி விருத்தி மட்டங்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருப்பது அவசியமாகும்.

4. கற்றல் கொள்கைகள் மற்றும் நுட்ப முறைகள் பற்றிய அறிவைப் பெறல்.வகுப்பறையில் மாணவர்களிடத்துக் கற்றல் நிகழும் விதம் பற்றிய கொள்கைகளை அறிந்து, அக்கொள்கைகளுடன் தொடர்புடைய வகையில் கற்றல்-கற்பித்தல் முறைகளையும் அறிந்து கொள்ளலாம்.

5. மாணவரின் உள்ளார்ந்த திறன்களைப் பயன்படுத்துதல்பரம்பரை ஊடாக மாணவர்களுக்குக் கிடைக்கும் உள்ளார்ந்த திறன்களை அறிந்து, அவற்றைச் சரியான வழியில் நெறிப்படுத்தி மாணவரின் விருத்திக்காகச் செயற்படுவதற்குக் கல்வி உளவியல் அறிவு ஆசிரியருக்குத் துணையாகும்.

6. மாணவருக்குக் கற்றலுக்கான ஊக்கல் வழங்கி அவர்களை வழிப்படுத்துதல்ஊக்கல் என்பது ஒரு நடத்தைக்கு வலுவூட்டுகின்ற சக்தியாகும். எனவே, கற்றலில் அதற்கான ஊக்கல் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் என்பதால், பல்வேறு ஊக்கல் முறைகள் பற்றி அறிந்து, பொருத்தமாக வழங்கி மாணவரின் கற்றலை மேம்படுத்த உதவும்.

7. கற்றல் இடமாற்றம் நிகழும் வகையில் கற்பித்தல்.ஒரு சந்தர்ப்பத்தில் பெற்ற பயிற்சியை அல்லது கற்றலை இன்னொரு சந்தர்ப்பத்தில் பிரயோகிப்பதற்கான வழிமுறைகளை அறிந்து மாணவருக்காக வழிகாட்டுவதற்கு உதவும்.

8. ஆசிரியர், தம்மைப் பற்றி விளக்கம் பெறல்.ஓர் ஆசிரியர் தம்மிடத்தே காணப்படும் பல்வேறு திறன்கள், தேர்ச்சிகள், விருத்தி செய்து கொள்ள வேண்டியஅம்சங்கள் என்பவை தொடர்பான விளக்கத்தைப் பெறக் கல்வி உளவியல் உதவும்.

9. மாணவருக்கான வழிகாட்டல்-ஆலோசனைச் சேவை பற்றிய விளக்கம் பெறல்.கற்றலில் (கல்வியில்) ஈடுபடும் , பிள்ளைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது, அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை வழங்குவதற்கு வேண்டிய அறிவைப் பெற உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அபிராமி ராஜ்குமார்

# சமூகவிரோத ஆளுமை ஓர் உளவியல் நோக்கு

சமூகத்தில் பல்வேறு வகைப்பட்ட ஆளுமைப் பிறழ்வுடைய மக்கள் காணப்படுகின்றார்கள். அனைத்து வகையான ஆளுமைப்பிறழ்வுகளிலும் தவறாக விளக்கம் செய்யப்படுவதும் தனிப்பிரச்சினையாகவும் இருந்து வரும் ஆளுமை சமூகவிரோத ஆளுமை (Antisocial personality) ஆகும். இவ்வகை ஆளுமையானது பொறுப்பின்மையாலும், சமூகவிரோத நடத்தைகளான மீச்செலவு, ஏமாற்றுதல், வஞ்சித்தல், இரக்கமின்மை போன்ற இயல்புகளாலும் உளவியலாளர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. சமூகவிரோத ஆளுமையாளர்கள் மிகக்குறைந்தளவு சமூகமயப்பட்டவராகவும் உண்மைக்கு மதிக்காதவராகவும், மனச்சாட்சி குறைந்தவராகவும் காணப்படுவர். (DSM IV, 1994)

## சமூகவிரோத நடத்தையும் பிறழ்வு உளவியலும்

உளவியல் குழப்பங்களுக்கும், ஏனையோரது உரிமைகளை வன்முறையாக மீறுகின்ற சமூகவிரோத நடத்தைக்குமிடையேயான தொடர்பினை நோக்கி எழுந்த வினா உளவியல் வரலாற்றில் ஓர் ஆர்வத்தினை ஊட்டும் அத்தியாவசியத்தினை உருவாக்கிற்று. 200 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் குற்றவாளிகள், வெறும் குற்றவாளிகளாகவே கருதப்பட்டனர். அவர்களது உளவியலினைப்பற்றிக் கருத்திற் கொள்ளாத நிலை அன்று காணப்பட்டது. அதன் பின்பு பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பிலிப்பே பீனல் (Philippe Pinel) உம் பெஞ்சமின் ரூச் (Benjamin Rush) உம் ஒழுக்கமற்ற, குற்ற நடத்தையானது உளநோயின் வடிவமாகக் காணப்படலாம் என ஆராயவாரம்பித்தனர். 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இத்தகைய மக்கள் "உளப்பித்தம் பிடித்தோர்" (Psychopaths) என அழைக்கப்பட்டனர். சமூகவியலின் மலர்வுடன் சமூக நிபந்தனைகளின் செல்வாக்கு அழுத்தம் பெற்ற காலப்பகுதியில் Psychopaths என அழைக்கப்பட்டோர் Sociapaths என பெயரிடப்பட்டனர் (Birnbaum, 1914).



இவ்வாறான காரணங்களால் சமூகவிரோத நடத்தையானது பிறழ்வு உளவியலினுள் உள்ளீர்க்கப்பட்டது. ஆரம்பத்தில் அனைத்து சமூகவிரோத நடத்தைகளும் நோய் எனக்கருதப்பட்டது. இக்காரணத் தால் குற்றவாளிகள் என்பவர்களே இல்லை என்றாகிவிட்டது. ஹுளஅ இன் ஆரம்ப பதிவுகளில் இவ்விடயம் தொடர்பாக பல தடைகள் காணப்பட்டபோதிலும், அண்மைய பதிப்புக்களில் இக்குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டன. DSM IV ஆனது நோயியல் சாதாரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவாறாக இரு வேறுபட்ட வகையீடுகளை வழங்குகின்றது. உளவியல் குழப்பங்களினால் விளைவிக்கப்படும் சமூக விரோத நடத்தையைக் கொண்ட சமூக விரோத ஆளுமைக்கோளாறுகள் ஒருவகையிலும், எந்த உளக்குழப்பங்களுடனும் தொடர்புபடாத சமூக விரோதச்செயற்பாடுகள் கையேட்டின் இறுதியில் "வளர்ந்தோர் சமூக விரோத நடத்தை" என்ற வகையிலும் பிரிக்கப்பட்டுள்ளன.

## சமூகவிரோத ஆளுமையாளரின் பொதுப்பண்புகள்

ஆளுமைக் கோளாறுகளிலேயே சமூகத்துடன் அதிகம் பிரச்சனைக்குரியதாகக் காணப்படுவது சமூகவிரோத ஆளுமை கோளாறு ஆகும். இத்தகைய நபர் பொதுவாக ஓர் ஆணாக இருப்பதுடன் 15 வயதிற்கு முன் இவரது மனச்சாட்சியின்மை வெளிப்படையாகத் தெரியவரும்.

சமூகவிரோத ஆளுமையாளர் என சமூகவிரோத நடத்தையைக்காட்டும் பதினெட்டும், அதற்கு மேற்பட்ட வயதினை உடையவர்களும் மட்டுமே நோய் நிர்ணயம் செய்யப்படுவர். இந்நோய் நிர்ணயமானது சில தன்மைகள் இணையும் போதுதான் கருத்திற்கொள்ளப்படும். அவையாவன,


1. பதினைந்து வயதிற்கு முன்னர் களவு, அழித்தல், வழக்கத்துக்கு மாறான மீச்செலவு நடத்தை போன்ற விலகல் நடத்தைகளில் குறைந்தது இரு நடத்தைகளாவது காணப்படல்

2. பதினைந்து வயதிலிருந்து பொருளாதாரப் பொறுப்புணர்வு இன்மை, சட்டவிரோதமான தொழில், தொழிலைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவியலாமை போன்ற நடத்தைப் பிரச்சினைகளில் குறைந்தது மூன்றாகிலும் காணப்படுதல். அத்துடன் தொடர்ச்சியாக 3 வருடங்களுக்கு இப்பிரச்சினைகளின்றி இருக்க இயலாமை.

3. சமூகவிரோத நடத்தையானது வேறெந்த உளநோயின் அறிகுறியாக இல்லாதிருத்தல்.

DSM III இன் வகையீட்டின் பிரகாரம் மேற் சுட்டப்பட்ட 3 விடயங்களும் ஒருவர் இடத்து இணையு மிடத்து அவர் சமூகவிரோத ஆளுமையாளர் என்றவாறு நோய் நிர்ணயம் செய்யப்படுவர்.

சமூகவிரோத ஆளுமையாளருக்குரியவை என நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பண்புகள் அனைத்தும் ஒருவரிடமே காணப்படும் என்றில்லை.




## சமூகவிரோத ஆளுமையாளரின் பொதுவான பண்புகளாவன

(1) பொருத்தப்பாடான மனச்சாட்சி விருத்தியின்மையும் பதற்றம் மற்றும் குற்றவுணர்வின்மையும்

சமூகவிரோத ஆளுமையாளரால் ஒழுக்க விழுமியங்களை விளங்கி, ஏற்றுக் கொள்ள வியலாது தாம் உயர்தரத்துடன் ஒழுக்கமாக வாழ்வதாகக் கூறிக்கொண்டாலும், அதற்கும் அவர்களது நடத்தைக்குமிடையே எவ்வித தொடர்பும் கிடையாது. அவர்களது பதற்றமின்மையும், குற்றவுணர்வின்மையும் இவர்களை ஏனையோர் உண்மையானவர்கள் என்று நம்பச்செய்து சந்தேகத்திலிருந்து தப்பச்செய்துவிடும்.

(2) பொறுப்பற்ற, அவசர நடத்தை

சமூகவிரோத நபர்கள் ஏனையோரது உரிமைகள், தேவைகள் மற்றும் நலன்கள் பற்றி அக்கறை கொள்வதில்லை. பொறுப்பற்றதும், அவசரகோலமானதுமான நடத்தை மூலம் சட்ட ஒழுங்குகளை மீறிக்கொண்டேயிருப்பர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஏனையோரைக் கவர்ந்து தமக்குகந்தவாறு பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலும், தம்மால் விளைவிக்கப்பட்டதும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததுமான நடத்தைகளை ஏனையோர் மீது சுமத்தும் தன்மையும்

அநேக சமூகவிரோத ஆளுமையாளர் ஏனையோரால் விரும்பத்தக்க இயல்புடையவர்களாயும் கவர்ச்சிமிக்கவர்களாயும் காணப்படுவர். மேலும் தாம்செய்யும் குற்றங்களை ஏனையோர் மீது சுமத்திவிடுவர். தாம் தவறு செய்யாதவர்களென தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்வதுடன் ஏனையோரையும் நம்பச்செய்வர்.

4. அதிகாரத்தைப் புறக்கணிக்கும் தன்மையும் அனுபவம் மூலம் நன்மையடைய இயலாமையும்

சமூகவிரோத நபர்கள் சமூக ஒழுக்க விதிகளைத் தமக்கு பிரயோகிக்கமுடியாது என்றவகையில் நடத்தைகளை மேற்கொள்வர். சட்டஅமுலாக்கல் அதிகாரிகளுடன் அடிக்கடி முரண்படுவர். அவர்களால் தண்டனை போன்ற அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ள இயலாது.

5. ஆட்களிடையே நல்லுறவினைப் பேண இயலாமை




பொறுப்புணர்வின்மையும், சுயநலவாதப் போக்கும் உறவுநிலைகளில் முரண்பாடுகளினை விளைவித்து, உறவுகளை முறித்துவிடுகின்றது. வழமையாக சமூகவிரோத ஆளுமையாளர் நீண்டகால நண்பர்களை தம் தேவைகளைத் திருப்திசெய்வதன் காரணமாகவே பேணிவைத்திருக்கின்றனர். மேலும் தம் வாழ்க்கைத்துணையின் மீது வன்முறைத் தாக்குதல்களையும் துன்புறுத்தல்களையும் இவர்கள் மேற்கொள்ளும் காரணத்தால் பல திருமணங்கள் விவாகரத்தாகின்றன.

6. கவனமின்மையும், உடனடியான உந்தல் நடத்தையும்

"சாதாரண" குற்றவாளிகள் போலன்றி சமூகவிரோத ஆளுமையாளர் திட்டமிடலில் குறைந்த கவனமெடுப்பர். அத்துடன் உடனடித்திருப்தியை மையங்கொண்டு செயற்படுபவர்களாக விருப்பர்.

Hippocampus and fornix (limbic system)




## சமூகவிரோத ஆளுமைக்கான காரணங்கள்

தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பான ஆய்வுகள் சமூகவிரோத ஆளுமை விருத்தியில் பரம்பரைக் காரணிகளும் சூழற் காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றனவெனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுகின்றன. இக்கோளாறினால் பாதிக்கப்பட்ட உயிரியல் சார் பெற்றோர்களாலும் தத்தெடுக்கப்பட்ட பெற்றோர் களாலும் வளர்க்கப்படும் குழந்தைகளும் இக்கோளாறுக் குள்ளாகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

மூளையில் காணப்படும் அசாதாரண தொழிற்பாட்டுநிலை சமூகவிரோத ஆளுமையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. சமூகவிரோத ஆளுமை யாளரினால் அச்சத்தை தூண்டும் தூண்டியின்போது சாதாரணமாக ஏனை யோரைப்போன்று நடந்துகொள்ள இயலாத தாகையால் இவர்களின் நடத்தையை இவர்களால் கட்டப்படுத்த முடிவதில்லை. ஞாபகம் மற்றும் மனவெழுச்சியினைக்கட்டுப்படுத்தும் மூளைப் பகுதிகளான லிம்பிக்தொகுதி (Limbic system) மற்றும் கடைநுதற் சோனை (Lemporal lobe) ஆகியவற்றின் தொழிற்பாட்டுக் குறைபாட்டால் இது ஏற்படுகின்றது.

குழந்தைப் பராயத்தில் உடலியற் துஷ்பிர யோகத்தாலோ அல்லது பாலியல் துஷ்பிரயோகத் தாலோ பாதிக்கப்படுதல். குழந்தைப்பருவத்தில் பெற்றோரை இழத்தல், பெற்றோர் வளர்ப்பு நிலைகளில் காணப்படும் மனவெழுச்சிக் குறைபாடு, பெற்றோரின் புறக்கணிப்பு, குழந்தைகளுக்கு ஒழுக்க விழுமியங்களைக் கற்றுத்தருவதில் காணப்படும் ஒழுங்கீனம், தவறான பெற்றோர் மாதிரி, போன்ற காரணிகளால் சமூகவிரோத ஆளுமை போன்ற பிறழ்வுகள் ஏற்படுகின்றன.

DSM IV – TR நிர்ணயித்ததன் பிரகாரம் நடத்தைக்கோளாறு (Conduct disorder) உடன் ADHD (Attention Deficit / Hyperactivity Disorder) இனைப் பத்து வயதிற்கு முன்பே கொண்டிருந்தோர் சமூகவிரோத ஆளுமையால் பாதிப்புறுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளன.

## சிகிச்சை முறைகளும் தீர்வுகளும்

இவ்வாறான கோளாறுகளுடையோர் தாமாக முன்வந்து சிகிச்சையை நாடுவது அரிதாகையால் சிகிச்சையும் பயனளிப்பதில்லை. எனினும் இக்கோளாறு தொடர்பான சிகிச்சைகள் நீண்டகால நோக்கின் அடிப்படையானவை. ஓரளவு பயனளித்துள்ளன. காரணம் இந்நுட்பங்கள் சமூகவிரோத ஆளுமையாளரின் நடத்தையை மாற்றுவதற்கான முயற்சிகளை வழங்குவதுடன், ஆட்களிடையேயான நல்லுறவையும், நம்பிக்கைத் தன்மையையும் கட்டியெழுப்பு கின்றன.

சமூகவிரோத ஆளுமை ஏற்படுவதற் கான சூழலை அற்றுப்போகச் செய்வதே எதிர்கால நோக்கிற்குரிய தீர்வாக அமையும். இதன் பொருட்டு சிறந்ததொரு சூழலினைப் பிறக்கும் பிள்ளைக்கு அமைத்துக்கொடுத்தல் பெற்றோரதும், சமூகத்தினதும் பெரும் கடமையாகும்.

**உசாத்துணை நூல்கள்**

Dennis coon, "Essentials of Psychology" (6th Edition), West publishing Company, New York, 1994

Alloy, Acocella, Boot zing, "Abnormal Psychology", Mc Graw Hill gnc, 1996

David G.Myers, "Psychology", worth publisher. Inc1996

Coleman, Butcher, Carson, "Abnormal Psychology and Modern life", Scott, Foresman and Company.

Uifford T. Morgan Richard A. King, "Introduction to Psychology ", Mc Graw – Hill Book Company, New York, 1975.

Terry F.Pettijohn "Psychology – A Concise Introduction", The Dushkin publishing Group Inc (6th Edition), 1992

Price, Glickstein Honton, Sherman, "Principles of Psychology", Scott, Foresman and Company 1987.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு.கௌதமன்

# சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகம்

(Child Sexual Abuse/Paedophilia)




18 வயதிற்குக் குறைந்த ஆண், பெண் இருபாலாரும் சிறுவர் என்று அழைக்கப்படுகின்றனர். Paedo என்பதற்குக் குழந்தை அல்லது சிறுவர் என ஆங்கில அகராதி பொருள் தருகின்றது. Paedophilia என்பது குழந்தைகளின் மீது பாலியல் ரீதியாக ஏற்படும் கவர்ச்சியாகும். இவ்வாறு குழந்தைகளின் மீது பாலியல் உணர்வு கொண்டு நடப்பவர்கள் Paedophile என அழைக்கப்படுகின்றனர். Paedophila என்பது Paraphilia என்னும் வகையைச் சார்ந்ததாகும். இதன் அர்த்தம் இயற்கைக்கு முரணான பாலியல் கவர்ச்சி என்பதாகும்.

இலங்கையைப் பொறுத்த வரை நீர்கொழும்பு, பெந்தோட்டை, ஹிக்கடுவை போன்ற கடற்கரைப் பிரதேசங்களில் சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகங்கள் அதிகளவில் இடம்பெறுவதாக ஆய்வுகள் தெரிவித்தாலும் அண்மைக்காலங்களில் எமது தமிழ் சமுதாயத்தில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் இந்நிலை அதிகரித்து வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

## சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகம் என்றால் என்ன?

அதிகாரத்திலுள்ள ஒருவர் தனது அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்து, சிறுவரைத் தந்திரமாக ஏமாற்றி அல்லது கட்டாயப்படுத்தி ஒரு சிறுவனையோ, சிறுமியையோ பாலியல் ரீதியான உறவுக்கு உட்படுத்தல் பாலியல் துர்ப்பிரயோகம் எனப்படும். (ரொறன்ரோ நகர் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு எதிரான விசேட குழு)

ஒரு நபரொருவர் தொடுகை மூலமோ அல்லது தொடுகை இல்லா முறையிலோ, சிறுவர் ஒருவரை அவரது விருப்பத்துடனோ, அன்றி விருப்பம் இல்லாமலோ எந்தவொரு பாலியற்செயற்பாட்டிலும் ஈடுபடுத்துதல் சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகமாகவே கருதப்படும்.

## பாலியல் துர்ப்பிரயோகத்தின் முறைகள்

1. **தொடுகை இல்லாத முறைகள்**

பாலியல் துர்ப்பிரயோகமானது தொடுகை அல்லாத வகையில் பின்வரும் முறைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

- தங்களுடைய பாலுணர்வைத் தூண்டலடையச் செய்வதற்காக துர்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர், தமது பாலுறுப்புகளை நிர்வாணமாக்கி சிறுவர்களுக்கு காட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுவர்களின் பாலுறுப்புகளை அவர் களாகவே நிர்வாணமாக்கி காட்டுவதற்கு தூண்டுதல்
- சிறுவர்களை நிர்வாணமாக்கி அவர்களை பல்வேறுபட்ட பாலியல் நிலைகளில் நிற்க வைத்துப் படம் எடுத்தல்
- சிறுவர்கள் குளியலறையில் குளிக்கும் போதும், உடை மாற்றும்போதும் ஒளிந் திருந்து பார்த்தல்
- சிறுவரின் பாலுறுப்புகள் பற்றியும், பாலியல் சம்பந்தமான கருத்துக்கள் பற்றியும் மறைமுகமாகவோ நேரடியாகவோ கூறுதல்
- ஆபாசப் படங்களை (வீடியோக்கள், புகைப் படங்கள்) சிறுவர்களுக்குக் காட்டுதலும் அவை சம்பந்தமாக கலந்துரையாடலை மேற்கொள்ளுதலும்

### 2. தொடுகை மூலமான முறைகள்

- சிறுவரின் பாலியல் உறுப்புகள், குதம், மார்பு போன்றவற்றை பாலியல் சிந்தனையுடன் தொடுதல்
- சிறுவரைப் பாலியல் ரீதியாக உதடுகளிலும் பாலுறுப்புகளிலும் முத்தமிடுதல்
- துர்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர் தனது பாலுறுப்புகள், குதம், மார்பு போன்றவற்றை சிறுவர்களை தொடச் செய்து உணர்ச்சி களைத் தூண்டச் செய்தல்
- துர்ப்பிரயோகி தனது விரல்களை, பாலு றுப்பை அல்லது ஏதேனும் உபகரணத்தை சிறுவரின் வாய், குதம், பாலுறுப்பு என்பவற்றில் செலுத்தி சிறுவரின் பாலியல் உணர்வைத் தூண்டுதல் அல்லது சிறுவரைத் தனக்கு அவ்வாறு தூண்டும்படி செய்தல்
- துர்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர், சிறுவரைத் தொடுதல், உரசுதல், தடவுதல், முத்தமிடல், கட்டியணைத்தல் அல்லது மடியில் வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- சிறுவரோடு புணர்ச்சியில் ஈடுபடுவதற்கு முயற்சி செய்தல் அல்லது உடலுறவு கொள்ளுதல்

பாலியல் துர்ப்பிரயோகத்தில் ஈடுபடும் நபர்கள் (Abuser), சிறுவரை தம்மோடு அணைத்துக் கொண்டு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ சுய இன்பத்தில் ஈடுபடுவார்கள். இவர்களில் சிலர் சிறுவர்களது பாலுறுப்புகளைக் கையாண்டு மகிழ்ந்து அவர்களுடைய தொடை களினிடையே விந்தினை வெளியேற்றுவர். இன்னும் சிலர் குதவழிப் புணர்ச்சியில் ஈடுபடுவார்கள். வேறு சிலர் தமது ஆணுறுப்புகளை சிறுவர்களைக் கையாள வைத்து எழுச்சியடைந்து இன்பமடைவர். தம்முடைய அதிகாரத்தைப் பாவித்து சிறுவனை அல்லது சிறுமியை பாலியற்தேவைகளுக்குப் பயன்படுத்துவர்.

சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகத்தில் பெரும்பாலும் ஆண்களே ஈடுபடுகின்றனர். கட்டிளம்பருவத்தினர் தொடக்கம் 70 வயது வரையானோர் வரை இதில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலான சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகங்கள் அவர்களுக்கு அறிமுகமானவர்களாலேயே மேற்கொள்ளப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக் கின்றன. குறிப்பாக இவை நெருங்கிய உறவினர் களாலேயே முறையில்லாப் புணர்ச்சியாக (Incest) இடம்பெற்றிருக்கின்றன. சொந்தத் தந்தை, மாமா, சித்தப்பா, தாத்தா போன்ற உறவுகளால் பல பாலியல் துர்ப்பிரயோக சம்பவங்கள் அரங்கேறியிருக் கின்றன. சிறுவர் இல்லங்கள், அகதி முகாம்கள், கல்வி நிறுவனங்கள், தெரு ஓரங்கள் போன்ற பல்வேறுபட்ட இடங்களிலும் சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகங்கள் நடைபெறுகின்றன. சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர் மனநலம் குன்றிய சிறுவர்கள், மாற்று வலுவுள்ள குழந்தைகள் போன்றவர்களையும் விட்டு வைப்பதில்லை. இவர்கள் தமக்கு நிகழ்பவற்றை வெளியில் சொல்ல மாட்டார்கள் என்ற துணிவில் இவர்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.

## பாலியல் துர்ப்பிரயோகத்தினால் ஏற்படும் பாதிப்புகள்

பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களில் உடல் ரீதியாக, உள ரீதியா, நடத்தை ரீதியாகப் பல்வேறுபட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன.

### 1. உடல் ரீதியான பாதிப்புகள்

- பாலுறுப்புகளில் (Genitals) காயம், கிழிவு என்பன ஏற்படல் (பெண்ணுறுப்பு கிழிவடைதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாலுறுப்புகளில் இருந்து இரத்தம் வெளியேறுதல்
- மார்பு, வாய், உதடு, தொடை, புட்டம் என்பவற்றில் காயங்கள் காணப்படல்
- பாலுறுப்புகளில் வலியுணர்வு, கடி போன்ற உணர்வுகள்
- சிறுநீர், மலம் கழித்தலில் சிரமங்கள் ஏற்படல்
- அடிக்கடி வயிற்றுக்குத்து, வாந்தி எடுத்தல் போன்ற அசௌகரியமான வெளிப்பாடுகள்
- உணவு உண்ண மறுத்தல்
- நித்திரைக் கோளாறுகள் ஏற்படல்

உடலியல் ரீதியான பாதிப்புகளின் பாரதூரமான விளைவாகக் கர்ப்பமடைதல், பாலியல் ரீதியான தொற்று நோய்களுக்கு உள்ளாதல் (Sexually Transmitted Disease-STDs) போன்றனவும் ஏற்படலாம்.



2. உளரீதியான பாதிப்புகள்

பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளானவர்களுக்கு ஏற்படும் உளப்பாதிப்பு குறுகிய கால, நீண்ட காலப் பாதிப்புகளாகக் காணப்படும்.

குறுகிய கால உள ரீதியான பாதிப்புகள்

- குழப்பம்

தான் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு விட்டோம், அது தவறானது எனத் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர் உணர்ந்தாலும் துர்ப்பிரயோகி (Abuser) ஆரம்பத்தில் அன்பு செலுத்துவது போல் நடித்திருந்தால், குறித்த சிறுவருக்கும் அந்நபரின் மேல் அன்பு காணப்படும். சாதாரண அன்புக்கும் பாலியல் ரீதியான உறவுக்கும் இடையில் வித்தியாசம் தெரியாமல் குழப்பத்துடன் காணப்படுவர்.

- குற்ற உணர்வு

துர்ப்பிரயோகி குறித்த சிறுவர் மீது குற்றம் சாட்டுவார். இதனால் குறித்த பிள்ளை தான் பிழையான செயலில் ஈடுபட்டு விட்டேன் என்று எண்ணத் தொடங்கும். துர்ப்பிரயோகம் தொடர்ச்சியாக நடைபெற்றிருந்தால், பிள்ளை இதை நீண்ட நாட்களுக்கு இரகசியமாக வைத்திருப்பார். இதனால் பிள்ளையும் இதை விரும்பி ஏற்றுக் கொண்டதா என்ற விதத்தில் கேள்விகள் கேட்கப்படும்போது பிள்ளையில் கடுமையான குற்றவுணர்ச்சி ஏற்படும்.

- கோபம்

துர்ப்பிரயோகி மீது கோபம் ஏற்படும். இச்சம்பவத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தவறி விட்டோம் என்று தன் மீது கோபம் ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் தன்னைப் பாதுகாக்கத் தவறிய பெற்றோர், பாதுகாவலர் மீது கோபம் ஏற்படும்.

- பழிவாங்கும் உணர்ச்சி

வயது வந்த சிறுவர்களுக்குப் பழிவாங்கும் உணர்ச்சி ஏற்படும். குறிப்பாகத் தன்னைப் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கியவரைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கிக் காணப்படும்.

- குறைந்த கவனம்

கல்வி, உணவு, சுய பராமரிப்பு என்பவற்றில் இவர்களுக்குக் கவனம் செலுத்த முடியா நிலை ஏற்படும்.

- கவலையுணர்வு

மற்றவர்கள், பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளான பிள்ளைகளைக் குற்றம் சாட்டும்போதும் அவர்கள் கூறுவதை நம்பாதபோதும் பாடசாலை மற்றும் பிற இடங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்படும்போதும் தாங்க முடியாத கவலையுணர்வு ஏற்படும்.

- வெட்க உணர்வு

பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட பிள்ளை மீது மற்றவர்கள் குற்றம் சாட்டும்போது வெட்கவுணர்வு ஏற்படும். அது மட்டுமன்றித் தான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னித் தன்மையை இழந்து விட்டேன், அசுத்தமாக்கப்பட்டு விட்டேன், மற்றைய சிறுவர்களை விட நான் வித்தியாச மானவர் என்ற ரீதியில் எண்ணுவதால் கடுமையான வெட்கவுணர்வு ஏற்படும்.

- பயம்

தான் மீண்டும் மீண்டும் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படலாம் என்ற அச்சம் காணப்படும். துர்ப்பிரயோகியின் அச்சுறுத்தலினால் தனக்கும் தனது குடும்பத்திற்கும் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு விடுமோ என்ற பயம் காணப்படும். இச்சம்பவம் வெளியே தெரிந்தால் தனக்கு என்ன நடக்குமோ என்ற பயம், பொலிஸ், வைத்தியசாலை, நீதிமன்றங்களுக்குச் செல்வதற்குப் பயம் போன்றன காணப்படும். மேலும் தான் இச் சம்பவத்தை வெளியில் சொல்லும்போது மற்றவர்கள் தன்னை நம்ப மாட்டார்கள் என்ற பயம் போன்றன இவர்களிடம் காணப்படும். இவற்றின் காரணமாகவே பல சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகங்கள் நீண்ட காலமாக வெளியே தெரியாமல் இடம்பெறுகின்றன.




### நீண்ட கால உள ரீதியான பாதிப்புகள்:-

- பிறர் மேல் நம்பிக்கையின்மை

தான் நம்பிக்கை வைத்திருந்த நபரினால் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகும்போது, அது அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழக்கச் செய்வதோடு, மற்றவர்கள் மேல் சிறுவர் வைத்திருந்த நம்பிக்கையையும் இழக்கச் செய்கின்றது. இது ஆளிடை உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது எதிர்காலத்தில் நல்ல நட்பை ஏற்படுத்திக் கொள்ள முடியாமை, தனது கணவன் அல்லது மனைவியிடம் நம்பிக்கையீனம் போன்றவற்றை ஏற்படுத்தும்.

- குறைந்த சுயமதிப்பு

பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளான வர்கள் தாங்கள் ஊறுபடுத்தப்பட்டவர்கள், வித்தியாச மானவர்கள், நிராகரிக்கப்பட்டவர்கள் என எண்ணுவ தனால் தாங்கள் மதிப்பற்றவர்கள் என எண்ணு கின்றனர். இதனால் இவர்களில் குறைந்த சுயமதிப்பு காணப்படும். இதனால் தமக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய உரிமைகளைக் கூட இவர்களால் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. எதிர்த்து நிற்றல் இவர்களுக்குக் கடினமானதொன்றாகக் காணப்படும்.

- நாட்பட்ட பதகளிப்பு

துர்ப்பிரயோகம் தொடர்பான சம்பவங்கள் நீண்ட காலமாக ஆறாத ஆழமான வடுவாகக் காணப்படும். இதனால் அச்சம்பவம் பற்றிய ஞாபகங்கள் ஏற்படும்போது பயம், அதிகரித்த இதயத் துடிப்பு, நடுக்கம், வியர்த்தல் போன்ற வெளிப்பாடுகள் ஏற்படும். இவற்றினால் பதகளிப்பு/பதட்டம் (Anxiety) ஏற்படும். நீண்ட காலப் பாதிப்பாகத் தனது துணையுடனான பாலியல் உறவில் ஈடுபடுவதற்குக் கூடப் பயம்/பதட்டம் என்பன தடையாக அமையும்.

### 3. நடத்தை ரீதியான பாதிப்புகள்

#### குறுகிய கால நடத்தை ரீதியான பாதிப்புகள்

- படுக்கையில் சிறுநீர் கழித்தல்
- பாலியல் ரீதியிலான நடத்தைகள்

மற்றைய சிறுவர்களுடனும் விளையாட்டுப் பொருட்களுடனும் தமது வயதிற்கு மீறிய பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல். பாலியல் விடயங்களில் அளவுக்கதிகமாக அக்கறை காட்டுதல், பாலியல் விடயங்கள் பற்றி உரையாடுதல் போன்றன இதிலடங்கும். மேலும் இவர்கள் தங்களின் பாலுறுப்பு களைக் கையாளல், அளவுக்கு அதிகமாகச் சுய இன்பம் பெறுதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வன்போக்கான நடத்தைகள்

தமது நண்பர்கள் மீதும் வளர்ப்புப் பிராணிகளின் மீதும் ஆக்கிரமிப்பான நடத்தைகளில் ஈடுபடுவர். தமது கோபத்தை வெளிப்படுத்தச் செல்லப்பிராணிகளைக் காயப்படுத்துவர். இல்லையெனில் வீட்டிலுள்ள பொருட்களை உடைத்தல், எறிதல் போன்ற நடத்தைகளிலும் ஈடுபடுவர்.

- பற்றிக் கொள்ளும் நடத்தை

பாதுகாப்புக்காகத் தனக்கு நம்பிக்கையுள்ள ஒருவரோடா அல்லது பெற்றோரோடோ தொங்கிக் கொண்டு திரிதல், அவர்களின் அன்பை, கவனத்தைத் தமது பக்கம் ஈர்ப்பதற்கான நடத்தை களில் ஈடுபடுவர்.

- தனிமைப்படுத்தல்

மற்றவர்கள், குடும்பம், சமூகம் என்பவற்றிலிருந்து தம்மைத் தனிமைப்படுத்தி ஒதுங்கி வாழ்வர்.

- பாடசாலை முன்னேற்றத்தில் வீழ்ச்சி

குறித்த சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகத்தின் காரணமாக அனுபவித்த உடல், உள ரீதியிலான பாதிப்புகளின் காரணமாகப் பாடசாலையின் கல்வி முன்னேற்றத்தில், பரீட்சைப் பெறுபேறுகளில் சடுதியான ஒரு வீழ்ச்சி ஏற்படும். பாடசாலை வரவு ஒழுங்கீனம், பாடசாலை இடைவிலகல் என்பனவும் ஏற்படலாம்.

## நீண்ட கால நடத்தைப் பாதிப்புகள்

- பாலியல் வழி பிறழ்தலும் விபசாரமும்

பாலியல் ரீதியாகத் துர்ப்பிரயோகத்திற்கு உள்ள சிறுவர்களில் சிலர், மீண்டும் சக வயதினரோடு அல்லது வயதில் குறைந்தவர்களோடு பாலியற் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காகப் பாலியல் நடத்தைகளில் ஈடுபடுவார்கள். சிறு வயதில் பாலியல் ரீதியாகத் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கப் படுபவர்களில் பெரும்பாலானோர் வளர்ந்ததும் ஓரினச் சேர்க்கையாளராக மாறுகிறார்கள் என உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்கள் சிறுமிகளாக இருக்கும்போது பாலியல் துர்ப்பிர யோகத்திற்கு உள்ளாகும்போது எதிர்காலத்தில் அவர்களில் சிலரும் விபச்சாரிகளாக மாறுகின்றனர். சிறு வயதில் பாலியல் திருப்தியைப் பெற்றுக் கொண்டதாலும் தங்களது உடல் வர்த்தக ரீதியில் மதிப்புள்ளது என இவர்கள் கருதுவதாலும் இவ்வாறு விபச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

- மனச்சோர்வு

பாலியல் துர்ப்பிரயோகத்தினர் ஏற்பட்ட பாதிப்புகள் நீண்ட காலமாகக் காணப்படும்போது அது மனச்சோர்விற்கு இட்டுச் செல்லும்.

- தற்கொலை

பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளான ஒரு பிள்ளை, தனது வாழ்வே கேள்விக்குரியதாகி விட்டது, எதிர்காலத்தில் தனக்கு ஒன்றுமே இல்லை என்று மனதளவில் உணரும்போது தற்கொலை முயற்சிக்கு முற்படலாம். இத்தகைய துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கும் நிரந்தரமாகத் தப்பித்துக் கொள்வதற்கும் தற்கொலை ஒன்றே முடிவு எனத் தவறாக நினைத்துத் தற்கொலை மூலம் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

- எதிர்காலத்தில் துர்ப்பிரயோகியாக மாறுதல்

சிறு வயதில் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாகி மீண்ட ஒருவர்/ஒருத்தி பாலியல் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காக, வேறு ஒரு சிறுவனையோ, சிறுமியையோ பாலியல் உறவிற்கு ஈடுபடுத்து கின்றனர். இதை இவர்கள் தமது சொந்த அனுபவத்தினூடாக அறிந்து கொள்கின்றனர். இதனால் துர்ப்பிரயோகத்திலிருந்து மீண்டவர்கள் எதிர்காலத்தில் தாமும் துர்ப்பிரயோகியாக மாறுவதற்கான சாத்தியங்களும் உண்டு.

- பாலுறவில் வெறுப்பு

பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளானவர்களில் சிலர் அளவுக்கதிகமான பாலியல் நடத்தைகளில் விருப்பத்துடன் ஈடுபடும் அதே வேளை, வேறு சிலர் தமக்கு நடந்த கசப்பான அனுபவங்களின் காரணமாக பாலுறவுச் செயற்பாட்டையே வெறுக்கின்றனர். இதனால் இவர்களது எதிர்கால வாழ்வில் தமது துணையுடனான பாலுறவுச் செயற்பாட்டை நிராகரிக் கின்றனர். இதனால் ஏற்படும் மனமுறிவு மண முறிவிற்கும் இட்டுச் செல்லும்.

## பாலியல் துர்ப்பிரயோகத்தைத் தடுக்கும் வழிமுறைகள்

- விழிப்புணர்வை ஏற்படுத்தல்

சிறுவர்கள் தாங்களாகவே தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதனைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் சிறுவர் தொடர்பாகப் பணி புரிகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தர்களும் மேற்கொள்ள வேண்டும்.


பிள்ளைகளுக்கு நல்ல தொடுகை எவை, கூடாத தொடுகை எவை என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். எவரேனும் ஒருவர் பிள்ளைக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் விதத்தில் பிள்ளையை வருடும்போது/தொடும்போது என்ன செய்ய வேண்டும்?, அவ்வாறு தொடும்போது பிள்ளைகள் காட்ட வேண்டிய எதிர்ப்பு நடவடிக்கைகள் எவை என்பவற்றை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அறிமுகமில்லாத நபரொருவர் தரும் அன்பளிப்புகளை நிராகரிக்க வேண்டும், பெற்றோரின் அனுமதியின்றி எவற்றையும் வாங்கக் கூடாது என்பதெல்லாம் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

பாலியல் துர்ப்பிரயோகத்திற்குப் பிள்ளையை உள்ளாக்க முற்படும் சமயத்தில் உதவி கோரிக் கூச்சலிடுவதற்கு, அந்த இடத்திலிருந்து விரைவாக நீங்கிச் செல்ல அல்லது ஓடித் தப்பிச் செல்வதற்குத் தாம் நேசிக்கும் ஒருவருக்கு அது பற்றிச் சொல்லுவதற்குப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு மட்டுமன்றிப் பெற்றோருக்கும் பிள்ளைகளின் உரிமைகள் பற்றியும் பிள்ளைகள் தொடர்பான சட்டங்கள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சிறுவர் பாலியல் துர்ப்பிரயோகச் சம்பவமொன்று இடம் பெற்றால் பெற்றோர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், யாரை அணுக வேண்டும் என்பது பற்றியும் பெற்றோருக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

சிறுவர் ஒருவர் பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமை உறுதியாகத் தெரிந்திருப்பின் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ, வைத்தியசாலைக்கோ செல்லுதல் அவசியமானதாகும். மிக முக்கியமாகத் துர்ப்பிரயோகத்தின்போது அணிந்திருந்த ஆடையுடன் செல்ல வேண்டும். குறித்த பிள்ளை உடனடியாகச் சட்ட மருத்துவ அதிகாரியினால் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும். சட்ட நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். குறித்த பிள்ளையின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும். குற்றம் புரிந்த நபர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவருக்குத் தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். எதிர்காலச்சமுதாயத்தைச் செதுக்கு




கின்ற சிற்பிகள். இத்தகைய இளம்மொட்டுகளை, பாலியல் துர்ப்பிரயோகத்தின் மூலம் சிதைக்கும் நிலை அண்மைக்காலமாக அதிகரித்து வருவது வேதனைக்குரிய விடயமாகும். எனவே, இத்தகைய நிலை இல்லாத சமுதாயத்தை உருவாக்க அனைவரும் உழைக்க வேண்டும். சிறுவர்களைத் துர்ப்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பது பெற்றோர் களினதும் ஆசிரியர் களினதும் அரச அதிகாரி களினதும் சமூக நலன் விரும்பிகளினதும் கடமை யாகும். இதனை உணர்ந்து செயற்பட வேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகும்.

## References


1. கலாநிதி புத்திபிரபா புத்திரண (2008) <u>"துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிய பிள்ளைகளைச் சுகப்படுத்துவதற்குக் கைகொடுப்போம்"</u> சிறுவர் பாதுகாப்பு இலங்கை வெளியீடு, கொழும்பு
2. சேனக சுதுசிங்க (2012) <u>"சிறுவர் உலகத்திற்குப் பெற்றோர்கள் சக்தி"</u> தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
3. ஸ்ரலின், இ. (2007). <u>நான்</u> இதழ் 32 "பாலியல் துர்ப்பிரயோகம்" டி மசனட் குருமடம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.மேனகா

# இன்றையகாலத்தில் மனிதர்களிடையே அதிகரித்துச் செல்லும் வன்போக்கு நடத்தைக்கான காரணங்கள்

மனிதன் ஓர் சமூகப்பிராணி என்பதால் மனிதர்களுக்கிடையிலான இடைவினைகள் தவிர்க்கமுடியாதன. இந்த இடைவினைகள் சிலருக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாகவும் சிலரை நோகடிப்பதாகவும் அமைந்துவிடுகிறது. ஏன் இவ்வாறு இருக்கின்றன? என ஆராய்கின்ற போது மக்கள் இயல்பாகவே வன் போக்கினைக் கொண்டிருப்பதாகும். இந்த வன்போக்கு உணர்வு அதிகமாக உள்ள போது நோகடிப்பதாகவும் அல்லது துன்ப மூட்டுவ தாகவும் அமைந்துவிடுகின்றது. Hebbs என்ற உளவியலாளர் மனிதன் இயல்பிலேயே போரிடும் குணம் கொண்டவன் என்று குறிப்பிடுகின்றார். அந்தவகையில் மனிதர்களிடையே இன்றைய காலகட்டத்தில் மலிந்துகிடக்கும் வன்போக்கு நடத்தைக்கான காரணங்களினைத் தேடுவதாக இக்கட்டுரை அமைகின்றது.




பிறிதொரு நபருக்கு நோக்கத்துடன் ஊறுவிளைவித்தல் அல்லது துன்புறுத்தல் நடத்தை வன்போக்கு எனப்படுகின்றது. இந்த வன்போக்கு நடத்தையை எதிர்கொள்ளம் உயிரி அதனை ஏற்க விருப்பமற்றதாய் காணப்படும் என்பது இங்கு கவனத்திற் கொள்ளப்படும். (Baran 1980) அதாவது ஒருவரது நடத்தையானது மற்றவரை உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ காயப்படுத்துகின்ற போது அதனை நாம் வன்போக்கு என்று கொள்கின்றோம். மேலும் துன்புறுத்தலை தவிர்க்க விளைகின்ற பிறிதொரு உயிரிக்கு நோவை அல்லது காயத்தை ஏற்படுத்தும் எந்த ஒரு நடத்தையும் வன்போக்கான நடத்தை என்று அழைக்கப்படலாம். இது மனிதன் மனிதன் மீதுகொள்ளும் ஆக்கிரமிப்பாகவோ. விலங்கு விலங்கு மீதுகொள்ளும் ஆக்கிரமிப்பாகவோ அமையலாம். எனவே ஒரு உயிரி மீது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு நடத்தைகள் அனைத்தும் வன்போக்கான நடத்தைகளே.

இந்த வன்போக்கான நடத்தைகளை மனிதர்கிடையே தோற்றுவிக்கும் காரணிகளினை பின்வரும் வகைகளாக நோக்கலாம்.

முதலாவதாக உயிரியல் காரணிகளினை நோக்கின் வன்போக்கு நடத்தைகள் ஒருவரின் பரம்பரை வழியாகவும் கடத்தப்படலாம். மிருகங்களைப் போல மனிதர்களும் வன்போக்கினை வெளிப்படுத்துகின்றனர். எனினும் மிருகங்கள் மனிதர்களைவிட அதிகமான வன்போக்கு நடத்தைகளை வெளிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி வன்போக்கானது பரம்பரை ரீதியாக கடத்தப்படுவதுடன் மனிதஉடலிலுள்ள சில நரம்புக்கடத்திகள், ஹோமோன்களின் மட்டம் கூடுவது போன்ற செயற்பாடுகளினால் அதிகரிக்கப்படு கின்றது. அதாவது Seretonin மட்டம் கூடுதல் Teste storon மட்டம் கூடுதல் வன்போக்கு நடத்தையைத் தூண்டும் இக் ஹோமோன்கள் மற்றும் நரம்புக் கடத்திகள் வெளிச் சூழல்களில் மனிதனுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களினாலும் அதனால் ஏற்படும் ஏமாற்றம் காரணமாகவும் அளவுக்கதிகமாகச் சுரப்பதனால் வன்போக்கு தூண்டப்படுகின்றது. இதனைவிட மூளையிலுள்ள பகுதி தூண்டப்படுகின்ற போதும் வன்போக்கு நடத்தையை ஏற்படுத்தப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக ஏமாற்றத்தினை நோக்கின் இது Frustation Aggressive Hypothesis ஊடாக விளக்கப் படுகிறது. 1939ம் ஆண்டளவில் Yarl University ஐ சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒன்று சேர்ந்து வன்போக்கு தொடர்பான ஆய்வுகளினை மேற் கொண்டனர். இவர்களின் பிரகாரம் மனிதர்கள் ஒவ்வொருவரும் தமக்கென்று ஒரு இலக்கு அல்லது நோக்கங்களினைக் கொண்டிருப்பர். அவ் இலக்குகள் அல்லது நோக்கங்கள் அடையமுடியாத வேளையில் தாங்கள் ஏமாற்றப்பட்டதாக உணர்கின்றனர். இவ் ஏமாற்ற உணர்வு மனிதர்களிடையே வன் போக்கினைத் தூண்டுகின்றன. இதன் காரணமாக மனிதர் வன்போக்கான நடத்தையில் ஈடுபடு கின்றனர். Bernord Berkowitz என்பவர் 1989ஆம் ஆண்டு மீண்டும் ஏமாற்றம் வன்போக்கு பற்றிய கொள்கையை ஆய்வுசெய்தார். தனது ஆய்வின் முடிவில் இவர் பின்வரும் கருத்துக்களைமுன் வைத்தார்.

* ஏமாற்றம் ஏற்படும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் வன்போக்கு ஏற்படுகின்றது.
* சமூகக் கட்டுப்பாடுகள் ஒழுக்கவதிகள் காரணமாக வன்போக்குநடத்தை கட்டுப் படுத்தப்படுகின்றன.
* சில மனிதரில் ஏற்படும் ஏமாற்றம் வேறு விதமான நடத்தையைத் தோற்று விக்கின்றன.
* உணர்வு சார்ந்த நடத்தைகளை வெளிப் படுத்தும் மனிதர்களைவிட அறிவுரீதியான நடத்தையை வெளிப்படுத்தும் மனிதர்கள் வன்போக்கு நடத்தைகளினை குறைவாக வெளிப்படுத்துவர்.

இக் கருத்துக்களின் அடிப்படையில் வன்போக்கு என்பது Bernord என்பவரால் பின்வருமாறு கூறப்பட்டது. அதாவது ஏமாற்றம் ஒரு மனிதனில் வன்போக்கினைத் தூண்டுகின்றது. ஆனால் குறிப்பிட்ட ஒரு சூழ்நிலை மற்றும் அறிகை சம்பந்தமான விடயங்களை வன்போக்கினைக் குறைக்கின்றனஎன்கின்றார்.


அடுத்ததாக சமூககற்றல் கொள்கை வன் போக்கினை விளக்குவதில் எத்தகைய பங்குவகிக் கின்றது என நோக்கலாம். இதன்படி வன்போக்கு நடத்தைகள் மனிதனால் கற்றுக் கொள்ளப்படு கின்றன. பின்பு அவை தொடர்ந்து பின்பற்றப்படு கின்றன. இது ஒருவனது அவதானம் மற்றும் பிரதிபலிப்பு நடத்தை ஆகியவற்றால் வெளிப்படுத்தப் படுகின்றது. சிறுவர்கள் தமது மாதிரிகளின் அதாவது அவர்களை யார் கவருகின்றார்களோ அவர் களினூடாக வன்போக்கினையும் அதன் நடத்தை களையும் பார்ப்பதனால் தாமும் அதனை மேற் கொள்கின்றனர். மேலும் பெற்றோர்களால் அதிக தண்டனைக்குள்ளாக்கப்படும் சிறுவர்கள் வன் போக்குடையவர்களாக எதிர்காலத்தில் வருவார்கள். இதனை விளக்க Dollart என்பவர் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டார். இது Bobo Doll Experiment என அழைக்கப்பட்டது. அதாவது ஒரு மாதிரி, பொம்மைக்கு அடித்து உதைத்ததை அவதானித்த சிறுவர்கள் தனித்துவிடப்பட்ட போது தமது பொம்மைகளுக்கும் அம் மாதிரி அடித்து உதைத்தமாதிரியே செய்துள்ளனர். இதன் மூலம் சிறுவர்கள் வன்போக்கினை அவதானித்ததின் மூலம் பெற்றுக் கொள்கின்றனர் எனக் கூறுகின்றார். இதனை விடவளர்ந்தவர்களின் நடத்தையை அதிகமாகப் பின்பற்றும் சிறுவர்கள் அதிகமாக வன்போக்கு நடத்தையில் ஈடுபடுவதாக Eron என்பவர் கூறுகின்றார். குறிப்பாகப் பிள்ளைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சியினூடாகவும் அதிகள வான வன்போக்கு நடத்தையினைப் பெற்றுக் கொள்கின்றனர். உதாரணமாக Hawai V O என்ற வன்முறைசார்ந்த படம் ஒளிபரப்புசெய்யப்பட்ட காலத்தில் என்றுமில்லாதளவிற்கு வன்முறை குறித்த சமூகத்தில் அதிகமாகக் காணப்பட்டது.

வன்நடத்தைகள் புலனுணர்வு சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சித் திட்டங்களாக மனிதர்களின் மனங்களில் பதிக்கப்படுகின்றன. இவ்வாறு பதிக்கப்படுகின்ற வன்போக்கு நடத்தைகள் பிரச்சினைகளினைத் தீர்ப்பதற்கான அதிகம் வழிமுறைகளாக அமைகின்றன. இத்தகைய நடத்தைகள் சமூக எண்ணக் கரு வாழ்க்கைச் சுற்றுவட்டம் ஊடாக மனிதர் களில் நிகழ்ச்சித் திட்டமாகச் செய்யப்படுகின்றன. உதாரண மாக சாதியரீதியாக அல்லது நிறரீதியாக ஏற்படும் வன்போக்கு நிலையை பின்வரும் விளக்கப்படம் மூலம் காணலாம்.




மேலும் கலாச்சாரக் காரணிகளும் வன்போக்கினைத் தூண்டுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது ஒரு கலாச்சாரத்தில் வன்முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற போது அங்கு வன்போக்கு அதிகமாக காணப்படும். இதனை விட ஒரு குழுவிலுள்ள அங்கத்தவர்களின் வன்போக்கு நடத்தையின் அளவிற்கேற்ப அக் குழுவின் அங்கத்தவர்களின் வன்போக்கும் காணப்படும். எனவே குழுச் செல்வாக்கும் வன்முறையைத் தூண்டுகின்றன.

உண்மையில் மேற்கூறிய காரணிகள் யாவும் வன்போக்கினை மனிதர்களிடையே அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. இவற்றைக் கவனத்திற் கொண்டு வன்போக்கினை தூண்டும் தூண்டல் காரணியை அறிந்து கொண்டு செயற்படு கின்றபோது அதிகரித்துச் செல்லும் வன்போக்கினை குறைக்கலாம். அதனைவிட Freud கூறும் வடிகால்முறை சிகிச்சை அதாவது Carthasis (ஓவியம் வரைதல், சிற்பம் செதுக்குதல், நாடகம் உருவாக்குதல், நடித்தல்) போன்ற முறைகளைப் பயன்படுத்தி ஆரோக்கியமாகக் கையாளலாம். இதனைவிட தொடர்பாடல் முறைகளினை வன்முறை அற்றதாக்கி வன்போக்கினை தூண்டுவதினை தடுக்கலாம். உயிரியல் ரீதியாக ஏற்படும் தூண்டல் காரணிகளினை தக்கமருந்துப் பாவனை மூலம் சரிசெய்யலாம். சமூகமட்டத்தில் குடும்பத்திற்கிடையே யான நெருக்கத்தினை குறைப்பதன் மூலம் துஷ்பிரயோகங்களினைக் குறைத்து பொருளா தாரத்தை அதிகரிப்பதன் மூலமும் மது போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் வன்போக்கினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம்.

## APA இன் ஒழுக்கம் சார் வழிகாட்டல் முன்மொழிவுகள்

1. ஆய்வாளர்கள் ஆய்வு விடயங்களிற்கு / மக்களுக்கு உள ரீதியாகவோ உடல் ரீதியாகவோ துன்பம் விளைவிப்பதை தவிர்க்க வேண்டும்.
2. இழிவுபடுத்தப்படுகிறேன், தவறாக நடாத்தப்படுகிறேன் என உணர்ந்து ஆய்வு விடயம் விலகக் கூடாது. அவ்வாறு விலகின் அவர்களது உரிமைகள் மீறப்பட்டுள்ளன.
3. சில வேளைகளில் சில ஆய்வுகளில் உளம் சார்ந்த, உடல் சார்ந்த அசௌகரியங்கள் ஏற்பட இடமுண்டு. அவ்வாறாயின் ஆராய்ச்சியாளர் ஆய்வு விடயங்களிற்கு இதனை முன்கூட்டியே அறிவித்து அவர்களது சம்மதத்தைப் பெற வேண்டும்.
4. ஆய்வு விடயங்களை ஏமாற்றுவது அத்தியாவசியமானதாயிருப்பின் ஏன் இத்தகைய ஏமாற்றுவது தேவையானது என்பதை ஆய்வின் பின்னர் விளக்க வேண்டும்.
5. ஆய்வு விடயமொன்றின் பங்களிப்பு அவரது விருப்பத்திற்குரியது. (கட்டாயப்படுத்தல் கூடாது) ஆய்வு விடயமொன்று ஆய்விலிருந்து விலக விரும்பின் அவரது தீர்மானத்திற்கு மதிப்பளித்தல் வேண்டும்.
6. ஆய்வு விடயங்கள் அந்தரங்கம் பேணும் உரிமையுடையன. ஆய்வு விடயம் தாமாகத் தமது அடையாளத்தை வெளிப்படுத்தினால்லொழிய ஆய்வாளர் வெளிப்படுத்தக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சுனன்



# அல்பிரெட் அட்லர் (1870-1937)

வியன்னாவில் பிறந்தவர்; என்புருக்கி நோய் காரணமாக முடமானவர்; நியூமோனியாவினால் பல முறை பாதிக்கப்பட்டவர். பொதுவாக, நோயுள்ள குழந்தை. இருந்தபோதும் விடாமுயற்சியினாலும் தீர்மானம் மிக்கவராக விளங்கியமையாலும் தனது உடலியற்குறைபாடுகளைச் சமாளித்து, மருத்துவத் துறையைக் கற்றுப் பின் Frendஉடன் இணைந்தார். 1902இல், உளப் பகுப்பாய்வு தொடர்பாக வாரந்தோறும் புதன் கிழமைகளில் புரொய்டின் வீட்டில் நடைபெற்ற குழுக் கலந்துரையாடல்களில் தன்னை இணைத்துக் கொண்டு புரொய்டின் அர்ப்பணிப்புள்ள சீடனானார். 1911இல் ஆளுமையில் நனவிலி உள்ளத்தினதும் பாலியல் ஊக்கலினதும் முக்கியத்துவத்தை மறுதலித்து, புரொய்டிலிருந்து விலகிக் கொண்டார்.

1927இல் தனது சொந்தமான கொள்கையை விருத்தி செய்து, அதனைத் தனியாள் உளவியல் என அழைத்து, பிரபல்யமாக வந்தார்; இதனால் புரொய்டின் கோபத்துக்கு ஆளானார்.

ஆளுமை விருத்தியில் உள்ளார்ந்த இயல்பூக்கங்களின் முக்கியத்துவத்தை மறுத்து, சமூகக் காரணிகளுக்கு முழுமையான அழுத்தம் கொடுக்க முதலாவது உளப் பகுப்புவாதி இவர்.

ஒரு தனியாளின் ஆளுமை தனித்துவமானதென்றும் தனது செயல்களுக்கான காரணங்கள் பற்றி அவன் விழிப்பு நிலையில் உள்ளான் என்றும் தனது எண்ணக்கருவை விருத்தி செய்தார்.

அநாதரவான, பிறரில் தங்கியுள்ள, சிறிய பிள்ளைகள் போல, எல்லா மக்களும் தாழ்வுச் சிக்கல் உணர்வுகளை அநுபவிப்பதாக அட்லர் நம்பினார்.

இந்த உணர்வுகளைச் சமாளிக்கக்கூடிய வழி வகைகளுக்கான தேடல் எல்லா உயிரிகளிலும் ஆதிக்கம் செலுத்துவதாகவும் அவர் வாதிட்டார்.

வளரவும் ஆதிக்க செலுத்தவும் தான் மேலோங்கவும் தூண்டும் உள்ளார்ந்த உந்தல் ஒவ்வொருவரிடமும் இருப்பதாக அட்லர் நம்பினார். அட்லரின் முக்கியமான கருத்துகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் எடுத்துரைக்கப்படலாம்:-

1. தாம் மேலோங்க வேண்டும் என்று முயற்சித்தல்
2. கற்பனையான முடிவுவாதம்
3. வாழ்க்கைப் பாணி
4. சமூக நாட்டம்

## மேல்நிலைக்கு முயற்சித்தல்

பூரணத்துவத்துக்காக அல்லது தன்னியல் நிறைவுக்காக முயற்சித்தலை மேல்நிலை என்பதால் கருதினார். ஒவ்வொரு மனிதனும் வாழ்வின் உயர்மட்ட விருத்தியை நோக்கி உந்தப்படுகிறான்.

மேல்நிலைக்கு முயற்சித்தல் என்பது உள் உந்தல் ஆயினும் ஒருவனின் வாழ்வில் பல வழிகளில் வெளிப்படும்.

சில வேளைகளில் தாழ்வுச் சிக்கலானது, தாம் மேலோங்க வேண்டும் என்ற முயற்சிக்குப் பிள்ளையைக் கட்டாயப்படுத்துகிறது. அதாவது தாம் மேலோங்க வேண்டும் என்ற முயற்சி தாழ்வுச் சிக்கலை ஈடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் ஊக்கலை வழங்குகிறது. ஆரோக்கியமுள்ள, வலிமையான தனது மூத்த சகோதரர்களிலும் பார்க்கத் தாழ்ந்தவனாகத் தன்னை உணர்ந்ததனால் ஏற்பட்ட தாழ்வுச் சிக்கலே, அட்லரிடம் தான் மேலோங்க வேண்டும் என்ற முயற்சியூடாக இத்தாழ்வுச் சிக்கலை ஈடு செய்யும் ஊக்கலை வழங்கியது என்பர். அதாவது, தனது பிள்ளைப் பருவக் குறைப்பாட்டைப் புகழ் மிக்க உளப் பகுப்பாய்வாளராக வந்து அட்லர் ஈடு செய்து கொண்டார்.

## கற்பனையான முடிவுவாதம்

எதிர்கால இலக்குக் குறித்த எதிர்பார்ப்புகளால் மனிதன் ஊக்குவிக்கப்படுகிறான் என அட்லர் நம்பினார். மனித செயல்கள் யதார்த்தத்தைக் கட்டாயம் அநுசரிக்காத, கற்பனையான எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதைக் கற்பனையான முடிவுவாதம் சுட்டுகிறது. இக்கற்பனைகளுக்கான சில உதாரணங்கள்: இறப்பின் பின்னரான வாழ்வு பற்றிய நம்பிக்கையும் பாவமான செயல்கள் தண்டனைக்குள்ளாகும் என்ற நம்பிக்கையும். இக்கற்பனைகளை மனிதன் நம்பும்போது, வாழ்க்கையில் வெற்றிகரமாக ஒத்துப் போவதற்கு அவை மனிதனுக்கு உதவுகின்றன. கடந்த கால நிகழ்வை விட, எதிர்கால இலக்குகளே மனிதனின் நடத்தையைப் பாதிப்பதாக அட்லர் நம்பினார். உதாரணமாக, இந்தியாவில், நல்ல மனிதர்களுக்குச் சொர்க்கம் கிடைக்கும் என்ற கற்பனை அவர்களின் முழு நடத்தையிலும் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகிறது.

## வாழ்க்கைப் பாணி

வாழ்க்கை இலக்கை அடைதலுக்கான சில இயல்புகள், திட்டம், வழி வகைகள் என்பவற்றின் ஒவ்வொரு அம்சத்தையும் உள்ளடக்கிய சாரம் வாழ்க்கைப் பாணி எனப்படும்.

ஒருவரை வேறொருவரிலிருந்து வேறுபடுத்தும் ஆளுமைப் பண்பு வாழ்க்கைப் பாணி ஆகும்.

அட்லரைப் பொறுத்த வரை, அடிப்படையில் மனித நோக்கங்கள் ஒத்தவையும் மேல் நிலையை எய்துவதற்கான முயற்சிக்கான போக்கைக் கொண்டவையும் ஆகும். வாழ்க்கை இலக்கை எய்துவதற்குப் பல வழிகள் உள்ளன. ஒருவர் சமூகத் தொடர்புகளினூடாகவும் இன்னொருவர் கல்வி, விஞ்ஞானம் ஆகியவற்றினூடாகவும் ஏனையோர் வேறு வழிகளிலும் இதனை நாடலாம். வாழ்க்கை இலக்கை எய்துவதற்கான வெவ்வேறு வழிகள் ஒவ்வொன்றும் ஒருவனின் தனித்துவமான வாழ்க்கைப் பாணியைக் காட்டுகின்றன. அட்லரின் கருத்துப்படி, மேல் நிலைக்கான முயற்சியில் கற்பனை முடிவுவாதம் எனும் வாழ்க்கைப் பாணியை நாம் விருத்தி செய்து கொள்கிறோம். இதனை "சுய இலட்சியத்தை வழிநடத்தல்" என அட்லர் குறிப்பிட்டார். இதன் அர்த்தம் "உண்மையல்லாத நம்பிக்கைகளினால் ஊக்குவிக்கப்படலாம்" என்பதாகும்.

உதாரணமாக, "நல்ல பிள்ளைகள் கடைசியாக முடிப்பார்கள்" என்ற நம்பிக்கையினால் வழிநடத்தப்படுபவர் இரக்கமில்லா, போட்டி மிக்க வாழ்க்கைப் பாணியை வெளிப்படுத்துவர்; இதற்கு மாறாக, "பெறுவதை விடக் கொடுப்பதே மகிழ்ச்சியைத் தருவது" என்ற நம்பிக்கையுடையவர் அநுகூலமான வாழ்க்கைப் பாணியை வெளிப்படுத்துவர்.

## சமூக நாட்டம்

ஒருவர் தனதும் பிறரதும் நலனில் செயலூக்கமுள்ள கரிசனையை விருத்தி செய்யும் போது மேல் நிலைக்கான முயற்சி மிகவும் நலமார்ந்ததாக அமைவதாக அட்லர் நம்பினார். இதனைச் சமூக நாட்டம் என அட்லர் குறிப்பிட்டார்.

மேல் நிலைக்கான முயற்சியாக அமையும் உந்தல் காரணமாக, மருத்துவர் ஒருவர் சமூகத்துக்குப் பயனளிக்கக்கூடிய சமூக நாட்டத்தை வெளிப்படுத்துகிறார். உயர்சமூக நாட்டமுள்ள ஆசிரியர்கள் வகுப்பறைகளில் உயர்சக்தி வாய்ந்தவர்களாக இருப்பர். ஆனால், ஒரு குற்றவாளியிடத்து முன் நிலைக்கான முயற்சி சமூக நாட்டம் கொண்டதாக இருக்க மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பரணீதரன்

# மனிதனது பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்தலின் அடிப்படையில் மாஸ்லோவின் கொள்கை



உடலினுள்ளிருந்து எழும் வேட்கைகள், கிளர்சிகள் ஆகிய தூண்டல்கள், புறச் சூழலிலிருந்து எழும் தூண்டல்கள், மனிதனின் சமூக உறவினின்று எழும் தூண்டல்கள் எனப் பல்வேறுபட்ட தூண்டல்களினால் மனித நடத்தை தோற்றுவிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றது என உளவியல் கூறுகின்றது. மனித நடத்தை இயங்கும் தன்மையுடையது (அதாவது, மாற்றமடையக் கூடியது).

இந்த மனித நடத்தைக்குப் பின்னணியாக அமையும் தேவைகளையும் அவற்றுடன் இணைந்த ஊக்கிகளையும் பற்றிய உளவியற்கொள்கையாக "மாஸ்லோவின் தேவை பற்றிய படிமுறைக் கொள்கை" அமைகிறது.

## மாஸ்லோவின் கொள்கை

மனிதர்கள் பல்வேறு தேவைகளை உடையவர்களாக இருக்கிறார்கள் என்றும் இத்தேவைகளுக்கான ஊக்கல்கள் அல்லது உந்தல்கள், தேவைகளின் ஒரு படிமுறை அடுக்கமைவாக உள்ளது என்றும் மாஸ்லோவின் கொள்கை குறிப்பிடுகின்றது.

மாஸ்லோவின் தேவைகளின் அடுக்கமைவு என்பது, அடிப்படை குறைந்த தேவைகள் தூண்டப்படுவதற்கு முன்பாக, முன்னுரிமை அடிப்படையில், அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட தேவைகளின் ஓர் அடுக்கமைவாகும்.





இந்த அடுக்கமைவு ஒழுங்கானது ஒரு பிரமிட்டினால் சித்திரிக்கப்படும். மாஸ்லோ ஆரம்பத்தில் ஐந்து படிமுறைத் தேவைகளை இப்பிரமிட்டில் குறித்தார். பின்பு இப்படிமுறைத் தேவைகளை ஏழாக விரிவுபடுத்தினார்.

மனிதனின் தேவைகளை இவ்வாறு ஓர் அடுக்கமைவில் வரிசைப்படுத்தியிருக்கும் மாஸ்லோ அவ்வரிசைப்படுத்தலுக்கான காரணங்களையும் விளக்கியுள்ளார். பிரமிட்டின் அடியிலுள்ள முதலாவது படிமுறைத் தேவைகள் மிகவும் அடிப்படையானவை. இவை உயிர் வாழ்வதற்கு அவசியமான ஆதார உடற்கூற்றியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Adapted 7 level Hierarchy of Needs diagram based on Maslow's theory**




தேவைகள் ஆகும். உணவு, நீர், நிலையான உடல் வெப்பநிலை போன்றவற்றுக்கான தேவைகள் இவற்றுள் அடங்கும்.

இத்தேவைகள் நிறைவேறாதபோது, மனிதன் பிற தேவைகள் எதனையும் நாட மாட்டான். இத்தேவையே அதனை எய்துவதற்கான ஊக்கலாக மனிதரிடத்து அமைந்து விடுகிறது.

முதலாவது தேவை நிறைவேறிய பின்பு அவனிடத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுகின்றது. இயற்கையாகவும் பிற வழிகளிலும் மனிதன் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் ஏற்படக் கூடிய ஆபத்துகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறான். இதுவே பாதுகாப்புத் தேவை.

இவ்வாறாக, வரிசையாக ஒவ்வொரு தேவையையும் நிறைவேற்றிக் கொண்ட நிலையிலேயே மனிதன் அடுத்த படிநிலையிலுள்ள தேவை பற்றிச் சிந்திக்க முடியும் எனக் குறிப்பிட்டு, பிரமிட்டின் அடியிலிருந்து உச்சியை நோக்கிச் செல்லும்போது அது ஒடுங்கிச் செல்வது போலவே, மேல் நிலையிலுள்ள ஒவ்வொரு தேவையும் தேவைப்படுவோரது எண்ணிக்கையும் குறைந்து செல்லும் எனவும் மாஸ்லோ குறிப்பிடுகிறார்.

முதல் நான்கு தேவைகளான உடலியல் தேவை, பாதுகாப்புத் தேவை, அன்புத் தேவை, கணிப்புத் தேவை ஆகியன குறைபாட்டுத் தேவைகள் (deficient needs) எனவும் ஏனைய மூன்று உயர் மட்டத் தேவைகளான அறிகைத் தேவை, அழகுணர் தேவை, தன்னியல் நிறைவுத் தேவை ஆகியன வளர்ச்சித் தேவைகள் (growth needs) என்றும் குறிப்பிடப்படும்.

மனிதனின் குறைபாட்டுத் தேவைகள் நிறைவு செய்யப்படும்போதே வளர்ச்சித் தேவைகளை நோக்கி முன்னேற்றம் காணப்படும். குறைபாட்டுத் தேவைகள் நிறைவு செய்யப்படாத இடத்து, வளர்ச்சித் தேவைகளை நோக்கி முன்னேற விடாது குறைபாட்டுத் தேவைகளை நோக்கி ஒருவன் பின்னிழுக்கப்படுவான்.

மனிதனின் திறமைகள் முழுமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படும் நிலையில் அவன் தனக்குள் முழுமை பெறுகின்றான். இதுவே தன்னியல் நிறைவுத் தேவை எனப்படுகிறது. இத்தன்னியல் நிறைவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டோர் ஒரு சிலரே.

மாஸ்லோவின் ஆய்வு (1970) தன்னியல் நிறைவு பெற்றவர்களின் குணவியல்புகளை இனங்கண்டு கொண்டது.

இந்த இயல்புகளாவன:-

? தம்மைப் பற்றியும் பிறரைப் பற்றியும் புற உலக யதார்த்தம் பற்றியும் யதார்த்தமான புலக் காட்சி கொள்ளல்

? சுயமாகத் தன்னூற்றுக் கொண்டு தொழிற்படுதல்

? செயற்கைப் பண்பு இல்லாமல் நடத்தைகளிலும் சிந்தனைகளிலும் ஒளிவு மறைவற்றிருத்தல்

? நாளாந்த வாழ்க்கையில் நேர் அம்சங் களைக் கண்டு இன்புறுதல்; நயத்தல்

? புதிய ஆக்கத்தை உருவாக்குதல்

? ஆக்க மலர்ச்சி மிக்கவர்களாக விளங்குதல்

? ஏனையோருடன் இசைவான/இங்கிதமான தொடர்பு பேணுதல்

? தம்மையும் பிறரையும் அந்தந்த நிலைகளிலேயே ஏற்றுக் கொள்ளல்

இவ்வாறான குணவியல்புகளைக் கொண்டு, ஒருவர் தனது முழுச் சக்தியை எய்துவதற்கான தேவையாகத் தன்னியல் நிறைவுத் தேவை விளங்குகின்றது.

மாஸ்லோவின் கொள்கை அடிப்படையில், மனிதனது பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி




செய்தலானது, அவனின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவும். குறிப்பான சில துறைகளில் மாஸ்லோவின் கொள்கை உயர் செல்வாக்கைச் செலுத்துகின்றது. உதாரணமாக வர்த்தக உலகில், ஊழியரின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் தொழில் திருப்தியை அதிகரிக்கவும் மாஸ்லோவின் கொள்கை உதவுகிறது.

ஆயினும் மாஸ்லோவின் கொள்கை மீது பின்வரும் விமர்சனங்களும் முன்வைக்கப்படு கின்றன.

1. தேவைகளின் படிமுறை அமைப்பு உறுதியானதன்று.
2. ஒரு தேவை பூர்த்தி செய்யப்பட்ட பின்பே மறு தேவை தோன்றும் என்பது யதார்த்த மானதன்று.
3. ஒரு செயலுக்கு ஒரு தேவை மட்டும் இருக்கும் என்று கூறமுடியாது.
4. இக்கொள்கையின் அம்சங்களை அநுபவ ரீதியாகச் சோதித்தல் கடினமானது.
5. மனிதத் தேவைகள் நனவு நிலையில் மாத்திரமன்றி நனவிலி நிலையிலும் தோன்றலாம்.

எது எவ்வாறாயினும் மனிதத் தேவைகள் நிறைவு செய்யப்படுதல் அவனது ஆளுமை வளர்ச்சிக்கு உதவும் என்பது மறுதலிக்கப்பட முடியாததாகும். உளச்சிகிச்சை, சீர்மியம், பெற்றோர் நடைமுறைகள் போன்றவற்றில் மனிதாய உளவியற் கருத்துக்கள் தொடர்ந்தும் செல்வாக்கு செலுத்தி வருகின்றன. உளநலம்மிக்க ஆளுமை, படைப்பாக்கத்திறன் என்பவை குறித்த விஞ்ஞான ரீதியான ஆய்வுகளையும் மனிதாய உளவியற் கருத்துக்கள் தூண்டியுள்ளன.

உசாத்துணை

1) Hocken bury, D.H & Hockenbury, S.E(1997). Psychology Newyork,NY : Worth Publishers

2) Malim.T & Birch, A(1998). Introductory Psychology London: Macmillan press.

3) Weiten,W (2000) psychology:Themes & Variations (4th ed). Belmont,CA: Wadsworth publications.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்

## Institution of Professional Development for Teachers

IPDT

எமது நிறுவனம் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர் களை வலுவூட்ட பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

* சமகாலக்கல்வித் தேவைகள், சவால்களுக்குப் பொருத்தமான செயலமர்வுகள், பயிற்சிப்பட்டறைகள்.

* கல்வியியல் ஆய்வுகளுக்கான பிரத்தியேக வழிகாட்டல்கள், ஆய்வு செயற் திட்ட முன் மொழிவுகளுக்கான ஆலோசனைகள்.

* கல்வி, முகாமைத்துவ பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நிபுணத்துவ ஆலோசனைகள்.

* முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வலுவூட்டல்கள்.

* இளைஞர், யுவதிகள், பிரச்சினைகளுக்குட்பட்டோருக்கான ஆலோசனை வழி காட்டல் சேவைகள் (தனி - குழு).

* பொது மக்களுக்கான கல்வி - கலாசார - பண்பாட்டு விழிப்புணர்வுகளுக்கான தெரு வெளி நாடகங்கள், குறுந்திரைப்பட வெளியீடுகள், நாடக ஆற்றுகைப்பயிற்சிகள்.

* கல்வி விழிப்புணர்வு சார் ஆவண - செய்திப்படங்கள் உருவாக்கல், பயிற்சி யளித்தல்.


இவ் அனைத்துச் சேவைகளுக்கும்
பணிப்பாளர்
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்
528, பலாலி வீதி,
திருநெல்வேலி

T.P. No. 0779360607
E.Mail: thanapalanabi@gmail.com



இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org